


கல்கி
ALKI
2.64
60
ாசு
விஜயா


மக்ளீன்ஸ்
உபயோகித்து
அந்த அதிகமான வெண்மையைப்
பாருங்கள்!
இவ்விதம் சோதியுங்கள்
1. உங்கள் நாக்கினால் பற்களைத் தடவுங்கள். அவற்றின் மேலுள்ள பாசியை உணர்கிறீர்களா?
2. இப்போது, மக்ளீன்ஸ் பற்பசைகொண்டு பற்களைத் தேயுங்கள். அது பற்களைச் சுத்தம் செய்து, வெண்மையாக்கிக் காப்பதுடன் உங்களுக்குப் புதுமையான உணர்ச்சியை அளிப்பதை உணர்வீர்கள்.
3. அந்த அதிகமான சுத்தத்தை உணருங்கள்... அந்த அதிகமான வெண்மையைப் பாருங்கள்.
Macleans
மக்ளீன்ஸ் பழுப்பு நிறமடைந்த
பற்களை வெண்மையாக்குகிறது!

கல்கி பொருளடக்கம்

சோபகிருது, மாசி 11 ★ பிப்ரவரி 23

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



பட விளக்கம் 17ம் பக்கம்



மலர் 23 ✿ தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் ✿ இதழ் 30

வீம்பு செய்வதால் வழி பிறக்காது

காச்மீர விவகாரத்தைப் பாகிஸ்தான் மீண்டும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் கிளப்பியிருப்பதைக் கண்டு இந்திய சர்க்கார் மிகவும் எரிச்சல் கொண்டிருக்கிறது. 'பாகிஸ்தான் பழைய கதையையே திரும்பத் திரும்பப் படிக்கிறது' என்று கூறித் தானும் தனது பழைய கதையையே திரும்பப் படித்துக் கொண்டிருக்கிறது.

பாகிஸ்தானின் வாதம் நியாயமானது என்று யாரும் சொல்லவில்லை அதற்கு அப்படியே நாம் இணங்கிவிட வேண்டும் என்றும் யாரும் கருதவில்லை. என்றாலும் அதே சமயத்தில் நாமும் விட்டுக் கொடுக்காமல் குரங்குப்பிடியாகப் பழைய கருத்தையே பிடித்துக் கொண்டிருப்பது பிரச்னை தீர வழியாகாது. காச்மீரப் பிரச்னை தீராமல் போனால் சின அபாயத்தை இன்னும் பெரிதாக்கவே அது வழியாகும்.

'பாகிஸ்தானின் வாதத்தை நாம் நிச்சயம் கேட்க மாட்டோம்; நம் வாததையும் அவர்கள் நிச்சயம் கேட்க மாட்டார்கள்; அவர்கள் பக்கம் மேல் நாட்டு வல்லரசுகள் இருக்குமானால் நம் பக்கம் ருஷியா இருக்கவே இருக்கிறது. எனவே யாருடைய கட்சியும் ஒருபோதும் உலக அரங்கில் வெற்றி பெற முடியாது' என்ற முட்டுக்கட்டை நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது மிகவும் வருந்தத்தக்கது. மாற்று உபாயங்களைப்பற்றி நாம் நிச்சயமாகச் சிந்தித்தேயாக வேண்டும். பிரச்னையை நிரந்தரமான ஒரு வியாதியாகச் செய்வது ராஜ நீதியல்ல.

காச்மீரம் என்பது இந்தியாவுக்கோ, பாகிஸ்தானுக்கோ சொந்தமான வயற்காடு அல்ல. இது ஒரு சொத்தைப் பற்றிய வியாஜ்யம் அல்ல. காச்மீரம் ஒரு நஞ்சை வயலல்ல. ஒரு மக்கட் கூட்டம். அங்குள்ள மக்களின் சுதந்திரத்தை மதித்து அவர்கள் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட ஏதேனும் ஒரு வழியை நாம் கண்டுபிடித்தேயாக வேண்டும்.

காச்மீரப் பிரச்னை குறித்து என்ன மாற்று யோசனை சொன்னாலும் அது துரோகமாகக் கருதப்படுகிறது. இந்திய அரசாங்கத்தின் கொள்கையை ஒரு சமய லிங்கமாக்கி அதைப் போற்றியே பத்திரிகைகள் யாவும் கோஷ்டி கானம் செய்கின்றன. சமாதானத்தை விரும்புகிறவர்களும் காச்மீர மக்களின் கருத்துச் சுதந்திரத்தை மதிக்கிறவர்களும் இந்தப் போக்கை ஏற்பதற்கில்லை. ஆனால் அவர்களும் வாய் மூடியே வருகிறார்கள். யாருமே யோசனை தெரிவிக்கத் தயங்கும் வேளையில் சமநிலையில் நின்று பிரச்னைகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் பிரபல பத்திரிகை நிருபர் ஸ்ரீ பெனகல் சிவராவ் அவர்கள் தைரியமாக ஒரு கருத்து தெரிவித்தார். காச்மீரத்தைத் தனியொரு சுதந்திர நாடாக்கி இந்தியா - பாகிஸ்தான் இரண்டும் வல்லரசுகளோடு சேர்ந்து அதன் எல்லைகளைக் காக்கும் முறையில் ஓர் அமைப்பை ஏற்படுத்த இயலுமா என்று ஆராய்ந்து பார்க்குமாறு அவர் சொன்னார். நாளது வரையில் அந்த யோசனையைச் சர்க்காரோ மக்களோ, பத்திரிகைகளோ கவனித்ததாகவே தெரியவில்லை.

சர்க்காரும் மக்களும் பத்திரிகைகளும் முன்பு சொன்னதையே மீண்டும் மீண்டும் ஒப்பிப்பதைத்தான் காண்கிறோம். இப்படி ஒப்பிக்கும் பாடங்களில் ஒன்று அமெரிக்காவும்

பிரிட்டனும் நம் பட்சத்தில் பேசவில்லை என்ற குற்றச்சாட்டு. இவ்வாறு குற்றம் சாட்ட நமக்கு என்ன உரிமை? 'நடு நிலைமை' என்றும் 'கூட்டு சேராமை' என்றும் கோஷிக்க இந்தியாவுக்கு மட்டும்தானு ஏக போக்கியம்? சுதந்திர வாழ்வு வேண்டுமா, சர்க்கார் சர்வாதிபத்தியம் வேண்டுமா என்ற பெரும் பனிப் போரில் நாம் 'எந்தக் கட்சியும் சேர மாட்டோம்' என்று நடுச் சுவர் மேல் நிற்கிறேம். இரண்டு தரப்பினரிடமிருந்தும் உதவி பெறுகிறேம்; 'நடு நிலைமை நல்ல லாபம் போடுகிறது' என்று வெட்கமில்லாமல் சொல்கிறேம். அப்படியிருக்க, தங்களுக்கு முக்கியத்துவம் இல்லாத ஒரு பிரச்னையில் மேற்கு வல்லரசுகள் நம்முடன்தான் துணை நிற்க வேண்டும் என்று வற்புறுத்த நமக்கு ஏது உரிமை?


தன் குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் காண்கிற்பின்
என் குற்றம் ஆகும் இறைக்கு

என்ற பொய்யாமொழியை நம் ஆட்சியாளர் அறியவில்லை. நமக்கு ருசியாக இருக்கிற கொள்கையை மற்றவர் கடைப்பிடிக்கும்போதுமட்டும் அதை விஷமாகப் பாவிப்பது நேர்மையல்ல. ஆனால் இப்படிச் சொல்வதும் 'தேசத் துரோக'மாகக் கருதப்படக் கூடும். திறந்த மனப்பான்மையோடு காச்மீரப் பிரச்னையை நாம் அணுகி நம்முடைய வட எல்லையை நல்ல முறையில் கம்யூனிஸ்ட் சீனவின் அபாயத்திலிருந்து காக்கும் காலம் எப்போது வருமோ?


புதுத் தலைமுறைக்குத் தெரியாது

"சுதந்திரமாகத் தொழில் புரியும் முறையைப் பற்றி நாற்பத்தைந்து வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களுக்கு எதுவுமே தெரிந்திருக்க ஏது இல்லை. இரண்டாவது உலக யுத்தத்துக்கு முன்பு இந்தியப் பிரஜைகளுக்கெல்லாம் சுதந்திரத் தொழில் உரிமை உறுதியாக இருந்தது. அயல்நாடுகளுடன் நமது ஏற்றுமதி, இறக்குமதித் தொடர்பும் சமமாகஇருந்தது. பிறகுதான் சர்க்கார் கட்டுப்பாடுகள் ஏற்பட்டன. அதன்பின் அயல்நாட்டு வியாபாரத்தை மட்டும் சர்க்கார் கண்காணிக்காமல் எல்லாத் தொழிலுக்கும் பெர்மிட்—லைசென்ஸ் வழங்கத் தொடங்கிவிட்டது. எனவே பொருளாதாரத்தைச் சர்க்காரே நிர்வகிப்பது இன்றைய தலைமுறைக்குச் சகஜமாகவே தோன்றுகிறது" என்று ராஜாஜி சமீபத்தில் எடுத்துக்காட்டி எழுதினர்.

சுதந்திரக் கட்சியின் மையமான போராட்டம் எதற்கு என்பதையே இன்றைய தலைமுறையினர் புரிந்து கொள்ள இடமில்லை. சர்க்கார் கண்காணிப்பில் தொழில் அபிவிருத்தி எப்படிச் சாமானிய மக்களுக்குப் பயனுகாத முறையில் செல்கிறது என்பதையும், அதனுல் ஆள்கிற கட்சி எப்படி ஏராளமான லாபங்களை அடைகிறது என்பதையும் இன்றைய தலைமுறையினருக்கு எடுத்துக் காட்டி, சுதந்திரமாகத் தொழில் நடைபெறும் நாடுகள் எப்படி சுபிட்சமடைந்து வருகின்றன என்பதையும் விளக்க வேண்டியதே இன்று சுதந்திரக் கட்சித் தொண்டர்களின் தலையாய பணி.



ஊர் வம்பு




என்ன சேதி?

ஸுப்ரீம் கோர்ட்டுக்கும் மேலே...

பஞ்சாப் முதன் மந்திரி ஸ்ரீ கெய்ரோன், ஆந்திர முதன் மந்திரி திரு சஞ்சீவ ரெட்டி ஆகியோர் பச்சைப் பாரபட்சமாக நடந்ததாக இந்நாட்டின் தலைமை நீதி ஸ்தலமாகிய ஸுப்ரீம் கோர்ட் தீர்ப்புக் கூறி விட்டது. அதை மதித்து நடக்க வேண்டியதுதான் இந்நாட்டு மக்கள் எல்லோருடைய கடமையாகும்; முக்கியமாக, சர்க்காரானது ஸுப்ரீம் கோர்ட் தீர்ப்புக்கு மரியாதை அளித்தே ஆகவேண்டும். ஆனால் இன்று அரசாட்சி நடத்துகிற காங்கிரஸ் கட்சி இந்தக் கட்டுப்பாட்டை உதறி விட்டு, ஸுப்ரீம் கோர்ட் தீர்ப்புக்குப் பிறகும் தமக்கு வேண்டிய சில வழக்கறிஞர்களைக் கொண்டு விவகாரங்களை ஆராயச் செய்து, அவர்களுடைய முடிவுகளை வெளியிட்டுள்ளது. இது அரசாளும் கட்சிக்கு மட்டும் அவமானமல்ல. தலைமை நீதிமன்றத்துக்கும் மேலாகத் தங்களைக் கருதி, ஸுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்புக்குப் பின் இந்த விவகாரங்களை ஆராய இசைந்த வழக்கறிஞர்களுக்கும் இது அவமானமாகும். ஒருதலைப்பட்சமாக ஒரு கட்சிக்கு வக்காலத்துப் பெற்று விவகாரங்களை ஆராய்ந்த இந்த வழக்கறிஞர்களின் 'தீர்ப்பை'ப் பத்திரிகைகளில் காணும்போது, நம் நாட்டில் நீதி உணர்ச்சி இவ்வளவு அதளபாதாளத்துக்குச் சென்று விட்டதா என்ற வேதனை உண்டாகிறது. காங்கிரஸ் கட்சி இதனால் தனது மாசைக் களைய முடியாது. அது தனக்கு மேலும் இழுக்கு உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. நீதி உணர்வு என்பது அரசியல் கொள்கைகளுக்கெல்லாம் மேலானதல்லவா?

"வேண்டாம் உன் உதவி!"



தர்மத்துக்குத் தடை

குறிப்பிட்ட ஒரு சமூகத்தின் நலனுக்காகச் செய்யப்படும் தான கைங்கரியங்களுக்கு வருமான வரி விலக்கு அளிக்க முடியாது என்று இந்திய சர்க்கார் மறுத்திருப்பது வருத்தத்துக்குரியது. ஒவ்வொரு சமூகத்துக்கும் தனித் தனியாகச் செய்யப்படும் தர்மங்கள் எல்லாம் சேர்ந்தால் மொத்தத்தில் எல்லா வகுப்புக்களுமே நலன் பெறும்—அதாவது நாடே நலன் பெறும்—என்ற சிறிய கூட்டல் கணக்கு அரசாங்கத்துக்குப் புரியாமல் போனது விந்தை. தங்களுக்கு நெருக்கமாக உள்ளவர்களாகச் சிலரைக் கருதி அவர்களது நலனுக்காக ஒவ்வொரு வகுப்பினரும் தான தர்மம் செய்வது இயற்கைக்கு மிகவும் ஏற்றதே. இதை மறுக்கும் 'சமதர்ம' சித்தாந்தத்தால் இப்போது நடக்கிற தர்ம கைங்கரியமும்கூடக் குன்றிப் போக இடமுண்டு. வருமான வரி விலக்குக் கிடையாது என்ற ஒரே காரணத்தால் ஒவ்வொரு சமூகத்தில் உள்ள தனவந்தர்களும் விசால மனப்பான்மை பெற்று, எல்லாருக்கும் பொதுவான தர்மப் பணிகள் செய்வார்கள் என்று அறிவுள்ள எவரும் எண்ண மாட்டார்கள். சர்க்காரின் போக்கு நீடித்தால் பெரும்பாலோர் தர்மம் செய்வதையே நிறுத்தி விடுவார்கள். நடைமுறைகளைப் பற்றிச் சிறிதும் கருத்தில்லாமல் லட்சியவாதம் செய்வதில் பயன் கிடைக்காது.

தோல்வியை ஒப்புக் கொள்ளட்டும்

ராஜஸ்தானத்தில் மஹுவா தொகுதியில் மந்திரிமார்கள் சகலரும் வீட்டுக்கு வீடு ஏறி இறங்கி வோட்டுக் கேட்டும் அங்கு சுதந்திரக் கட்சி அங்கத்தினர் ஸ்ரீ மாந்தாதா சிங் அவர்களையே மக்கள் தேர்ந்தெடுத்து விட்டார்கள். இது மஹுவா மக்களுக்குப் பெருமை தருகிறது. இந்தத் தோல்விக்கும் ஓர் 'அருமையான' காரணம் கற்பித்து விட்டனர் காங்கிரஸார். 'எல்லாம் வகுப்புவாதம் செய்த காரியம்' என்கின்றனர். வகுப்புவாத மந்திரத்தின் ரிஷியாக இருப்பது காங்கிரஸ் கட்சி தான். வகுப்புவாதத்தை வைத்துத் தேர்தல் நடத்தியும் தோற்றுப்போய் இப்போது அந்த வகுப்பு உணர்ச்சியே தோல்விக்குக் காரணம் என்று வாதிக்கப் பார்க்கிறார்கள்.

எங்கேனும் காங்கிரஸ் வெற்றி பெற்று விட்டால் மக்களைப் பெருமைப்படுத்திப் பேசுவதும், எதிர்க் கட்சிகள் வெற்றி பெற்றால் மக்கள் வகுப்புவாதத்துக்கு இரையாகி விட்டதாகப் பேசுவதும் காங்கிரஸ்காரர்களின் மந்திரமாகி விட்டது. தோல்வியைத் தோல்வியாக ஒப்புக்கொள்ளும் துணிவு அந்தக் கட்சிக்கு இருந்தால்தான் தோல்விக்கான காரணங்களை ஆராய்ந்து பார்த்துத் தன்னுடைய பொதுநல் கொள்கைகள் பலவற்றைச் சீர்திருத்திக் கொண்டிருக்குமே!

ரஸிக சிகாமணி

டி. எல். வேங்கடராம அய்யர்

வித்தையைத் தெய்வமென உபாஸித்தது நம்முடைய தேசம். மன்னனுக்கு மேல் மாசறக் கற்றோன் என்பது ஆன்றோர் வசனம். இந்த மனப்பான்மையினால்தான், பாரத தேசத்தில் கல்வி, வாழையடி வாழையாக வளர்ந்தது. இப்போது வித்தைக்கு முன்போல் ஜனங்கள் தெய்விகமான மதிப்புத் தந்து ஆதரிக்கிறார்களா என்றால், பதில் சொல்லத் தயங்கத்தான் வேண்டும். அரசியல் துறையில் இறங்கி, அதிகார மினுமினுப்பைப் பின்பற்றி, அதனால் கண் பறிக்கப்பட்டு வித்தையைப் பார்க்க முடியாமல் தடுமாறுகிறவர்கள் பெருகி விட்டனர். ஆனால் இந்தக் காலத்திலும் வித்தையையே லட்சியமாகக் கொண்டு அதை உபாசிப்பவர்கள் ஒருசிலர் உள்ளனர். இம்மாதம் 12-ந் தேதி சஷ்டியப்த பூர்த்தி கொண்டாடிய ஸ்ரீமான் கி. சந்திரசேகரன் அவர்களில் ஒருவர்.

அவர் புகழ்வாய்ந்த ஒரு குடும்பத்தில் பிறந்தவர். சட்ட அறிவிலும், ராஜ்ய நிர்வாகத்திலும் சிறந்தவரும், தேசத்துக்காகவும் கல்விக்காகவும் தர்மத்துக்காகவும் உடல், பொருள், ஆவியைத் தியாகம் செய்தவருமான மகா புருஷர் ஸ்ரீ வி. கிருஷ்ணஸ்வாமி அய்யரின் புதல்வர் ஸ்ரீ சந்திரசேகரன். ஆங்கிலத்திலும் சம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் விற்பன்னரும், சட்ட சபை அங்கத்தினரும், ஹிந்து மதத்துக்கும் தர்மத்துக்கும் சிகரம் போல் விளங்குபவருமான தர்மரக்ஷாமணி ஸ்ரீ கே. பாலசுப்ரமணிய அய்யர் அவர்களின் இளைய சகோதரர் ஸ்ரீ சந்திரசேகரன். தாமும் அதே போல் மூன்று மொழிகளிலும் தேர்ந்த பயிற்சி உள்ளவர். காவிய நாடகங்களையும், கலைகளையும் நன்றாய்க் கற்றவர். கர்நாடக சங்கீதத்திலும் பரதநாட்டியத்திலும் ஆழ்ந்த ஈடுபாடுள்ளவர். அவர் பல ஆண்டுகளுக்கு முன்பு ரேடியோவில் பாடிக்கூட இருக்கிறார் என்பது பலருக்கு ஆச்சரியமாயிருக்கும். ஓவியத்திலும் சிறந்தவர் ஸ்ரீ சந்திரசேகரன். என்னோடு சேர்ந்து அவரும் சம்ஸ்கிருத நாடகங்களில் நடித்திருக்கிறார் என்பது வாசகர்களில் பலருக்குப் புதுமையாயிருக்கும். அவர் தமிழிலும், ஸம்ஸ்கிருதத்திலும், ஆங்கிலத்திலும் எழுதியிருக்கும் கட்டுரைகள் பல. ஆழ்ந்த உட்பொருளுக்கும், லளிதமான பதங்களுக்கும், சரளமான நடைக்கும் அவரது கட்டுரைகள் பெயர்போனவை. ஸ்ரீ சந்திர சேகரனின் பலவிதச் சிறப்புக்கள் எல்லாவற்றுக்கும் மேலாகச் சொல்லவேண்டியது அவரது உயரிய ரசிகத் தன்மையாகும். ரஸிக சிகாமணி என்ற விருது அவருக்கு முற்றிலும் பொருந்தும்.



ஸ்ரீ கி. சந்திரசேகரன்

நல்ல கவிதையையும், நல்ல கலா விந்நியாசங்களையும், அவற்றின் நுட்பங்கள் புரிந்து ரஸிப்பதென்பது ஒரு தனித்திறன். சிலரிடம்தான் அதைப் பார்க்கலாம். கற்றவர் பலர் இருந்தும் இலக்கியத்திலேயே மனம் சிக்க, ரஸத்தின் அருகிலே வராமல் நின்றுவிடுவார்கள் பெரும்பாலோர். சக்கையைப் பிடித்துக் கொண்டு சாற்றை விட்டுவிடுவார்கள். ஸ்ரீ சந்திரசேகரன் அப்படியல்ல. ரஸத்தை அநுபவிப்பார். விரஸத்தை விட்டுவிடுவார். காவியங்கள், கலைகள் இவைகளை விமர்சனம் செய்வதில் நிபுணர். இது குணம், இது தோஷம் என்று நன்றாக உணர்ந்தவர். எல்லாம் நன்றாய் இருக்கிறது என்று பாராட்டி விடுவது ரஸிகத்தன்மையாகாது. ஸம்ஸ்கிருதத்தில் தோஷக்ஞன் — அதாவது குறையை அறிந்தவன் தான் — வித்வான் என்பார்கள். ஆனால் அந்தக் குற்றத்தையே பெரிதாக்குவது ரஸிக குணம் அல்ல. குற்றத்தையும் திருத்திக் கொள்கிற முறையில் அழகாக எடுத்துச் சொல்லி, குணத்தையும் மனதாரப் பாராட்டுவதுதான் ரஸிக குணம். இந்தக் குணம் ஸ்ரீ சந்திரசேகரனிடம் பூர்ணமாக உள்ளது. என் விஷயமாகவே ஸ்ரீ சந்திரசேகரன் குறை — நிறை இரண்டையும் சொல்லியதுண்டு. இரண்டுமே மிகவும் சரியாக இருப்பதாக நான் உணர்ந்திருக்கிறேன். சத்தியத்தைத் தவிர வேறெதையும் அவரது விமரிசனத்தில் காண இயலாது. தமது உண்மையான அபிப்பிராயத்தை உள்ளத்துக்குக் கள்ளமின்றிச் சொல்லும் தீரம்தான் அவருக்கு விசேஷமான கௌரவத்தை அளித்திருக்கிறது. நன்றாய் இருப்பதை உடனே பாராட்டி விடுவதற்காக அவர் துடிக்கும் துடிப்பைப் பார்த்தால்தான் அவரது சிறந்த குணம் தெரியும்.

அவர் பங்களாவுக்கு ''ஸஹ்ருதயா'' என்று பெயர். தமக்கு ஒத்த இதயம் உள்ள ரசிகர்களிடம் வயதையோ அந்தஸ்தையோ பாராமல் ஸஹ்ருதயராகப் பழகும் பெரிய மனம் படைத்தவர் ஸ்ரீ சந்திரசேகரன். எனவே தான் 'அவர் பண்பாளர் ஜாதியைச் சேர்ந்தவர்; வேறெந்தப் பிரிவிலும் வராதவர்' என்று நான் சொல்வதுண்டு.

ஸ்ரீ சந்திரசேகரன் தர்ம மார்க்கத்தை விட்டுச் சற்றும் விலகமாட்டார். லலித கலைகளிலும் கலைஞர்களிடமும் மிகவும் தீவிரமாக ஈடுபட்டிருப்பவர்கள் அவப்பெயருக்கு ஆளாகிவிடுவதுண்டு. ஸ்ரீ சந்திரசேகரனோ வாழ்நாள் முழுதும் கலைத் துறையில் அமிழ்ந்திருந்தும் சீலத்துக்குப் பேர் எடுத்தவர். இவ்வாறு அருங்குணங்கள் பல பொருந்திய ஸ்ரீ சந்திரசேகரனுக்கு ஸர்வேச்வரன் ஆயுள், ஆரோக்கியம், ஐச்வர்யம் எல்லாவற்றையும் பல்லாண்டு பல்லாண்டுகளுக்கு அளிக்கவேண்டுமெனப் பிரார்த்திப்போமாக!

போகிற போக்கில்....

நகரசபைத் தேர்தல் முடிவுக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இரவு நெடு நேரம் வரை முழக்கங்களும், வீர கர்ஜனைகளும் கேட்டவண்ணமாக இருக்கின்றன. பேச்சைக் காரியத்திலும் காட்டக் கூடிய வாய்ப்புள்ளவர் ஆளும் கட்சியினர்தான். தேர்தல் பிரசாரத்தின் போது, அவர்களது பேச்செல்லாம் செயலாக இருந்தால் எவ்வளவு சிறப்பாக இருக்கும் என்றே நினைவு ஓடிற்று.

காளை மாட்டுச் சின்னத்தின் புகழைப் பற்றிப் பேசிய ஒரு பிரமுகர் சொன்னார்:

''நட்சத்திரம், உதயசூரியன், பிறைச் சந்திரன் எல்லாம் கண்ணுக்கு எட்டாத தூரத்தில் வான மண்டலத்தில் சஞ்சரிப்பவை. காளைமாடுதான் மனிதனோடு சேர்ந்து பூமியில் உழைப்பது.''

காளை மாட்டைப் பற்றி நண்பர் கூறியது உண்மை என்பதில் சந்தேகமில்லை. ஆனால் காளை, சண்டிக் காளையாக ஆகிவிட்டால் என்ன செய்வது? வைக்கோலுக்கு நஷ்டம், வழிப்போக்கருக்கும் ஆபத்து. இதைத்தான் எதிர்க் கட்சிகள் கூறுகின்றன.

வான மண்டலத்திலுள்ள மூன்று சின்னங்களும் தன்னலம் கருதாதவை என்று கூட்டணிக்காரர் ஒருவர் விளக்குகிறார்:

''பொழுது புலர்ந்தால் சூரியன் தானே உதயமாகிறான். யாரும் அவனுக்குத் திரியோ மற்ற வசதிகளோ அளிக்க வேண்டியதில்லை. சூரியன் மறைந்ததும் வானில் நட்சத்திரங்கள் தாமாகவே மினுக்கிட்டுத் திசை காட்டுகின்றன. அதே போலப் பிறைச் சந்திரன் தானாகவே உதிக்கிறான். இவை மூன்றும் தன்னலங் கருதாது தமது கடமையாற்றும் சின்னங்கள். காளை இப்படியா........?''

ஃ ஃ ஃ

காங்கிரஸ் தலைவர்கள்மீது வரும் லஞ்சப் புகாரை விசாரிக்க ஒரு சப் — கமிட்டி இருந்து வந்தது. இந்தக் கமிட்டி ஆறு மாத காலமாக ஆயுசோடு இருந்ததே தவிர உருப்படியாக ஒரு காரியமும் செய்யவில்லை என்பதை நண்பர்கள் அறிவார்கள். இந்த உண்மையைக் காங்கிரஸின் புதுத் தலைமையும் உணர்ந்து பழைய சப்–கமிட்டியைக் கலைத்து ஒரு புதுக் கமிட்டியைப் போட்டிருக்கிறதாம். இதில் வக்கீல்கள் இருப்பார்களாம். இந்தக் கமிட்டி லஞ்சத்தைக் கண்டு பிடிக்குமென நம்பப்படுகிறது. நம்பிக்கை வீணாவதில்லை என்பது பொதுமறை. ஆனால் நம்பிக்கை பலிதமாவதற்குக் காலம் சற்று அதிகமாகும். இந்தக் காலத்துக்குள் லஞ்சம் வாங்கியவர் பேரன் பேத்தி எடுத்துக் காலகதி அடைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எனவே, புதுக் கமிட்டி அமுலுக்கு வந்தாலும் விவகாரம் எளிதில் தீராது என்பது உறுதி. விவகாரம் தீர வேண்டும் என்றால் ஒரே வழிதான் உள்ளது. அதாவது லஞ்சம் எதனால் ஏற்படுகிறது என்று பார்க்க வேண்டும். லைசென்ஸ், பெர்மிட், கோட்டா, இவற்றால்தான் ஏற்படுகிறது. ஆகவே, இக்கோட்டா முறையைவிட்டு ஒழிக்க வேண்டும். முடியாது என்றால், கோட்டா வழங்கும் பொறுப்பைக் காங்கிரஸ் தொடக் கூடாது. ராஜாஜி சொல்லுவது போல் தனி போர்டு இருந்து கவனிக்க வேண்டும். இப்படிச் செய்தாலொழிய, எத்தனை கமிட்டிகள் போட்டாலும் காரியம் நடைபெறாது. புதுப் பானையில் பழைய கள் என்றுதான் ஆகும்.



திரு வி. டி. கிருஷ்ணமாச்சாரியார்

எண்பதாண்டுகளுக்கு மேலாகச் செல்வாக்குடன் வாழ்ந்த ஸ்ரீ வி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் மறைந்து விட்டார்கள். அவர் அரசியல் வாதியல்ல; நிர்வாகத் துறையில் தமது பொது வாழ்வைத் தொடங்கி நிர்வாகத் துறையிலேயே இறுதி வரையில் இருந்தவர். பரோடா திவானாக இருந்து அவர் ஆற்றிய அரும்பணிகளுக்கு அந்த சம்ஸ்தானம் முழுதும் இன்றும் நினைவுச் சின்னங்கள் உள்ளன. கடைசியில் திட்டக் கமிஷனின் உபதலைவராக நீண்ட காலம் இருந்தார் அவர். ''நல்லவர், திறமைசாலி, திட்டவட்டமாகச் செயல்புரிபவர், நம்பகமானவர், மதிப்புக்குரியவர்'' என்றெல்லாம் ராஜாஜி ஸ்ரீ வி. டி. கே. அவர்களுக்குச் சூட்டும் அடைமொழிகளையே நமது அஞ்சலி மொழிகளாக அவரது நினைவுக்கு அளிக்கிறோம்.


SARMA
ASTROLOGER

பட்டினத்துப் பேச்சு

— காசி —

உத்தரப் பிரதேசப் போக்குவரத்து மந்திரி ஜனாப் முஸாபர் ஹுஸேன், இரண்டு குறிப்பிட்ட ஊர்களுக்கிடையே பஸ்கள் விடும் பர்மிட்டைத் தமது மாமியாருக்கு அளித்தாராம்.

அவர், தாம் தமக்கு வேண்டியவர்களுக்கு அப்படிச் சலுகை காட்ட வில்லை என்றும், தமது 'விரோதிக்'கே அப்படிச் செய்ததாக வும் சமாதானம் கூறக் கூடுமல்லவா!

ஃ ஃ ஃ

இங்கிலாந்தில் ஆங்கிள்ஸே பகுதியிலுள்ள ஒரு ரயில்வே ஸ்டேஷனின் பெயர் வருமாறு:

வான் பர்பீல்க் விங்கிலாகா கரிஷ்வீர்ன்
டிராபிவில் வண்டி லிப்லி ஒகாகோகாச்,

என்பதாகும். இப்படி நிறைய எழுத்துக்கள் கொண்ட இந்தப் பெயருள்ள பலகையை யாரோ திருடிக் கொண்டு போய் விட்டார் களாம். உலகத்தில் இதுவே மிக நீளமான பெயர் என்று சொல்கிறார்கள்.

ஃ ஃ ஃ

கேரளத்தில் தைக்காடு என்ற இடத்தில் போலீஸ் பயிற்சிப் பள்ளிக்கூடத்தின் பக்கம் சென்று கொண்டிருந்த ஒரு ஸ்திரீ போலீஸ் உத்தியோகஸ் தரின் கழுத்தில் இருந்த சங் கிலியை யாரோ ஒரு திருடன் அடித்துக் கொண்டு போய் விட்டானாம்-பட்டப் பகலில்.



அந்த ஸ்திரீ போலீஸ் உத்தியோகஸ்தரின் திறமை யைப் பரீட்சிப்பதற்காக யாராவது வேறு போலீஸ் உத்தியோகஸ் தரே அப்படிச் செய்திருக்கக் கூடும்.

சீனப் புதிர் !

கம்யூனிஸ சீனாவில் ஒரு குடியானவனுக்கு ஒரு வருஷத்துக்கு 42 அங்குல நீளம், 26 அங்குலம் அகலமுள்ள ஒரே ஒரு துணிக்குப் 'பெர்மிட்' கொடுக்கப்படுகிறது. அவன் ஒரு துணியைக் குறைந்தது ஒன்பது வருஷ காலத்துக்கு உபயோகித்து வரவேண்டும்.

— டோக்கியோ செய்தி

கம்யூனிஸ்டு சீனா இலங்கைக்கு இரண்டரை கோடி கஜம் துணி கடனாகக் கொடுக்கும்.

— கொழும்புச் செய்தி

ஃ ஃ ஃ

அணுகுண்டு தயாரிப்பது சம்பந்தமாக அமெரிக்காவும், ரஷ்யாவும் சமரசமாகப் பேசி வருகிறதல்லவா! அதைப் பரிகசித்துச் சீனப் பிரதமர், குருஷேவும் ஜான்ஸனும் 'ஸயாமிஸ் இரட்டையர்' போன்றவர்கள் என்று கூறுகிறார்.

இந்த இரட்டையர்கள் உண்மையில் சீனக் காரர்கள். ஸயாமில் பிறந்தவர்கள். இவர் களுடைய உடல்கள் இருவரின் மார்புப் பக்கத்திலும் தசையால் சேர்ந்திருந்தன. இந்தத் தசையுடனேயே அவர்கள் 1811ம் வருடம் முதல் 1874ம் வருஷம் வரை வசித்து வந்தார்கள்.

இவர்களுள் ஒருவர் பெயர் எங், மற்றவர் பெயர் சாங். வளர்ந்தபோது ஐந்தேகால் அடி உயரம் இருந்தார்கள். இவர்கள் தங்க ளது இரண்டு உடல்களுடனேயே சேர்ந்தாற் போல் நடந்தார்கள், ஓடினார்கள், நீந்தி னார்கள், சாப்பிட்டார்கள், படுத்துத் தூங் கினார்கள்.

இவர்கள் ஐரோப்பாவிலும், அமெரிக்காவி லும், 'காட்சிப் பொருளாக'க் காண்பிக்கப் பட்டார்கள். பிறகு அவர்கள் அமெரிக்காவி லேயே அதன் பிரஜைகளாகத் தங்கி விட் டார்கள்.

முதலில் எங் ஒரு பெண்ணை விவாகம் செய்து கொண்டார்.

அந்தப் பெண்ணுக்கு ஒரு தங்கை இருந் தாள். அவளைச் சாங் விவாகம் செய்து கொண்டார்.

அவர்களுக்குக் குழந்தைகள் பிறந்தன!

இவர்களைப் பற்றி மார்க்ட்வெயின் நகைச் சுவை ததும்ப ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதன் முடிவில், "அடடா! ஒன்று சொல்ல மறந்து விட்டேனே. ஸயா மிஸ் இரட்டையரின் வயது முறையே 51, 53 ஆகும்" என்று வேடிக்கையாகக் குறிப் பிட்டிருக்கிறார்.

நியாயமாக, சீனப்பிரதமர் சூ- என் லாயையும் பாகிஸ் தான் தலைவர் அயூப்கானை யும்தான் ஸயாமிஸ் இரட் டையர்கள் என்று சொல்ல வேண்டும். அப்படி அவர்களைச் சொல்லுவதற்கு முன் சூ என் லாய் முந்திக்கொண்டு விட்டார்!

ஃ ஃ ஃ

லால் பகதூர் சாஸ்திரி காஷ்மீரத்துக்குச் சென்றபோது அங்கே குளிராயிருந்ததாம். "அதற்காக நான் பதினாறு சட்டைகளை உப யோகித்தேன். அதுவும் போதாமல் நேருஜி யின் கோட்டையும் போட்டுக் கொண் டேன்" என்று கூறினார்.

லால் பகதூர் இதுபோன்று எப்போதுமே பல சட்டைகளைத் தரித்துக் கொண்டிருந்தால் அவர் உடல் பார்ப்பதற்குக் 'கனிச'மாக இருக்கும். ஒரு சமயம் மதுரை ஸ்டேஷன் மாஸ்டர் அவரை அப்பால் தள்ளிவிட்டுப் போனாரே, அது போன்று நேராமலிருக்கும்.

மகாவீர் தியாகி நேருஜியின் சட்டைப் பையிலிருந்த பேனாவை எடுத்துக்கொண்டு "நான் வழக்கமாக ஜேப்படி செய்பவன்" என்று பெருமை பாராட்டிக் கொண்டாராம்.

அவர் இப்படி யெல்லாம் தமாஷாகக் கூறினாலும் கூடப் பல காங்கிரஸ்காரர்கள் இப்படிப்பட்ட காரியங்களைத்தான் பெரிய அளவில் செய்து வருகிறார்கள் என்று பொது மக்கள் நினைப்பது ஊர்ஜிதமாகக் கூடும்.

நடப்பவைதான் நம்புங்கள்

அறிவை விருத்தி செய்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் உங்களுக்கு இருக்கிறதா? வரவேற்கப்பட வேண்டிய விஷயம். ஆனால் இரவில் படுத்தபடியே கண் விழித்துப் படிப்பதினால் பலனில்லை. இரவு பத்து மணிக்கு மேல் படித்தால் நீங்கள் படித்ததில் ஐம்பது சத விகிதம்தான் மனத்தில் நிற்கும். பதினோரு மணி வரை படித்தால் அப்படிப் படித்ததில் எழுபது சத விகிதத்தை மறந்து விடுவீர்கள். நடுநிசிக்குப் பிறகு படித்தால் எந்த இடத்தில் படித்து நிறுத்தினோம் என்பதுகூட மறு நாள் காலையில் உங்களுக்குச் சிறிதும் நினைவிருக்காது!



ஃ ஃ ஃ

ஃ மனித மூளைக்கு ஏராளமான தகவல்களைச் சேமித்து வைத்துக் கொள்ளக் கூடிய ஆற்றல் அளவற்று இருக்கிறது. ஆனால் இந்த ஆற்றலை நாம் சரியானபடி பயன்படுத்திக் கொள்வதில்லை. பல விஷயங்களைக் கேட்டறிந்தும் படித்தும் கூட அவற்றை வெகு சீக்கிரம் நாம் மறந்து விடுவோம். இப்படி நேராதிருக்கக் கடிதம் வந்ததும் பதில் எழுதுவதுபோல நாம் கற்றதற்குப் பதில் தகவல் தெரிவிக்க வேண்டும். அதற்காக ரஷ்யாவில் இயந்திரங்களையே உருவாக்கி விருக்கின்றனர். பள்ளி அல்லது கல்லூரி மாணவன் இயந்திரத்தில் ஒரு சீட்டைச் செருகி விட்டு எதிரே திரையில் காணப்படும் கேள்வியையும் மூன்று பதில்களையும் ஆராய்ந்து பார்த்துச் சரியான பதில் என்று தனக்குத் தோன்றுவதற்கு ஏற்ப ஒரு பித்தானை அழுத்துகிறான். சரியான விடையாக இருந்தால் இயந்திரத்தின் திரையில் இன்னொரு கேள்வியும் பதில்களும் தோன்றுகின்றன. மாணவன் தவறு செய்தால் அதையும் இயந்திரம் சுட்டிக் காட்டி விடுகிறது!



ஃ ஃ ஃ

ஃ மேற்கு ஜெர்மனியில் டூயிஸ்பர்க் என்ற ஒரு நகரம் இருக்கிறது. இந்த நகரம் நாளுக்கு நாள் தாழ்ந்து போய்க்கொண்டே இருக்கிறது. இப்படி அங்குலம் அங்குலமாக நகரத்தைப் பொறி இயல் நிபுணர்கள் வேண்டுமென்றே தாழ்த்துவதை மக்கள் குதூகலத்துடன் வரவேற்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன தெரியுமா?

இரும்பு ஆலைகள் பலவற்றைக் கொண்ட இந்நகரில் வியாபாரப் போக்குவரத்தெல்லாம் ரைன் நதி மூலமாக நடைபெறுகிறது. நகரில் உள்ள ரைன் நதித் துறைமுகத்தில் பலப் பல பொருள்களுடன் சிறிய கப்பல்கள் வந்தவண்ணமாயிருக்கும். இந்தத் துறைமுகம்தான் நகரின் ஜீவநாடி. ஆனால் ரைன் நதியிலிருந்து பிரியும் கால்வாய்களை ஆழப்படுத்தி நேராக்கியதன் விளைவாக நதியில் நீரோட்ட வேகம் அதிகரித்து மண் அரிப்பு ஏற்பட்டு நதியின் நீர்மட்டம் தாழ்ந்து விட்டது. துறைமுகத்தில் கப்பல்கள் வந்து ஒதுங்க ஏற்ற ஆழம் இல்லாது போயிற்று. துறைமுகத்தை வேறு இடத்துக்கு மாற்றுவதா என்று யோசிக்கத் தொடங்கிய வேளையில் பொறி இயல் நிபுணர்கள் ஒரு நூதனமான லாபகரமான வழியைக் கண்டுபிடித்தார்கள். நகருக்கு அடியில் 75 கோடி ரூபாய் பெறுமானமுள்ள நிலக்கரி இருப்பதை உணர்ந்த அவர்கள் அந்த நிலக்கரியைத் தோண்டி மேலே எடுத்து வரத் தீர்மானித்தார்கள். நிலக்கரி அப்புறப்படுத்தப்படவே நகரமும் மெல்ல மெல்லக் கீழே தாழ்ந்து ஆற்றின் நீர் மட்டத்தை அடைந்தது. துறைமுகத்தில் கப்பல்கள் வந்து கரை தட்டாத அளவுக்கு நீர் நிறைந்தது.

1955ல் ஆரம்பமாயிற்று இந்த வேலை. இன்னமும் நடைபெறுகிறது. 1970 வரை நீடிக்கும். வீதிகள், வீடுகள், தொழிற்சாலைகள் உள்பட ஒன்றரை சதுர மைல் பரப்பளவுள்ள நகர்ப் பகுதி ஓரடி எட்டங்குலம் முதல் ஏழடி மூன்றங்குலம் வரை பல்வேறு அளவுகளுக்குத் தாழ்ந்து கொண்டிருக்கிறது. ஏழடி மூன்றங்குலம் வரை தாழ்ந்து விடப் போகிற பகுதிதான் துறைமுக வட்டாரமாகும்.

இதெல்லாவற்றையும் விடப் பெரிய அதிசயம் என்னவென்றால் இந்த நகரின் சாலைகளில் மோட்டார் கார்களின் நெருக்கத்தைத் தவிர்க்க ஒரு மைல் நீளமுள்ள ஒரு பாலத்தைக் கட்டினார்கள். இந்தப் பாலத்தின் இரு முனைகளும் பலமான அசைந்து கொடுக்காத நிலப் பகுதியில் ஊன்றியுள்ளன. இடையில் ஆறு மாபெரும் தூண்கள் உள்ளன. இந்த ஆறு தூண்களும் நகருடன் சேர்ந்து தாழ்கின்றன. அப்படித் தாழும் போது பாலம் தகர்ந்து விடுமே? இதைத் தவிர்க்க ஒவ்வொரு தூணுக்கும் மேலாகப் பாலத்தைத் தூக்கிப் பிடித்து உயர்த்தக் கூடிய சாதனங்களை அமைத்திருக்கிறார்கள். இவை முப்பது அங்குலம் வரை பாலத்தை உயர்த்தக் கூடிய சக்தி பெற்றுள்ளனவாம்! பொறி இயல் நிபுணர்கள் இரவும் பகலும் பாலத்தின் மீது ரோந்து சுற்றி வந்து இதனைக் கண்காணித்து வருகிறார்கள்.

ஃ ஃ ஃ

ஃ நம் வாழ்நாளில் நாம் ஒவ்வொருவரும் பல காரியங்களுக்காக உபயோகப்படுத்தும் மரத்தின் அளவு என்ன தெரியுமா? முழு வளர்ச்சிபெற்ற முந்நூறு மரங்கள்!



பெண்டிரின்
மேனியெழில் இரகசியம்!
மலபார் க்ளோரி சோப்
MALABAR GLORY SOAP

ஸ்வாமிஜியை மீரட்டுக்கு அழைத்து வந்தனர் உடனிருந்தோர். மற்ற பல குருபாயிகளும் சேர்ந்து கொண்டனர். ஸ்வாமிஜி தங்கியிருந்த தோட்டம் ஒருவாறு பழைய வராநகர மடம் போல ஆகிவந்தது. ஸ்வாமிஜிக்கு உற்சாகம் பிறந்து விட்டது. சம்ஸ்கிருத புராணங்களையும் இலக்கியங்களையும் படித்து விளக்கலானார். மீதப் பொழுது சங்கீதமும், நாம சங்கீர்த்தனமும், தியானமுமாகக் கழிந்தது.

கொஞ்சம் அறிவு ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று ஸ்வாமிஜிக்கு 'ருசி' பிறந்தது. அகண்டானந்தரைக் கொண்டு மீரட்டில் உள்ள நூல் நிலையம் ஒன்றிலிருந்து ஸர் ஜான் லுப்பக் என்பவர் எழுதிய புத்தகங்களையெல்லாம் வாங்கி வரச் சொன்னார். அவற்றையெல்லாம் ஒரே நாளில் படித்து முடித்து விட்டுத் திருப்பி அனுப்பி வைத்தார். ஒரே நாளில் ஒருவர் அவ்வளவையும் படித்திருக்க முடியும் என்பதை நூல் நிலைய அதிகாரி நம்ப மறுத்தார். உடனே ஸ்வாமிஜியே நூல் நிலையத்துக்குச் சென்றார். ''நீங்கள் சந்தேகப்பட்டீர்களாமே! எந்தப் புத்தகத்தில் எந்த இடத்தைப் பற்றி வேண்டுமானாலும் கேள்வி கேளுங்கள், விடை சொல்ல முடிகிறதா பார்க்கிறேன்'' என்றார் ஸ்வாமிஜி லைப்ரேரியனிடம். அவர் ஸ்வாமிஜியை அதே போல் பரிசோதித்தார். வாஸ்தவமாகவே ஸ்வாமிஜி அவ்வளவு புத்தகங்களையும் படித்திருக்கிறார், வெறுமனே படிக்காமல் நன்றாக ஊன்றிப் படித்து மனசில் வாங்கிக் கொண்டிருக்கிறார் என்பதைக் கண்டு பேராச்சரியமடைந்தார்.

''உண்மையிலேயே, ஸ்வாமிஜி, உங்களால் எப்படி இப்படிப் படிக்க முடிகிறது?'' என்று அகண்டானந்தர் ஸ்வாமிஜியைக் கேட்டார்.

''நான் ஒரு போதுமே புத்தகங்களை வரிக்கு வரி படிப்பது கிடையாதே! வாக்கியம் வாக்கியமா



கவோ, அல்லது பாரா பாராவாகவோ தானே படிக்கிறேன்!'' என்றார் ஸ்வாமிஜி.

மீரட்டில் சுமார் ஐந்து மாதங்கள் தங்கியிருந்தார் ஸ்வாமிஜி. தனிமை ஆசை மீண்டும் அவரைக் குடைய ஆரம்பித்தது. ஹரித்வாரத்திலும் ஹ்ருஷீகேசத்திலும் தனித்து வாழ்ந்த துறவிகள் எல்லோரும் அவரது மனக் கண்முன் நிழலாடினர். பைத்தியம் போல் வாழ்ந்தவர்கள்; உள்ளத்தில் தெய்வப் பிச்சேறினவர்கள்; ஆடையின்றித் திரிந்தவர்கள்; அதற்காகக் கல்லடிபட்டுக் குருதி சிந்தியவர்கள் — குருதியைக் கழுவி ஸ்வாமிஜி துணி போகக்கிய பஸ்மத்தைத் அதில் தடவிய போதும் விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டே 'அப்பனின் விளையாட்டைப் பார்த்தாயா?' என்று கேட்டவர்கள்— தங்கள் குகை வாசலில் மனித எலும்புகளைப் பதித்துக்கொண்டிருந்தவர்கள்; சவங்களையே புசிப்பதாகக் கூறியவர்கள்; இவர்களெல்லாம் ஸ்வாமிஜியின் நினைவு அலைகளில் மிதந்தனர்.

1891ம் ஆண்டு ஜனவரி மாதக் கடைசியில் தன்னந் தனியாகப் புறப்பட்டார் ஸ்வாமிஜி. குருபாயிக்களும் யாத்திரை கிளம்பி விட்டனர்.

மீரட்டிலிருந்து தில்லி வந்து சேர்ந்த குருபாயிக்கள் சிலர் விவிதிசாநந்தர் என்ற இளம் சாதுவைப் பற்றிக் கேள்விப்பட்டனர். ஆத்ம ஞானத்தோடு ஆங்கில ஞானமும் உடைய அவரைக் காண ஆர்வம் கொண்டார்கள். ஒரு நாள் கண்டும் விட்டார்கள்.

அவர்களும் சரி, இதைப் படிக்கும் நீங்களும் சரி, ஏமாறிப் போக முடியுமா?

''எங்கே இங்கும் வந்து சேர்ந்தீர்கள்?'' என்று கேட்டார் விவிதிசாநந்தராகிய ஸ்வாமிஜி.

''நாங்கள் பாட்டுக்குத் தில்லி மாநகரைப் பார்க்க வேணுமென்று வந்தோம். வந்த இடத்தில் அற்புதமான சந்நியாசி ஒருவரைப் பற்றிக் கேள்விப்பட்டோம். அவரைத் தரிசிக்க வேண்டுமென்று வந்தால் அவர் நீங்களாகவே இருந்து வைக்கிறீர்'' என்று பாதி உண்மையும், பாதி ஹாஸ்யமுமாகக் கூறினர் குருபாயிக்கள்.

ஸ்வாமிஜி அப்போது ஹாஸ்யத்தை ரசிக்கத் தயாராயில்லை.

''தம்பிரான்களே! நான் ஏகாந்தத்தையே விரும்புகிறேன் என்று உங்களிடம் படித்துப் படித்துச் சொல்லி யிருக்கிறேன். அதையே இப்போதும் இன்னொரு முறை சொல்கிறேன். என்னை யாரும் பின்தொடர வேண்டாம். என் இருப்பிடத்தைப் பற்றி அறியவும் முயல வேண்டாம். என் ஆத்மா என்னை எங்கு அழைத்துச் செல்கிறதோ அதன் பின்னாலேயே செல்லப் போகிறேன். அது வனாந்தரமாக இருக்குமோ, பாலைவனமாக இருக்குமோ, மலைப் பிரதேசமாக இருக்குமோ, நாடு நகரமாகத்தான் இருக்குமோ — அதைப் பற்றி எனக்குப் பொருட்டில்லை. நான் கிளம்பி விட்டேன். அவரவரும் தத்தமது சக்திக்கேற்ப லட்சியத்தை அடைய முயலுங்கள்'' என்று நிர்த்தாட்சிண்யமாகக் கூறிவிட்டார் ஸ்வாமிஜி.

சொன்னாரே தவிர தில்லியிலிருந்து புறப்பட்டாரில்லை. நேசம் விடுமா? சில நாட்கள் தில்லியிலேயே தங்கிக் குருபாயிக்களுடன் அன்பு வளர்த்து வந்தார்.

சாம்ராஜ்யங்கள் பலவற்றின் எழுச்சியையும், வீழ்ச்சியையும் கண்ட மாநகரம் தில்லி. மன்னர்கள் மறைந்தாயிற்று. அவர்களை மறக்கக் கூடாது என்பதற்காக எழுப்பிய ஞாபகச் சின்னங்களும் மறைந்தாயிற்று. சாம்ராஜ்யங்கள் சரிந்தாயிற்று. சரித்திரம் புராணமாயிற்று. ஆனால் ஆத்மாவோ இன்னும் மறைவோ சரிவோ புரட்சியோ யில்லாமல் அன்று போலவே இருந்து வருகிறது. தில்லியைச் சுற்றிச் சுற்றிப் பார்த்த ஸ்வாமிஜி இதையே நினைந்து நினைந்து வியந்தார்.

தில்லியிலிருந்து குருபாயிக்கள் காஜியாபாத்துக்குப் புறப்பட்டார்கள். ஸ்வாமிஜி யாரும் தம்மைப் பின்தொடர மாட்டார்கள் என்ற நிம்மதியோடு ராஜபுதனத்துக்குப் புறப்பட்டார்.

தண்ட கமண்டலத்துடன் காவி உடையணிந்து பரிவிராஜக சந்நியாசியாகக் கிளம்பி விட்டார். வீடு, வாசல், அன்னை, சோதரர் யாவற்றையும் விட்ட பின்பும் விடமுடியா திருந்த குருபாயிக்களின் பாசமும் தன்னிடமிருந்து கழன்ற விடுதலையை எண்ணிப் பெருவகை அடைந்தார்.

ஆதியில் நரேந்திரராக இருந்த ஸ்வாமிஜி மிருகேந்திரன் போலவே சென்றுகொண்டிருந்தார்.

வரலாற்றுப் பிரசித்தி வாய்ந்த ராஜஸ்தானத்திலுள்ள ஆல்வாருக்கு 1891ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் வந்து சேர்ந்தார்.

அங்கு ஸ்வாமிஜியைக் காண ஏராளமானவர்கள் கூடலானார்கள். அவர் உபந்நியாசிக்கலானார். உபந்நியாசத்திடையே ஹிந்தி, வங்காளி முதலிய மொழிகளிலிருந்து துதிப் பாடல்களை அதிமதுரமாக அநுபவித்துப் பாடினார். அடியார்களின் எண்ணிக்கை பெருகிற்று.

ஸ்வாமிஜி யாவரும் தம்மை அண்டும்படியாக வாழ்ந்து சமூகத்தின் பல பிரிவினருக்கும் உபதேசமளித்து வந்தார். அவருடைய எளிமை காரணமாக யாரும் கூச்சமில்லாமல் அவரிடம் பேச முடிந்தது.

சந்நியாசி எந்த விதமான வித்தியாசமும் பாராட்டக் கூடாது என்றால் ஏன் வெள்ளை ஆடையைப் புனையாது துவர் ஆடையே அணிய வேண்டும் என்று ஒருவர் எண்ணினார்.

''நீங்கள் ஏன் காஷாயம் கட்டிக்கொண்டிருக்கிறீர்கள்?'' என்று அவர் ஸ்வாமிஜியையே கேட்டுவிட்டார்.

ஸ்வாமிஜி குளிர்ந்த குரலில் உணர்ச்சியுடன் கூறினார்: ''நான் ஏன் காவி வஸ்திரம் அணிகிறேன் என்றால் அதுவே பிச்சைக்காரர்களின் உடையாகும். நானும் மற்றவர்களைப் போல் வெள்ளை ஆடை அணிந்திருந்தால் என்னிடம் ஏதோ பணம் காசு இருக்கும் என்றெண்ணி ஏழை எளியவர்கள் என்னிடம் பிச்சை கேட்பார்கள். நானோ பிச்சைக்காரன். என்னிடம் சல்லிக் காசு கூட இல்லாத சமயங்களே அதிகம். அப்போது என்னை யாராவது யாசகம் கேட்டு, அவர்களிடம் ஏதுமில்லை என்று கூறி வருத்தப்படுத்தினால்


புடவை
புதிதா?
இல்லையே-
லக்ஸ்
சலவை
LUX
For gentle washing of lovely clothes


அமுல்
வெண்ணெய்
எவ்விதத்தில்
அலாதியானது?
Amul
PASTEURISED
BUTTER
?
5
பால் பாத்திரத்திலிருந்து பாக்கெட்டுக்குள் செல்ல
அமுலுக்கு மட்டுமே 5 மணிநேரத்திற்குள் முடிகிறது.
இந்நேரத்திற்குள், தினந்தோறும், காலையிலும்,
மாலையிலும், வெண்ணெய் தயாரித்து பாக்செய்து வெளி
யனுப்புவதற்குத் தயாராவதற்கென புதுப்பால்
அது சேகரிக்கப்படும் இடங்களிலிருந்து
அதிவேகமாக அனுப்பப்படுகிறது.
அமுல் வெண்ணெய்
புதுமையுடனும், சுத்தமாகவும்
போஷாக்குள்ளதாகவும் இருப்பதில் வியப்பில்லை.
கெய்ரா, டிஸ்டிரிக்ட் கோ-ஆப்பரேடிவ் மில்க் ப்ரொட்யூஸர்ஸ் யூனியன் லிட்., ஆனந்த்.
CBKHP-3A TAM

எனக்கே உள்ளம் இலேசம் அடையும். அதனால் காவி உடுக்கிறேன்.''

காவி உடை தரிப்பதற்கு இதைப் போல் மானுடப் பண்பு மிளிரக் காரணம் கூறியவர் யாருண்டு? கனலும், புதுப் புனலும் காஷாய நிறம் என்பதாலேயே சாதுவின் உடையும் அப்படி உள்ளது என்பதே பொதுவாகக் கூறப்படும் உதாரணம். ஆனால் அறிவுக் கனலாக இருந்த ஸ்வாமிஜி அருட் புனலாக வும் இருந்து இப்படி ஓர் அன்பு விளக்கம் தந்து விட்டார்.


அம்பிகை வழிபாட்டைப் பற்றி ஆல் வாரில் பல சமயங்களில் ஸ்வாமிஜி பேச நேர்ந்தது. தேவியை நினைந்தவுடன் அவர் இதயம் பக்தியால் நிரம்பி வழியும். அப்படி ஒருத்தி உண்டா என்று சந்தேகம் கொண் டிருந்த தம்மைக் குருநாதர் வரம் கேட்கு மாறு பவதாரிணியின் திருச் சந்நிதிக்கு அனுப்பியதும், அங்கே விக்கிரகம் மறைந்து சாட்சாத் சர்வாங்க சுந்தரியான ஜகன் மாதாவே தமக்கு தரிசனம் தந்து, அவளுடைய இணையடிகளில் பக்தியை மட்டுமே கோரும் பான்மையைத் தந்தருளியதையும் எண்ணி எண்ணி ''அம்பா, அம்பா, அம்பா'' என்று தேம்பித் தேம்பிக் கூப்பிடுவார். முதலில் கம்பீரமாக எழுந்த 'அம்பா' என்ற அழைப்பு வரவர சன்னமாகத் துவளும். எங்கோ மணித் வீபத்திலுள்ள அம்பிகையிடமே அவருள்ளம் செல்வது போலும், உள்ளத்துடனேயே குர லும் செல்வது போலும் தூரத்திலிருந்து, அதிதூரத்திலிருந்து வரும் ஒலியாக 'அம்பா, அம்பா, அம்பா' என்ற நாதம் அடங்கிப் பாயும். பின் பேச்சற்றே போய்விடுவார். தாமரை மொட்டுப் போன்ற அவரது கண் களிலிருந்து அவருடைய விரிந்து பரந்த முகத் திலே அருவியென நீர் வழியும். 'அம்பி கைக்கு எவ்வளவு அருகே சென்றுவிட்டார்! அந்த அன்னை இந்தக் குழந்தையைத் தூக்கிக் கொள்ளக் கைகெட்டும் தூரத்தில் வந்து விட்டாளோ?' என்று சூழவிருப்பவர்கள் வியப்பார்கள்.

ஆல்வாரில் ஸ்வாமிஜியிடம் பக்தி பூண்ட ஒரு மௌல்வி சாஹேபுக்கு ஆசை ஒன்று உண்டாயிற்று. ஸ்வாமிஜியைத் தமது இல்லத் துக்கு அழைத்துப் பிக்ஷை செய்ய வேண்டும் என்பதே அது. ஸ்வாமிஜி தங்கியிருக்கும் வீட்டுக்குரியவரான பண்டித சம்புநாதஜி ஆக்ஷேபிப்பாரே என்று பயந்தார் மௌல்வி.

ஒருநாள் மாலை தம்மையே துணிவு படுத் திக் கொண்டு பண்டிட்ஜியிடம் அஞ்சலி பந்தராகச் சென்றார் மௌல்வி. ''தயவு செய்து நாளைக்கு பாபாஜியை என் வீட்டில் பிக்ஷை கொள்ள அனுமதியுங்கள். பிராமணர் களைக் கொண்டு ஸ்தலசுத்தி செய்கிறேன். பிராமணர்களைத் தங்கள் வீட்டிலிருந்தே பாத் திரங்கள் கொண்டுவரச் செய்து அவர்கள் கையாலேயே என் வீட்டில் சமைக்கச் செய்து ஸ்வாமிஜிக்குப் போஜனம் அளிக் கிறேன்'' என்று பக்தி பூர்வமாகக் கூறினார். அவரது உள்ளன்பு பண்டிட்ஜியை உருக்கிவிட்டது. அவர் தமது ஆசாரங்களை யும் மறந்து மௌல்வியின் கரங்களைப் பற்றிக் கொண்டு விட்டார். ''நண்பரே! ஸ்வாமிஜி சந்நியாசி யல்லவா? அவருக்கு ஜாதியே கிடை யாது. எனவே இத்தனை சிரமம் கூட வேண்டாம். இத்தனை ஆசாரமாக உணவு தயாராகிறதென்றால் உங்கள் வீட்டில் நானே கூட உண்பேனே'' என்றார் சம்புநாதர்.

மறு நாள் தாம் சொன்ன பிரகாரமே ஸ்வாமிஜிக்கு உயர்ந்த முறையில் போஜ னம் செய்வித்தார் மௌல்வி. தாம் தன்ய ரானதாகக் கருதி அகமகிழ்ந்தார்.

ஆல்வார் சம்ஸ்தானத்துத் திவானுகிய மேஜர் ராமசந்திரஜி தங்களது நலநகரில் வந்து தங்கியுள்ள ஸ்வாமிஜியைப் பற்றிக் கேள்வியுற்றார். அவரைத் தமது இல்லத்துக்கு வரவேற்றார். ஸ்வாமிஜியுடன் அவருக்கு



இரட்டிப்பு மகிழ்ச்சி

நடனத்தை இரண்டு மாதங்களில் கற்றுக் கொண்டு உடனே அரங்கேற்றம் ஆகிவிடுவதைக் காண்கிறோம். கலைத் துறையில் இப்படி அவசரம் புகுந்து கொண்டு விட்டது. ஆனால் இடையறாது மூன்று வருஷங்கள் மிகுந்த ஊக்கத்தோடு பயிற்சி பெற்றால் கிடைத்தற்கரிய வெற்றியும் கிட்டும் என்பது சமீபத்தில் கல்கத்தாவில் நடந்த ஆசிய டென்னிஸ் விளை யாட்டுப் போட்டியில் நிரூபணமாயிற்று. 1957ம் வருஷத்தி லிருந்து 1960ம் வருஷம்வரை, டென்னிஸ் கிருஷ்ணனின் தந்தை திரு ராமநாதனிடம் பயிற்சி பெற்ற குமாரி லக்ஷ்மி, ஆசிய சாம்பியன்ஷிப்புக்கான பெண்கள் போட்டிகளில் முதல்வராகத் தேறினார். குமாரி லக்ஷ்மியும், மீண்டும் ஆசிய சாம்பியனுகியுள்ள ஸ்ரீ கிருஷ்ணனும் தமிழ் நாட்டுக்கு இரட் டிப்பு மகிழ்ச்சியை அளித்துள்ளார்கள்.

தென்னிந்தியாவில் பல டென்னிஸ் போட்டிகளில் இரட்டையர் ஆட்டத்தில் குமாரி லக்ஷ்மியும் பொப்பிலி குமார ராணியும் பல கோப்பைகளைப் பெற்றுள்ளனர்.

அரசியல் பாடத்தில் எம். ஏ. பட்டம் பெற்ற குமாரி லக்ஷ்மி 'தியாக பூமி' மூலம் திரையுலகில் புகழ்பெற்ற திரு கே. ஜே. மகாதேவன் அவர்களின் புதல்வியாவார். ஆசிய விளை யாட்டுப் போட்டியில் செமிபைனலில், இதுவரை முதல்வராகத் திகழ்ந்த சிட்டியானுவைத் தோல்வியுறச் செய்ததும், இறுதியாட்டத்தில் பிரிட்டிஷ் ஆட்டக் காரர் ஸ்ரீமதிபில்லை வென்றதும் குமாரி லக்ஷ்மியின் அபார ஆட்டத்துக்குச் சான்றுகளாகும்.

நல்ல பழக்கம் ஏற்பட்டவுடன் தங்களுடைய மகாராஜாவாகிய மங்கள் சிங்ஜி அவரைக் கண்டால் நன்மை ஏற்படும் என எண்ணினார். மங்கள்சிங்ஜி ஐரோப்பியப் பழக்க வழக்கங்களில் மிகவும் மூழ்கியிருந்தார். ஸ்வாமிஜியின் பரிசயத்தால் மகாராஜாவின் போக்கு மாறக்கூடும் என திவான் நம்பினார். மகாராஜாவுக்கு ஸ்வாமிஜியைப் பற்றித் தெரிவித்தார்.

மறு நாளே மகாராஜா திவானுடைய வீட்டுக்கு வந்தார். ஸ்வாமிஜியை முறைப்படி நமஸ்கரித்தார். ராஜகுலத்தில் பிறந்த சம்ஸ்தானாதிபதிகளிடம் எவ்வளவு குறைகள் இருப்பினும் அவர்களுடைய சம்பிரதாயமான உபசரிப்புப் பண்புக்கு ஒரு போதும் குறைவு இருந்தது கிடையாது. முடிசார்ந்த மன்னரும் அடிசாரும் பெருமையை அடியாருக்களித்த பெருமதமல்லவா ஹிந்து சமயம்?

''பாபாஜி மஹாராஜ், எனக்கு விக்கிரக ஆராதனையில் நம்பிக்கையில்லை. என்னுடைய விதி என்னாவது?'' என்று ஸ்வாமிஜியைக் கேட்டார் ஆல்வார் மன்னர். அப்படிக் கேட்கும் போது அவரது குரலில் வருத்தத்துக்குப் பதில் பரிகாசமே தொனித்தது. ஸ்வாமிஜிக்கே இது சிறிது உறுத்தலாகத்தான் இருந்தது. ''நீங்கள் தமாஷ் செய்ய வில்லையே?'' என்று ஸ்வாமிஜி மஹாராஜாவை வினவினார்.

''இல்லவே இல்லை! உண்மையாகத்தான் சொல்கிறேன்: மற்றவர்கள் சொல்வதுபோல் மரத்தையும், மண்ணையும், கல்லையும், உலோகத்தையும் என்னால் தொழ முடியவில்லை. இதனால் நான் இந்த உலக வாழ்க்கை முடிந்தபின் அவதியுறுவேன் என்று அர்த்தமா?'' என்று கேட்டார் மன்னர்.

''நல்லது, ஒவ்வொருவரும் தம்முடைய நம்பிக்கையை ஒட்டி மத லட்சியத்தைத் தொடருவதுதான் சரி'' என்று கூறிவிட்டார் ஸ்வாமிஜி.

ஸ்வாமிஜி இப்படிப் பட்டும் படாமலும் பதில் சொன்னதைக் கேட்ட பக்தர்களுக்கு வியப்பாகவும், ஏமாற்றமாகவும் இருந்தது. ஒரு காலத்தில் ஸ்வாமிஜியே உருவ வழிபாட்டை நம்பாதிருந்து பின்னர் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அருளால் நம்பிக்கை பெற்றார் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். எனவே விக்கிரக ஆராதனையின் சிறப்பை அவர் எடுத்துரைப்பார் என அவர்கள் எதிர்பார்த்தார்கள். அவர் ஏமாற்றி விட்டார்.

சிறிது போது சென்றது. ஸ்வாமிஜியின் நோக்கு சுவரில் மாட்டியிருந்த மன்னருடைய சித்திரமொன்றின் மீது விழுந்தது.

''அதைக் கொஞ்சம் இப்படிக் கொண்டு வாருங்கள்'' என்று கையை நீட்டினார் ஸ்வாமிஜி. அவ்வாறே சித்திரத்தைக் கழற்றி அவரிடம் கொடுத்தார்கள்.

''நல்லது. இந்தப் படத்தின் மீது எச்சில் துப்புங்கள்'' என்றார் ஸ்வாமிஜி திவானிடம்.

திவான் மட்டுமல்ல, அங்கு குழுமியிருந்த அவ்வளவுபேருமே ஸ்வாமிஜி கூறிய வார்த்தைகளைக் கேட்டு விலவிலத்துப் போனார்கள். ஆனால் அவரோ துளியும் அச்சமின்றி, ''திவான்ஜி, உங்களைத்தான் சொல்கிறேன்! இதன் மீது துப்புங்கள். என்ன, மாட்டீர்களா?..... சரி, இங்கே கூடியிருக்கும் உங்களில் யார் வேண்டுமானாலும் இதன்மேல் காறி உமிழலாம். போயும் போயும் இது என்ன? ஒரு கடிதாசுத் துண்டுதானே? இதன் மேல் துப்ப உங்களுக்கு என்ன ஆட்சேபனை?'' என்று நிறுத்தி நிதானமாகக் கேட்டார்.

திவான் ஸ்வாமிஜிக்குத் தம் வீட்டில் இடமளித்ததையும், அவரைக் காணத் தாமே மகாராஜாவை வரவழைத்ததையும் நினைந்து விக்கித்துப் போய் யாகத்தில் கட்டிய பசுப் போல நின்றார். ஸ்வாமிஜி அமைதியாகவே காணப்பட்டார். ஏனோ மகாராஜாவும் பதற்றமடைந்து காணப்படவில்லை.

''.....ம்! துப்புங்கள் என்று உங்களிடம் தான் சொல்கிறேன். மாட்டீர்களா?'' என்று மீண்டும் திவானிடம் கேட்டார் ஸ்வாமிஜி.

தமது குழப்பத்தைச் சற்றே சமாளித்துக் கொண்ட திவான், ''தாங்கள் என்ன சொல்கிறீர்கள்? இது எங்கள் மஹாராஜாவின் பிரதிபிம்பமல்லவா? இதன் மீது நான் எப்படித் துப்ப முடியும்?'' என்று கேட்டார்.

''மஹாராஜாவின் பிரதிபிம்பமாக இருக்கட்டுமே! அதனாலென்ன? இது அசல் மஹாராஜா அல்லவே! இதில் மஹாராஜாவின் எலும்போ, சதையோ, ரத்தமோ இருக்கிறதா, என்ன? இது மஹாராஜாவைப் போலப் பேசாது; பாவனைகள் புரியாது; அவர் போல நடக்காது. என்றாலும் இதன் மீது நீங்கள் துப்ப மறுக்கிறீர்கள்! ஏனெனில், உங்கள் மஹாராஜாவுடைய உருவத்தின் சாயை இதில் இருக்கிறது. இதன் மீது நீங்கள் உமிழ்ந்தால் அது நீங்கள் மஹாராஜாவை நிந்தித்ததற்கே சமமாகும் என்ற அளவுக்கு எண்ணுகிறீர்கள்!''

இப்படிப் பேசி வந்த ஸ்வாமிஜி மன்னரை நோக்கி அமைதியாகச் சொல்வார்:

''உயர்மிகு அரசரே, பாருங்கள்! ஒரு விதத்தில் இந்தப் படம் நீங்கள் இல்லை எனினும், இன்னொரு பொருளில் இதுவே நீங்களாக இருக்கிறது. உங்களின் ஒரு சாயை இதில் இருக்கிறது. இவர்கள் மனசில் இந்தப் படம் உங்களைத் தருகிறது.

''இதே போலத்தான் விக்கிரக ஆராதனை விஷயமும். பிரதிமை என்பது பக்தர்களின் மனசில் அவர்களுடைய இஷ்ட தேவதையையோ, அல்லது பரம்பொருள் தத்துவத்தின் ஒரு சில அம்சங்களையோ, கல்யாண குணங்களையோ கொணர்ந்து, சித்தத்தை ஒருமுகப்படுத்துகிறது. அவர்கள் கல்லையும், உலோகத்தையும் கல்லாகவும், உலோகமாகவும் வைத்து வழிபடுவதில்லை. நான் எத்தனையோ இடங்களில் சுற்றியிருக்கிறேன். ஆனால் ஓர் இடத்திலேனும், 'ஏ, கல்லே, உன்னை வணங்குகிறேன்! ஏ உலோகமே, எனக்குக் கருணை காட்டு!' என்று யாரும் வேண்டிக் கொண்டு நான் பார்க்கவில்லை.....

''ஆனால், மஹாராஜ், நான் என் மனோபாவத்தை வைத்துத்தான் பேச முடியும்; உங்கள் உள்ளியல்புக்கு ஒவ்வியபடி நான் எப்படிப் பேச முடியும்?''

முடிக்கும் போது ஸ்வாமிஜி ஹிதமாக விஷமத்தையும் சேர்த்தே பேசினார், அவர்

இப்பொழுது வெற்றிகரமாக நடைபெறுகிறது

சென்னை பிளாஸா, மஹாராணி, ராக்ஸி




Water Problem?
Solve it with
MYERS Deepwell Ejecto Pump
For continuous supply of cool, fresh water under pressure Myers EJECTO Pump has no equal.
Consider these advantages :-
1. It supplies water directly from source to any desired point or points.
2. It can be installed at ground level.
3. It needs no overhead tank.
4. Its capacity of 300 to 5000 g.p.h. is suitable for most need
5. It works silently, efficiently, economically.
6. It is ideal for small industries, hotels, flats, etc.
4 good reasons why you should buy this pump:-
1. Compact and simple. Parts easily accessible for maintenance.
2. Robust construction. Pumps and parts guaranteed against faulty workmanship.
3. Motor above ground level. No danger of catching damp and burning out.
4. Elimination of noise. Noise-free operation is a great asset where large quantities of water have to be pumped daily.
Myers
or
Wasp
Automatic ELECTRIC PUMPS
WATER SUPPLY SPECIALISTS PVT. LTD.
330, THAMBU CHETTY STREET, MADRAS-1

கூறிய உண்மையை எந்த இயல்பினர்தான் மறுக்க முடியும்?

மன்னர் மனங்கனிந்து நெக்குருகி விட்டார். தமது இரு கரங்களையும் குவித்துக் கொண்டு, "ஸ்வாமி! இதுவரை நானும் கல், மரம், உலோகம் இவற்றை யாரும் கல்லாக, மரமாக, உலோகமாக நினைந்து வழிபடுவதைப் பார்த்ததில்லைதான். என்றாலும் இத்தனை நாட்களாக நான் அதன் உட்பொருளை உணரவில்லை. நீங்கள் என் கண்களைத் திறந்து விட்டீர்கள்! பாபாஜி.... இப்போது சொல்லுங்கள். விக்கிரக ஆராதனையைப் பழித்த என் விதி என்னாவது?" என்றார்.

இம்முறை பரிகாசமாகக் கேட்கவில்லை மன்னர். பரிதாபமாகவே கேட்டார். "என்னிடம் கருணை கூர்ந்து சொல்லுங்கள்" என்று ஸ்வாமிஜியைப் பிரார்த்தித்தார்.

"மஹராஜ்.... கடவுள் ஒருவனைத் தவிர யாராலும் கருணை காட்ட முடியாது. அவன் எப்போதும் கருணை மயமாகத்தான் இருக்கிறான். அவனைப் பிரார்த்தியுங்கள். அவன் உங்களுக்கும் கருணை புரிவான்" என்றார் ஸ்வாமிஜி.

இன்று விக்கிரகங்களைக் கேலி செய்பவர்களும்கூடத் தங்களுக்கென்று ஒரு கொடி வைத்துக் கொண்டு, அதற்கு வணக்கம் செய்யும் விசித்திரத்தைக் காண்கிறோம். இந்தக் கொடிக்கு என்ன அர்த்தம் என்று அவர்களைக் கேட்டால் என்ன பதில் சொல்வார்களோ? கொள்கைகளை நினைவு கொள்வதற்கும் சின்னம் வேண்டும் என்பதே ஸ்வாமிஜி விக்கிரக வழிபாட்டுக்குக் காண்பித்த காரணமாகும்.

ஆனால் இதற்கு மேலும் ஒரு படி போகலாம். எங்குமுள்ள பரம்பொருள், வாஸ்தவமாகவே தெய்வம் உருவாகியுள்ள கல்லிலும் செம்பிலும் இருக்கத்தானே செய்கிறது? விக்கிரகங்களை ஏன் பரம்பொருளின் அடையாளம் என்று மட்டும் கூறவேண்டும்? எல்லாக் கல்லிலும், மண்ணிலுமே அவன் இருக்கிறான். எனினும் அவ்வாறு காண நம்மால் இயலாததால் சில மூர்த்திகளிலாவது அவனைக் காணமுயல்கிறோம்; அவ்வளவுதான்.

மஹாராஜாவின் விருப்பத்துக் கிசைந்து மேலும் சில நாட்கள் ஆல்வாரிலேயே தங்கியிருக்க ஸ்வாமிஜி இணங்கினார். ஒரு நிபந்தனையுடன் இணங்கினார்.

"இங்கே ஏழைகளும், எழுத்தறிவற்றவர்களும் எப்போது வந்தாலும் அவர்கள் என்னைக் காண அனுமதிக்க வேண்டும். உயர் அந்தஸ்து பெற்றவர்களும், அறிஞர்களும் வந்தால் அவர்கள் என்னைக் காண என்ன வசதிகள் செய்வீர்களோ அதை ஏழை எளியவர்களுக்கும் காட்ட வேண்டும்" என்பதே ஸ்வாமிஜி விதித்த நிபந்தனை.

மகான்களுக்கு இரு அருங்குணங்களுண்டு: சத்தியம், கருணை. சத்தியத்தின் காரணமாக நாடாள்பவரையும் எடுத்தெறிந்து பேசிய ஸ்வாமிஜி, கருணை காரணமாக ஏது மற்றவர்களுடன் ஒன்றியிருந்தார்.

ஆல்வார் சம்ஸ்தானதிபதிக்கு அறிவு புகட்டியது போலவே ஸ்வாமிஜி பலருடைய வாழ்க்கையில் நல்ல திருப்பங்களை ஏற்படுத்தினார்.



"டாக்டர் சார்! உள்ளங்கால் ஒரே குத்தலா குத்தறது!"

'வைடமின் 'பி' டிபிஷியன்ஸி. கைக் குத்தலரிசி சாப்பிடுங்கோ!"

ஸ்ரீ ராமகிருஷ்ணர் மறைந்தபின் சூனியம் தட்டிக் கிடந்த ஞானோபதேச சிம்மாதனம் தன்னில் ஸ்வாமிஜியை அமர்த்திக் கொண்டு விட்டது. குருபீடம் அவருக்குரியதாகி விட்டது. மக்கள் அவரிடம் பக்தி பூண்டு நாடத் தொடங்கி விட்டனர்.

ஸ்வாமிஜி வலியுறுத்திக் கூறியதன் மீது ஆல்வாரிலிருந்த பல இளைஞர்கள் சம்ஸ்கிருதம் கற்கலானார்கள்; ஸ்வாமிஜியே சம்ஸ்கிருதம் கற்பித்ததுண்டு.

"சம்ஸ்கிருதம் படியுங்கள்! அதோடு மேல்நாட்டு விஞ்ஞானத்தையும் படியுங்கள். எதனையும் நுணுக்கத்துடன் திருத்தச் செய்யப் பழகுங்கள். கல்வி பெறுங்கள்; உழைக்கப் பழகுங்கள். இப்போது நம்முடைய சரித்திரம் கட்டுக் குலைந்து கிடக்கிறது. ஆங்கில ஆசிரியர்கள் எழுதியுள்ள இந்திய சரித்திர நூல்கள் நம்முடைய மனசைப் பலவீனப்படுத்தத்தான் செய்யும். ஏனெனில், அவை நம்முடைய வீழ்ச்சியையே சொல்கின்றன. நம்முடைய பழக்க வழக்கங்களைப் பற்றியும், நம்முடைய சமயம், தத்துவ ஞானம் இவை பற்றியும் மிகவும் சொற்பமாகப் புரிந்து கொள்ளும் அந்நியர்கள் எப்படி இந்திய சரித்திரத்தை சத்தியத்துடனும், சிரத்தையுடனும், பட்சபாதமின்றியும் எழுத முடியும்?

"ஒருவன் எப்படித் தனது குழந்தை காணாமற்போனால் அதனை மீண்டும் கண்டுபிடிக்குமளவும் நிம்மதி கொள்ள மாட்டானோ, அதே போல நீங்களும் மக்களின் உணர்வில் பாரதத்தின் மாண்பு பொருந்திய புராதன சரிதத்தைப் புத்துயிர் பெறச்செய்யுமளவும் தளர்ச்சியடையாமல் பிரயத்தனம் செய்யுங்கள். அதுவே உண்மையான தேசியக் கல்வி; அதன் வளர்ச்சியிலேதான் உண்மையான தேசிய உணர்வும் விழிப்புப் பெறும்" என்று ஸ்வாமிஜி நல்லுரை கூறினார்.

ஸ்வாமிஜி இந்திய சரித்திரம் பற்றிக் கூறியது சுமார் எழுபதாண்டுகளுக்குப் பின்னர் இன்னமும் பூரணமாக நிறைவேறியதாகத் தெரியவில்லை.

"சந்நியாசி என்பவன் சஞ்சரித்துக் கொண்டேயிருக்க வேண்டும். நான் போக வேணும்" என்றார் ஸ்வாமிஜி.

அத்தனை காலம் தங்களுக்கு ஞானச் செல்வத்தை அள்ளித் தந்த ஸ்வாமிஜி, தமது மூட்டையைத் தாமே தூக்கிக் கொண்டு தனியொருவராக அங்கிருந்து கடும் வெயிலில் நடந்தே செல்லப் போகிறார் என்பதை ஆல்வார் அடியார்களால் ஏற்க முடியவில்லை.

"ஸ்வாமிஜி, தாங்கள் இங்கிருந்து பந்து போல் மட்டுமாவது மாட்டு வண்டியில்தான் செல்ல வேண்டும்" என்று அவர்கள் பிடிவாதம் பிடித்தனர்.

ஸ்வாமிஜியால் இணங்காதிருக்க முடியவில்லை.

ஆல்வாரிலிருந்து மாட்டு வண்டியில் புறப்பட்டார் ஸ்வாமிஜி.

பரிவாரங்கள் பின்தொடர்ந்தன.

மறு நாள் காலை வண்டியை அனுப்பி விட்டார். பக்தர்கள் புடைசூழ ஒரு பதினாறு மைல் நடந்தே சென்றார். வழியெல்லாம் ஒரே வனாந்தரம். எனினும், ஸ்வாமிஜியின் ஆத்ம பலத்திலும், சொல் நயத்திலும் ஊறியவர்களுக்குக் கானகத்தின் பயமே தெரியவில்லை. தஹ்லா என்று ஒரு கிராமம். நீலவானத்தில் பிறைமதி கோடிழுத்திருக்கும் அழகுக்கு மாற்று அழகாகத் தனது நிலவு போன்ற கழுத்தில் நீலரேகை தரித்திருக்கும் நீலகண்ட மஹாதேவன் என்ற நாம ரூபகத்தாருக்குத் தஹ்லாவில் ஆலயம் இருந்தது. அங்கு ஸ்வாமிஜியும் பரிவாரத்தினரும் இரவைக் கழித்தனர்.

மறு நாள் காலை எல்லோரும் பதினெட்டு மைல்கள் நடந்தனர். நாராயணி என்ற புண்ணிய கிராமத்தில் அம்பிகையின் ஆலயத்தை அடைந்தனர்.

அங்கு ஸ்வாமிஜி ஆல்வார் அன்பர்களுக்கெல்லாம் விடை கூறினார்.

ஆனால் அவர்கள் ஏன் அவரிடம் அவ்வளவு அன்பு கொண்டிருந்தார்கள் என்ற கேள்விக்கு யார் விடை தர முடியும்?

ஃ ஃ ஃ

பூவுலகு முழுவதும் வீடாகவும், ஆகாசமே கூரையாகவும் கொண்டு ஏகாங்கியாக ஸ்வாமிஜி சென்று கொண்டிருந்தார்.

ஜயப்பூரை அடைந்த ஸ்வாமிஜி அங்கு இரண்டு வாரங்கள் தங்கியிருந்தார். பண்டிதர் ஒருவரிடம் வடமொழி இலக்கணம் பயிலத் தொடங்கினார்.

ஜயப்பூர் சமஸ்தானத்து சேனாதிபதியான ஸர்தார் ஹரி ஸிங் என்பவருடன் ஸ்வாமிஜிக்கு நெருக்கமான நட்பு ஏற்பட்டது.

ஒரு நாள் விக்கிரக ஆராதனையின் பயனைப் பற்றி ஸ்வாமிஜி ஹரிஸிங்கிடம் பேசினார். ஸர்தார்ஜி வேதாந்தம் நன்கு கற்றவர். பிரம்மம் நிர்க்குணமானதே என்று கருதிய அவரை ஸகுணப் பிரம்மத்தில் ஈடுபடுத்த ஸ்வாமிஜியின் வாதத்தால் முடியவில்லை.

அன்று மாலை இருவரும் உலாவச் சென்றனர். போகும் வழியில் கண்ண பெருமானின் திருவுருவத்தைச் சிலர் ஊர்வலமாக எடுத்து வந்தனர். ராதேச்யாமனைக் குறித்து பஜனை செய்தபடியே பெருமானைத் தூக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். ஸ்வாமிஜியும் ஸர்தாரும் சிறிது நேரம் ஊர்வலத்தையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஸ்வாமிஜி சட்டென்று ஸர்தாரைத் தொட்டு, "அதோ, உயிருள்ள ஆண்டவனைப் பாருங்கள்!" என்று ஆர்ப்பரித்தார்.

ஸர்தாரின் கண்கள் நந்தபாலனுடைய விக்கிரகத்தின் மீது இறுகிற்று. அவருடைய உடல் அப்படியே சிலிர்த்தது. காலை வேளையில் சிலிர்க்கும் மலரிலிருந்து பனி தெளிப்பது போல அவர் கண்களிலிருந்து ஊற்றுப் பெருகிற்று. பரவசராக இருந்த அவர் ஸ்வாமிஜியிடம் கரைந்த குரலில் சொல்வார்: "பாபா! எனக்கு ஞானோதயமாயிற்று. பல மணி நேர விவாதத்துக்குப் பின்னரும் உணர முடியாததை உங்களுடைய ஒரு ஸ்பரிசத்தில் கணத்தில் உணர்ந்து விட்டேன். சத்தியமாகவே கிருஷ்ண விக்கிரகத்தில் கடவுளைக் கண்டு விட்டேன்."

'கடவுளைக் கண்டதுண்டா?' என்ற கனமான கேள்வியைச் சுமந்து கொண்டிருந்த நரேந்திரரை இப்படித்தான் ஒருவர் சர்வ சகஜமாகத் தொட்டார். 'கடவுளைக் கண்டதுண்டா?' என்று கேட்டவரும் கடவுளைக் கண்டார். இன்று அப்படிக் கேட்டுணர்ந்தவர் ஸ்பரிசித்ததில் இன்னொருவரும் தெய்வதரிசனம் பெற்று விட்டார். 'ஸ்பரிச வேதியினும் ஒரு சிறந்தவர்' என்ற ஆதிசங்கரரின் அருள் வாக்குத்தான் இங்கு நினைவு வருகிறது.

முப்பது வயதுக்குள் ஸ்வாமிஜி எத்தகைய ஆத்ம சம்பத்தைத் தேடிக் கொண்டு விட்டார் என்பதற்குத் தமது ஸ்பரிசத்தாலேயே தெய்வ தரிசனம் செய்வித்த இந்த நிகழ்ச்சியே சான்றாகும். 'ஸ்பரிசத்தால் தெய்வானுபவத்தை ஊட்டும் ஆற்றல் பெற்ற பின்பே வராநகரம் திரும்புவேன்' என்று கூறியவர் அந்த ஆற்றலைப் பெற்று விட்டார்!

கற்றறியாத — அதாவது கற்றிருந்தும் கற்றதன் பயனை அறியாத — ஒரு ஸர்தாரை ஸ்வாமிஜி ஜயப்பூரில் சந்தித்தார். பண்டித ஸூராஜ் நாராயணர் என்ற அவர் ராஜ்யம் முழுவதிலும் தம் புலமைக்காகப் பெயரெடுத்திருந்தார். ஸூராஜ் நாராயணர், "ஸ்வாமிஜி, நான் ஜீவராசிகளெல்லாம் பிரம்மமே என்று நம்பும் ஒரு வேதாந்தி. எனவே அவதாரங்கள் என்று சிலர் மட்டும் விசேஷமாகத் தெய்வத் தன்மை பொருந்தியிருக்கிறார்கள் என்பதை ஏற்க மறுக்கிறேன். நாம் எல்லோரும் பிரம்மம். எனக்கும் அவதாரத்துக்கும் என்ன வித்தியாசம்?" என்றார்.

"ரொம்பவும் சரி" என்றார் ஸ்வாமிஜி. "நீங்கள் சொல்வது ரொம்பவும் உண்மை. மீன், ஆமை, பன்றி இவற்றையெல்லாம் அவதாரம் என்று மக்கள் கருதுகிறார்கள். நீங்களும் உங்களை ஓர் அவதாரம் என்று சொல்லிக் கொள்கிறீர்கள். இவற்றில் நீங்கள் உங்களை மீன் என்றோ ஆமை என்றோ கருதுகிறீர்களா? அல்லது பன்றியுடன் நீங்கள் ஒன்று என எண்ணுகிறீர்களா?" என்று கேட்டார் பளிச்சென்று.

கொல்லென்ற சிரிப்பு எழுந்தது. பண்டிதர் ஊமையானார். (தொடரும்)

குண்டு மல்லிகை

அரு. ராமநாதன்

டாக்டர் ஜகந்நாதன் தமாஷாகச் சிரித்துக் கொண்டே எதையும் அகராதித் தனமாகப் பேசினாலும் காரியத்தில் சிறிதும் விட்டுக் கொடுக்க மாட்டார். அதிலும் தம் வைத்தியத் திறமையில் வெற்றியை நிலை நாட்டியே தீருவார் என்பது உமாவுக்கு நன்றாகத் தெரியும். அதனால் அவள் சிறிதும் தயங்காமல் காரின் பின் ஸீட்டுக் கதவைத் திறந்து உள்ளே ஏறி அமர்ந்து கொண்டு பிச்சுமணியிடமிருந்து ஆட்டுக் குட்டியை வாங்கித் தன் அருகிலேயே பின் ஸீட்டில் வைத்துக் கொண்டாள்.



அவளுக்குத் துணையாகத் தன்னையும் காரிலே வரும்படி கூப்பிடுவாள் என்று பிச்சுமணி எதிர்பார்த்தவனாய்க் காரின் கதவைப் பிடித்துக்கொண்டு ஆவலோடு நின்றான்.

ஆனால் உமா அவனைக் கூப்பிடவில்லை! பிச்சுமணி உள்ளூறத் தவியாய்த் தவித்தான்!

அவனைக் கடைக்கண்ணால் கவனித்தபடி ஜகந்நாதன் அவனுடைய தவிப்பையெல்லாம் பிரமாதமாக ரசித்துக் கொண்டிருந்தாராகையால் அவர் புன்முறுவலுடன், "தம்பி! இனி உன் பாரம் தீர்ந்தது! நீ வீட்டுக்குப் போ! அங்கே உன் தாத்தா உன்னைச் சவுக்கால் அடித்ததற்காக ரகசியமாக அழுது கொண்டிருப்பார். ஆனால் நீ ஒரு முழத் துண்டு எடுத்துக் கொண்டு போய் அவருடைய கண்ணீரைத் துடைக்க முயலாதே! அவரைக் கவனிக்காதவனைப் போலவே நீ நேரே உன் மாடியறைக்குப் போய்ப் பேசாமல் படுத்துக் கொள்! மறுநாள் பொழுது விடியும் வரை அவரிடம் எந்தப் பேச்சுவார்த்தையும் வைத்துக் கொள்ளாதே! அப்போதுதான் உங்கள் இருவருக்குமிடையேயுள்ள விரோதம் முற்றும்!" என்றார்.

"என் தாத்தாவோடு நான் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது எனக்குத் தெரியும்! நீர் ஒன்றும் புத்திமதி சொல்ல வேண்டாம்!" என்று பிச்சுமணி உதடுகள் படபடக்கத் தன் உள்ளக் குமுறலைக் கொட்டினான்.

ஜகந்நாதன் சிரித்துக் கொண்டார்.


உமாவோ மௌனமாகவே காரினுள் அமர்ந்திருந்தாள்.

அவளைப் பிச்சுமணி உற்றுப் பார்த்தான். ஏதோ ஒன்றைப் பறி கொடுப்பது போல் அவன் கண்கள் ஒரு கணம் ஏங்கித் தவித்தன.

பிறகு அவன் படீரென்று காரின் கதவைச் சாத்தி விட்டு, உமாவிடம் விடைகூடப் பெற்றுக் கொள்ளாமல், விர்ரென்று புறப்பட்டு மறுபடியும் திரும்பிப் பாராமலே வேகமாக நடந்து போய் விட்டான்.

உமா நீண்டதொரு பெருமூச்சு விட்டாள். பிச்சுமணி போனதும் அவள் நெஞ்சை அழுத்திக் கொண்டிருந்த பாரம் இறங்கி விட்டதைப் போல் இருந்தது. அவள் இலேசாகப் புன்முறுவல் பூத்தாள். அதே சமயம் பிச்சுமணியை நினைக்கும்பொழுது அவளுக்கு ஒரு பரிதாபமும் உண்டாகியது.

ஜகந்நாதன் தம் காரை ஸ்டார்ட் செய்து ஓட்டலானார்.



''பாவம்! பிச்சுமணியைச் சீண்டி விட்டு ஏன் வேடிக்கை பார்க்கிறீர்கள்?'' என்று உமா மெல்லக் கேட்டாள்.

''ஏனென்றால் அவனை என் விரோதியாகப் பாவிக்கிறேன்!''

'' விரோதியாகவா ?... பிச்சுமணியையா......?''

''ஏன்? அவனை வெகுளிப் பையன் என்று நினைக்கிறாய்?''

'' ஆமாம். தாயில்லாத பிள்ளை ! தாத்தாவிடம் செல்லமாக வளர்ந்து உலகம் தெரியாத வெகுளியாகி விட்டான் அவன்!''

''அவன் வளர்ந்த சரித்திரம் மட்டுமல்ல, அவனுடைய ஜனன ஜாதகமே விசித்திரமானதுதான்! அவன் தாயார் ஒரு நாடக நடிகை! அழகில் மாயா மோகினி! அந்த மோகினிக்காகப் பிச்சுமணியின் தகப்பன் தன் சொத்து சுகம், தன் ஜாதி ஜனம் அனைத்தையும் புறக்கணித்து விட்டு ஓடினான். அதுபோல் தம் பேரனும் தம் அந்தஸ்துக்கு ஒவ்வாத ஒரு பெண்ணுக்காகத் தம்மைப் புறக்கணித்து விட்டு ஓடி விடுவானோ என்று தாத்தா பயப்படுகிறார். பேரனோ தன் தாயாரின் மூக்குமுழியை அப்

படியே உரித்துக் கொண்டு பிறந்து அவருக்குந் தன் நாயாரை அடிக்கடி நினைவூட்டி ஆத்திரமூட்டிக் கொண்டிருக்கிறுன்!''

''ஓ; அதனுல்தான்....''

''ஆமாம்! அதனுல்தான் அவன் பெண்மையின் சாயலுடன் ரொம்ப அழகானவனுகத் தோன்றுகிறுன்! ஆனுல்... வாழ்க்கைக்கு அழகு மட்டும் இருந்தால் போதாது!''

''அவன் உங்களைப் போல் அறிவாளி இல்லை என்பதற்காகத்தான் அவனை ஏளனம் செய்கிறீர்களா?''

''இல்லை! அவன் வெகுளிப் பையனுக இருப்பதனுல்தான் அவன் மீது பகையுணர்ச்சி கொள்கிறேன்! மேலும், உணர்ச்சிகரமான வாலிபனைக் கண்டாலே எனக்குப் பொறுமைதான் உண்டாகிறது!''

''இல்லை, டாக்டர்! தான் என்ற உணர்வையே துறந்து ஆத்ம ஞானி போல் விளங்கும் உங்களால் எவர்மீதும் விரோதம் கொள்ளவோ, எதன் மீதும் பொறுமைப்படவோ முடியாது! நீங்கள் விரும்பினுலும்கூட அது உங்களால் முடியாது!'' என்று உமா சிரிக்க முயன்றுள்.

அவளுடைய நுட்பமான அறிவைக் கண்டு வியந்த ஜகந்நாதன் உள்ளூற அவளை மிகவும் பாராட்டினுர். தன்னைப் புரிந்துகொள்ளக் கூடிய ஒரே பெண் உமாதான் என்று நினைக்கும்போது அவருடைய வாழ்க்கையின் சூனியமெல்லாம் நிறைந்து விடுவது போல் ஓர் உணர்வு பொங்கியது.

பிறகு அவர் தம் மனத்துக்குள் ஏதோ திட்டமிட்டுக்கொண்டு, ''உமா! என் அண்ணியின் குழந்தைகளுக்கு நீ டியூஷன் சொல்லிக் கொடுப்பது போதாதென்று பிச்சுமணி வேறு அந்த வீட்டுக்கு வந்து அடிக்கடி வீணைக் கச்சேரி நடத்துகிறுனுமே!'' என்று கேட்டார்.

அதைக் கேட்டதும் உமா பலஹீனமான ஒரு புன்முறுவலை வரவழைத்துக் கொண்டு, ''உங்கள் அண்ணுவுக்கும் அண்ணிக்கும் பிச்சுமணியின் வீணை வாசிப்பு என்முல் மிகவும் பிடிக்கும்!'' என்றுள்.

''அவர்களுக்காக மட்டும் அவன் அங்கே வந்து வீணு கானம் பொழியவில்லை! வயதானவர்களைச் சந்தோஷப்படுத்த வேண்டும் என்று வாலிபர்கள் துடிக்க மாட்டார்கள்!.... அவனுக்கு அந்த வீட்டில்வேறு ஏதோ ஒரு கவர்ச்சி இருக்கிறது!''

''வேறு என்ன கவர்ச்சி....?'' என்று கேட்ட உமா சட்டென்று தன் உதட்டைக் கடித்துக் கொண்டாள். முகம் ருப்பென்று வியர்த்தது.

அவளுடைய மனே நிலையை ஊகித்துக் கொண்ட ஜகந்நாதன் ஒரு புன்சிரிப்புடன், ''உமா! நான் புதிதாக ஒரு காதல் நாவல் எழுதத் திட்டமிட்டிருக்கிறேன்! அதில் கதையம்சமோ, கண்ணீரைக் கொட்ட வைக்கும் சம்பவப் பின்னல்களோ இராது! ஆனுல் முற்றிலும் இருதயத்தின் நுட்பமான உணர்வுகள் சம்பந்தப்பட்ட நாவல்! அதை எழுதப் போகும் நானே இருதயமே இல்லாதவன்! ஆகவே பிறத்தியாரின் இருதயங்களைக் கொண்டுதான் நான் அந்த நாவலைப் பூர்த்தி செய்ய வேண்டும்! அந்த வகையில் நீ ஏதாவது உதவ முடியுமா?'' என்று கேட்டார்.

''உங்களுடைய கதாபாத்திரங்களைப் பற்றிஎனக்கென்ன தெரியும், டாக்டர்?''

''மூன்றே கதாபாத்திரங்கள்தான்! கதாநாயகி குண சுந்தரி! அறிவு, அழகு, அமைதி, அடக்கம் அனைத்தும் ஒருங்கே வாய்ந்தவள்! தெள்ளிய நீர் ஓடை போல் வாழ்க்கை நடத்துபவள்! அவளை இரண்டு வாலிபர்கள் காதலிக்கிறுர்கள். அவர்களில் ஒருவன் பரம முட்டாள்! ஆனுல் உணர்ச்சிகரமான வாலிபன்! இன்னெருவனே பரம அயோக்கியன்! ஆனுல் சிறந்த அறிவாளி! உலக அனுபவங்கள் அனைத்திலும் அடிபட்டு, சகல ஞானங்களிலும் கரை கண்டு வாழ்க்கையை இலகுவாக்கிக் கொள்ளும் தத்துவத்தைத் தன்னுள் வைத்துக் கொண்டிருப்பவன்! அவனுடைய காதலைக் குணசுந்தரி ஏற்றுக் கொண்டால் வாழ்க்கையைச் சரி சமமாகப் பகிர்ந்துகொண்டு தன்னியல்போ சுதந்திரமோ சிறிதும் குன்றுதபடி வாழ்க்கையை நிம்மதியாகவும் ஆனந்தமாகவும் நடத்த முடியும்! உணர்ச்சிகரமான முட்டாளின் காதலை ஏற்றுக் கொண்டாலோ, வாழ்க்கையே புயலாகி விடும்! அது அவளுக்கே தெரியும்! இந்த நிலையில் அவள் எவனுடைய காதலை ஏற்றுக் கொள்வாள்?'' என்று ஜகந்நாதன் கேட்டார்.

அவருடைய கேள்வி நாவலின் எல்லையைத் தாண்டித் தனிப்பட்ட முறையில் தொனிப்பது போல் இருந்ததால் உமா மௌனம் சாதித்தாள்.

''உமா! இந்தக் கேள்விக்கு இப்போது உன்னுல் பதில் சொல்ல முடியாது! நன்றுக ஆலோசித்து எப்போது வேண்டுமானுலும் பதில் சொல்! அதுவரை என் கதை காத்திருக்கும்!'' என்ற ஜகந்நாதன் அதற்குமேல் அவளிடம்



உடலின் வளைவுகளுக்கேற்றபோல் அமுக்கப்பட்ட ஆசனமும், முதுகுச்சாய்மானமும் மகிழ்ச்சியூட்டும் வசதியை அளிக்கக்கூடிய உறுதியான எஃகு குழாயினால் செய்யப்பட்ட உலோகப் பாகங்களெல்லாம் வாட்டி பெறும் முறையில் எனாமல் பூசப்பட்டுத் துருப்பிடிக்காமல் செய்யப்பட்ட நாற்காலியை வாங்குங்கள்.

சிறந்த தரத்தில் அடுக்கடுக்காக

- ஒவ்வொரு உலோகப் பகுதியும் 'பாண்டரைஸ்' செய்யப்பட்டது. துருப்பிடிக்காமல் வாட்டி எனாமல் பூசப்பட்டது.
- ஆசனம் மற்றும் முதுகுச் சாய்மானத்தின் அமைப்பு அதிக வசதியை அளிக்கிறது.
- ஈரத் துணியைக்கொண்டு துடைத்து எளிதில் சுத்தமாக வைத்துக்கொள்ளலாம்.
- மடக்குவதற்கு விசேஷ அமைப்பு.
- வழுக்கிவிடாத, தரையைக் கீறாத ரப்பர் அடிகள் கொண்டது.
- பல்வேறு வர்ணங்களில் கிடைக்கக் கூடியது.

CROMELITE
MANUFACTURING

ஆயிரம் காலம்
ஆள்வதற்கு

தயாரிப்போர்:
க்ரோம் லைட் (இந்தியா) பிரைவேட் லிட்.
பி-35 இந்தியன் எக்ஸ்சேஞ்ச் ப்ளேஸ், கல்கத்தா-1

பேச்சுக் கொடுக்காமல், அவனுடைய சிந்தனைக்கு அவகாசம் அளித்துவிட்டுக் காரை வேகமாக ஓட்டிச் சென்று நர்ஸிங்ஹோமை அடைந்தார்.

காரிலிருந்து உமா கீழே இறங்கியதும் வானத்தை நிமிர்ந்து பார்த்தாள். வானத்தில் காதல் நட்சத்திரம் என்று பிச்சுமணி குறிப்பிட்ட திசையை நோக்கி உமா தன்னையறியாமலே ஏதோ மந்திர சக்தியால் கட்டுண்டவள் போல் உற்றுப் பார்த்தாள்.

அந்த நட்சத்திரத்துக்கு இப்போது மூடு திரை போட்டது போல் கருமேகம் அதை மூடி மறைத்துக்கொண்டிருந்தது.

அத்தியாயம் முப்பத்துநான்கு

தென்றலும் புயலும்

"பிச்சுமணி! டேய், பிச்சுமணி! எங்கேடா இருக்கிறாய்?'' என்று இடி முழக்கம் போல் மேஜர் ராமதுரை கூச்ச லிட்டார்.

'' எஜமான் ! தம்பியைச் சும்மா சும்மா கூப்பிடாதீங்க. அது குளிச்சிக் கிட்டு இருக்கு!'' என்றான் பட்லர் இருதயசாமி பவ்யமாக.

''ராத்திரியிலே என்ன குளியல்?''

''தெருச் சகதி இலேசா உடம்பிலே பட்டுடுச்சாம்! சுத்தமாக் குளிச்சிட்டுத் தான் சாப்பிட வருவேன்னு போய் இருக்கு!'' என்றான் இருதயசாமி.

அவனை எரித்து விடுவது போல் மேஜர் முறைத்துப் பார்த்து விட்டுத் தம் பேரன் குளித்துக் கொண்டிருக்கும் பாத்ரூமை நோக்கிப் பாய்ந்து சென்றார்.

அந்தக் குளியலறையின் கதவு சாத்தியிருந்தது! உள்ளே குழாயிலிருந்து நீர் வீழ்ச்சி பொழியும் சத்தமும், குளியல் தொட்டியில் பிச்சுமணி ஆனந்தமாக நீந்தி விளையாடுவது போல் தண்ணீரைக் கைகளால் தட்டும் சலசலப்பும் கேட்டன. அது மட்டுமல்ல; அவன் அதி உற்சாகமாகப் பாடிக் கொண்டிருக்கும் ஒரு சினிமாப் பாடலின் அடிகளும் உள்ளிருந்து பாய்ந்து வந்து மேஜரின் செவிகளைத் துளைத்தன.

'' காலங்களில் அவள் வசந்தம்;
கலைகளிலே அவள் ஓவியம்;
மாதங்களில் அவள் மார்கழி;
மலர்களிலே அவள் மல்லிகை.''

அந்தச் சினிமாப் பாடலைப் பிச்சுமணி வெறுமனே தன் வாயால் சீட்டியடித்துத் தொலைத்திருந்தாலும் பரவாயில்லை. ஆனால் அவனோ வார்த்தைகளை வெகு தெளிவாக உச்சரித்து அவற்றின் கருத்துக்களை ஆழ்ந்த உணர்ச்சியுடன் வெகு ரசமாக அனுபவித்துப் பாடிக் கொண்டிருந்தான்.

மேஜருக்குப் பொறுக்க முடியவில்லை. குளியலறைக் கதவின் மீது அவர் ஓங்கி ஒரு குத்து விட்டார் !

கதவு உட்புறம் தாண்டப் படாததால் அவருடைய குத்தைத் தாங்க முடியாமல் அது படீரெனத் திறந்து கொண்டு நிலை தடுமாறி உள் விளக்கு வெளிச்சத்தில் பூதாகாரமான நிழலுடன் ஆடியது. நல்ல வேளை; அந்தக் கதவு திறந்த வேகத்தில் மேஜர் தலை குப்புற விழுந்து விடவில்லை!

பிச்சுமணி தன் காதல் பாட்டைப் பாதியில் நிறுத்திவிட்டுச் சட்டென்று தவ்வித் தண்ணீர்த் தொட்டிக்குள்ளேயே கழுத்தளவு தண்ணீருக்கடியில் தன்னை அமிழ்த்திக் கொண்டு, தலையை மட்டும் மெல்ல வெளியே நீட்டித் தன் தாத்தாவை ஏறிட்டுப் பார்த்தான்.

மேஜர் மின்னலிடும் விழிகளால் தம் பேரனை வெறித்து நோக்கியபடி, ''டேய் பிச்சுமணி?'' என்று ஏதோ விசாரிக்க ஆரம்பித்தார்.

''போங்க, தாத்தா! நான் குளித்து விட்டு வருகிறேன்! இல்லாவிட்டால் நான் சாப்பிட வருவதற்குள் உங்கள் சாப்பாட்டு 'டயம்' கடந்து போய் விடும் !'' என்று பிச்சுமணி செல்லமாகக் கடிந்துகொண்டு தன் தற்காப்பு அஸ்திரத்தைத் தொடுத்தான்.

''நான் சாப்பிட்டால் என்ன, சாப்பிடா விட்டால் உனக்கென்னடா ?'' என்று விரக்தியுடன் கொதித்த மேஜர் ''உன் தோளுக்கு ஏதாவது மருந்து போட்டாயாடா?'' என்று பரபரப்புடன் அழாத குரலில் தம் கௌரவத்தையும் விட்டுக் கொடுக்காமல் ஜம்பமான ஆத்திரத்துடனே கேட்டார்.

''இல்லே, தாத்தா!'' என்றான் பிச்சுமணி வெகு அலட்சியமாக.

''அடப் பாவி! நல்லாக் காயம் பட்டிருக்குமேடா?''

''இல்லே, தாத்தா! நீங்கள் அடித்தது சின்ன சவுக்குத்தானே! இலேசாகத் தான் தோலைப் பிய்த்துக் கொண்டு போயிற்று! பெரிதாகக் காயம் ஒன்றும் இல்லே. நீங்கள் வீணாக அலட்டிக் கொள்ள வேண்டாம் !''

''அட, மடையா! 'செப்டிக்' ஆகிவிட்டால் என்னடா பண்ணுகிறது? உடனே ஊசி போட்டுக் கொள்ள வேண்டாமோ?....டாக்டர் ஜகந்நாதனை உன் பின்னாலேயே அனுப்பினேனேடா...?''

''அந்த டாக்டர் என் மீது கைவைத்தால் அவ்வளவுதான்! காயம் பெரிதாகி விடும்!'' என்று பிச்சுமணி சினத்துடன் சீறினான்.

அவனுடைய வாசகத்தின் உட்பொருள் மேஜருக்குப் புரியவில்லை.

அவர் தம் கருவியிலேயே, ''மடையா! மடையா! எல்லாம் உன்னாலேதான்!'' என்று குற்றச்சாட்டுகளைப் பொழிவதற்கு ஆயத்தமானார்.

''தாத்தா! நீங்கள் ஏதாவது என்னை விசாரிக்க வேண்டும் என்றால் சாப்பாட்டு நேரத்தில் வைத்துக் கொள்ளலாம்!''

''திருட்டுப் பயல்! சாப்பிடும் போது பேசினால் ஜீரணமாகாது என்று நான் வாயை மூடிக் கொண்டிருப்பேன். அது உனக்குத் தெரியும்!'' என்று மேஜர் துள்ளினார். இவ்வளவு எத்தனை பேரனை என்ன செய்வதென்று புரியாமல் கைகளைப் பிசைந்தார்.

''தாத்தா! என்னோடு சமாதானம் செய்து கொள்வதற்காகத்தான் இவ்வளவு அவசரமாக இங்கே வந்தீர்கள் என்று நினைத்தேன்! இல்லாவிட்டால் உங்களை இங்கே நுழையவே விட்டிருக்க மாட்டேன்!''

''ஓஹோ! என்னைப் பிடித்து வெளியே தள்ளிக் கதவைச் சாத்திக் கொண்டு விடுவாயோ? எங்கே தள்ளு பார்ப்போம்! தள்ளு பார்ப்போம்!'' என்று மேஜர் நிமிர்ந்து நின்றார்.

''தாத்தா! நான்தான் போடிப் பயல் என்பது உங்களுக்குத் தெரியுமே! என்னோடு கட்டி கட்டிக் கொண்டு ஏன் தாத்தா சண்டைக்கு வருகிறீர்கள்?'' என்று குறும்புச் சிரிப்புடன் சொன்ன பிச்சுமணி, தண்ணீருக்கடியில் தன் தலையைப் புதைத்துக் கொண்டான்.

''டேய்! உன் வாய் ஜாலத்தால் என்னை ஏமாற்றப் பார்க்கிறாயா? எழுந்து உட்காருடா...! நான் சொல்வது உன் காதில் விழுகிறதா இல்லையா? எழுந்து உட்கார்ந்து என்னை நிமிர்ந்து பாரடா!'' என்று மேஜர் கிழட்டுச் சிம்மம் போல் கர்ஜித்துக் கொண்டே தண்ணீர்த் தொட்டியை நோக்கிப் பாய்ந்து வந்தார்.

தொட்டிக்குள் இருந்தபடியே பிச்சுமணி தன் ஈரக்கைகள் இரண்டையும் வெளியே நீட்டி 'சிக்னல்' காட்டுவது போல் ஆட்டியவண்ணம், ''வேண்டாம் தாத்தா! இன்றைய அந்தி நேரச் சம்பவத்தைப் பற்றி நாம் வீணாகப் பேசிச் சண்டை போட வேண்டாம்! அதனால் ஒரு பலனும் ஏற்படப் போவதில்லை! கடைசியில் நாம் இரண்டு பேரும் ஒருவருக்குத் தெரியாமல் ஒருவர் அழுவதுதான் மிச்சமாக இருக்கும்!'' என்றான்.

அந்த வாசகத்தைக் கேட்டதும் கிழவர் அப்படியே ஒரு கணம் அயர்ந்து நின்று விட்டார்! தம் பேரன் தம் உள்ளத்தை எவ்வளவு தூரம் புரிந்து வைத்திருக்கிறான் என்பதை நினைக்கும்போது அவர் மனம் குழைந்தது. பிறகு அவர் தம் பழைய வீராப்பை வலுவில் வரவழைத்துக் கொண்டு கரகரக்கும் குரலில், ''டேய், முட்டாள்! எல்லாம் உன்னால் வந்த வினைதானடா! நான் சவுக்கால் அடித்தபோது நீ மட்டும் குறுக்கே வராமல் இருந்தால்.....'' என்று ஆத்திரத்துடன் ஏதோ சொல்ல முயன்றார்.

அதற்கு மேல் பிச்சுமணி எதையும் கேட்க விரும்பாதவன் போல் தன் இரு காதுகளுக்குள்ளும் தன் இரு விரல்களை விட்டுச் செவிப் புலனை மூடி மறைத்துக் கொண்டு, ''தாத்தா! இனி மேல் அதைப் பற்றி நீங்கள் பேசுவதானால் நான் எதையுமே கேட்கப் போவதில்லை! என் காதுகள் இரண்டையும் செவிடாக்கிக் கொண்டு விடுவேன்!'' என்று கத்தினான்.

போட்டா போட்டி !



மேஜர் திடுக்குற்றுத் தம் பேரனை வெறித்துப் பார்த்தபடி ஒரு கணம் அசைவற்று நின்றார். பிறகு அவர் நாடியிழந்தவராய் அப்படியே பின்வாங்கிச் சென்று வாய்க்குள் ஏதோ முணு முணுத்தபடி மாடிப் படிகளில் தடதட வென்று இறங்கிச் சாப்பாட்டு மேஜையின் முன் போய் நின்றார்.

அவர் இளம் மேஜராகப் பட்டாளத்தில் பணியாற்றிய காலத்தில், கொம்பு மீசையை முறுக்கிக் கொண்டு அவர் சிம்மம் போல் நின்றாராளுல் வெறும் பயப் பிராந்தியை மூட்டுவதாலேயே, எந்தவித நெருக்கடியையும் எளிதில் சமாளித்து விடுவார்! எத்தகைய வில்லாதி வில்லனையும் கொசுப் போல் ஊதித் தள்ளி விடுவார்! ஆனால் இப்போதோ — ? தம் கைகளாலேயே எடுத்து வளர்த்த தம் பேரப் பிள்ளையையும், அவனால் ஏற்படும் நெருக்கடியையும் அவரால் சமாளிக்க முடியவில்லை! அவனை அவ்வாறு தூண்டி விட்டுத் தமக்கு எதிராகக் கட்சி கட்டிக் கொண்டு நிற்கும் எதிரியோ ஒரு பெண் கேவலம் ஒரு சாதாரணப் பெண்!

அவருடைய கழுகுக் கண்கள் அண்டரண்டப் பட்சிகளாக மாறி அடிவானத்துக்கு அப்பாலும் ஊடுருவிப் பறக்க முயல்வது போல் கூர்மையாக மின்னின. கண்களின் அந்த மின்னலிடையே கண்ணீரின் கசிவும் ஆத்திரத்தின் கனலும் சேர்ந்து கொள்ளவே அவருடைய கண்ணீர்த் துளியின் வட்டத்துக்குள்ளேயே ஒரு பெண்ணின் உருவம் பிரதிபலித்தது. அந்தப் பெண் — அன்று அந்தி நேரத்தில் தமக்கும் ஆட்டுக்குட்டிக்கும் இடையே குறுக்கிட்டு வந்து நின்ற பெண்ணுருவம் தான்! அவருடைய சவுக்கடிக்குரிய ஆட்டுக்குட்டியை அவரிடமிருந்து கைப்பற்றிச் செல்வதற்காக அந்தப் பெண் அவருடைய வழியில் வந்து நின்றது மட்டுமல்லாமல் அவருடைய ஆட்டுக் குட்டியைக் கவர்ந்து கொண்டு அவர் தம்மிடம் நெருங்காதபடி வழிமறிப்பது போல் மிகவும் தீர்மானமாகத் தலை நிமிர்ந்து நின்றாள். அந்தக் காட்சி மறுபடியும் அவருடைய மனக் கண்முன்னால் வந்து நின்றதும், ''துரோகி! நெஞ்சழுத்தக்காரி.....!'' என்று அவருடைய உதடுகள் ஆத்திரத்துடன் முணுமுணுத்தன.

அவருடைய வெறுப்பின் பார்வை முன்னால், மாயப் பிரமை போல் மற்றொரு காட்சி எழும்பியது. இப்போது அந்தப் பெண் அற்பமான ஆட்டுக்குட்டிக்கும் அவருக்குமிடையே நிற்கவில்லை. அவருடைய சொந்தப் பேரனுக்கும் அவருக்குமிடையேதான் குறுக்கே நிற்கிறாள். அதிலும் அவருடைய சொந்த வீட்டிலேயே, மாடிப் படிகளில் கைகள் இரண்டையும் அகல விரித்து நீட்டி, வழியடைத்துக் கொண்டு நிற்பது போலவே அந்தப் பெண் சிறிதும் பயப்படாமல் தலை நிமிர்ந்து நிற்கிறாள். அவளுக்குப் பின்னால் பிச்சுமணி தன் உதடுகளில் புன்முறுவலுடனும், கண்களில் ரசனை ஒளியுடனும் இறங்கி வந்து கொண்டிருக்கிறான். அது மட்டுமல்ல, பிச்சுமணி இறங்கி வந்து அந்தப் பெண்ணின் முதுகுப்புறம் நின்றதும் அவளைக் குழந்தை போல் அந்தக் கள்ளி தூக்கிக் கொண்டு மாடி அறைக்கு ஓடிக் கதவைப் படீரெனச் சாத்திக் கொண்டு விடுகிறாள்! அது கிழவரின் முகத்தில் பளாரென்று அறைந்து வெளியே தள்ளுவது போலிருக்கிறது.....

இந்தக் கற்பனைக் காட்சியைத் தம் மனப் பிரமையில் மேஜர் கண்டதும் சிம்மாசனம் போன்ற ஒரு பழைய நாற்காலியில் தொப்பென்று உட்கார்ந்து விட்டார். அவர் மட்டும் வீரப் பரம்பரையைச் சேர்ந்தவராக இல்லாதிருந்திருந்தால் தம் முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டு குழந்தை போல் விம்மி விம்மி அழுதிருப்பார். **(தொடரும்)**

அக்கப்போர்

மாலை வேளைகளில் போதனை செய்யும் கல்லூரிகளை ஆரம்பித்தால் தங்களுக்கு வரும் குறைந்துவிடுமென்று சினிமாத் தொழிலிலீடுபட்டவர்கள் கூடிக் கண்டனத் தீர்மானமொன்று நிறைவேற்றப் போகிறார்கள்.

✲

இப்போது தங்கள் சம்பளம், பிரயாணச் செலவு முதலியவை சம்பந்தமாகப் பெறும் செக்குகளை மட்டுமே பாங்கில் கட்டி வரும் மந்திரிகளுள் பலர் பாங்குகள் தேசிய மயமானுல் மற்ற பலவிதமான செக்குகளையும், பல நூறு ரூபாய், ஆயிரம் ரூபாய் நோட்டுக்களையும் பாங்கில் கட்டத் தயாராயிருக்கிறார்கள்.

✲

1965ம் ஆண்டு தமிழ் நாட்டில் ஆரம்பிக்கப்படவிருக்கும் புதிய எஞ்சினீயரிங் காலேஜில் இடம் பிடிப்பதற்காக இப்போது பலர் மனுக்களைப் போட்டுவிட்டுச் சிபாரிசுகள் பிடிக்க மூட்டை கட்டிக் கொண்டு கிளம்பி விட்டனர்

ஆண்டவன் இந்த உலகில் குறிப்பிட்ட சிலர் மூலமே அரிய, பெரிய காரியங்களை நடத்துகிறார். ஒரு தனி நபருடைய வாழ்நாளின் சாதனை என்று நம்பமுடியாத அளவுக்குச் சிலர் தொண்டு செய்கிறார்கள். நாம் அந்த மாதிரி சேவை செய்யப் போகிறோம், மக்களிடையே நல்ல மனமாற்றங்களை உண்டாக்கி ஒரு சமூகத்தையே உயர்த்தப் போகிறோம் என்று தெரிந்துகொண்டு அவர்கள் தொண்டாற்றுவதில்லை. அது இயல்பாகவே அப்படி அமைந்து விடுகிறது. இதையே ஈசுவர சங்கல்பம் என்று குறிப்பிடுகிறோம்.

இந்த மாதிரி நல்ல காரியம் செய்வதற்கே பிறந்திருக்கும் ஒருசில பெண்மணிகளில் ஸ்ரீமதி ருக்மிணி அருண்டேல் முக்கிய ஸ்தானம் வகிக்கிறார். நம்முடைய தற்போதைய சமூக வாழ்க்கையில் கலாரசனையும், தூய்மையான கலைகளில் ஆர்வமும், இந்தியப் பண்பாடும் மிளிர்கிறதென்றால், அதற்கு ஸ்ரீமதி ருக்மிணி அருண்டேல் பெரும்பாலும் காரணமாவார்.

நம் நாட்டுக் கலைகள் எதுவாக இருந்தாலும் சித்திரம், சிற்பம், சங்கீதம், நாட்டியம் எதுவானாலும் அவை நம்மை ஆத்மீகத் துறைக்கே அழைத்துச் செல்கின்றன. கண்களுக்கோ, காதுகளுக்கோ மட்டும் இன்பம் பயப்பன அல்ல என்பதை நமக்கு உணர்த்தியவர் ஸ்ரீமதி ருக்மிணி தேவி.

''பெஸண்ட் கல்ச்சுரல் சென்டர்'' என்ற ஒரு ஸ்தாபனத்தின் டைரக்டராக இருந்து அவர் செய்துகொண்டிருக்கும் பணி வியப்புக்குரியதாகும்.

இந்த ஸ்தாபன நிர்வாகக் குழுவினரின் மேற்பார்வையில், டாக்டர் பெஸண்ட் அம்மையாரின் ஞாபகார்த்தமாகத் தொடங்கப்பட்ட ஓர் உயர்நிலைப் பள்ளி, கலா க்ஷேத்திரம் என்ற கலைக் கல்லூரி, பெஸண்ட் மாண்டிஸோரி ஸ்கூல் என்னும் சின்னஞ் சிறு குழந்தைகளின் பாலர் பள்ளி, அருண்டேல் டிரெயினிங் சென்டர் என்னும் உபாத்தியாயர்களின் பயிற்சிக் கூடம் இத்தனையும் இயங்கி வருகின்றன.

இந்த எல்லா ஸ்தாபனங்களையும் நிர்வகித்து இதை ஓர் உலக சர்வகலாசாலையாகவே ஆக்கிவிட வேண்டுமென்று கனவு கண்டு வருகிறார் ஸ்ரீமதி ருக்மிணி தேவி. அவருடைய மற்றக் கனவுகள் நிறைவேறி இருப்பது போலவே இதுவும் நிச்சயம் நிறைவேறும்?


ஸ்ரீமதி ருக்மிணி தேவியின் பொது வாழ்க்கை டாக்டர் அருண்டேலை மணம் புரிந்து கொண்டதிலிருந்து ஆரம்பமாகி விட்டது என்று சொல்ல வேண்டும். எத்தனையோ எதிர்ப்புக்களையும், கண்டனங்களையும், பதினாறு வயதுச் சிறுமியாக இருந்த போதே அவர் தைரியமாக நின்று சமாளிக்கும்படி நேரிட்டது.

அப்போது முதல் தியஸாபிகல் சொஸைட்டி வேலையாக டாக்டர் அருண்டேல் அவர்களுடன் பற்பல தடவைகள் வெளி நாடுகளுக்கெல்லாம் பிரயாணம் செய்திருக்கிறார்.

இயல்பாகவே அவருக்குக் கலைகளில் ஆர்வம் இருந்தபடியால் சென்ற தேசங்களில் எல்லாம் யார் சிறந்த கலைஞரோ அவரைப் பார்க்கவும், எது அந்த நாட்டில் சிறந்த கலையோ அதைத் தெரிந்து கொள்ளவும் ஆசைப்பட்டார்.

ஒரு சமயம் பாலே நாட்டியத்தின் அரசியாக விளங்கிய ஸ்ரீமதி அன்னா பாவ்லோவாவின் நாட்டியத்தைப் பார்த்துப் பிரமித்துப் போனார். அன்னா பாவ்லோவா இவருடைய கலையார்வத்தைக் கண்டு வியந்து பாலே நடனம் கற்றுக் கொள்ளும்படி தூண்டினார். ஸ்ரீமதி ருக்மிணிதேவியும் ஆர்வத்துடன் பயின்றார். இந்தப் பயிற்சியே அவர் பரத நாட்டியம் பயிலும்போது உறுதுணையாக இருந்ததென்று சொல்லலாம். ருக்மிணி தேவியின் ஆர்வத்துக்குத் தகுந்த உபாத்தியாயர் கிடைத்தது ஓர் அதிர்ஷ்டம் என்றே சொல்ல வேண்டும். பந்தநல்லூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களுக்கும் ஓர் ஆதர்ச மாணவி கிடைத்துவிட்டார்.

நாட்டியம் பயில ஆரம்பித்த புதிதில் ருக்மிணி தேவி அவர்கள் பல மணி நேரம் விடாமல், களைப்படையாமல் சாதகம் செய்வாராம். நாட்டியம் செய்யச் செய்ய அடவுகளின் பூரண உருவத்தை அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. டாக்டர் அருண்டேல் அவர்கள் இதற்கு ஊக்கம் அளித்தார். பண்டிட் ஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் நாட்டிய சாஸ்திரம், அபிநய தர்ப்பணம் முதலிய நூல்களிலிருந்து அதன் இலக்கணத்தை எடுத்துச் சொல்லுவார். சம்பிரதாய நாட்டியத்தில் வழக்கிலிருந்த



பரதத்துக்கு அறுபது



முத்திரைகளும் அடவுகளும் இந்த இலக்கண முறைப்படி சிறிதளவு மாற்றி யமைக்கப்பட்டு அழகுபடுத்தப் பட்டன.

நாட்டியம் செய்யும் முறையில் ஒரு புதுமையை உண்டாக்கியவர் ருக்மிணி தேவி. வழக்கத்திலிருந்த பதங்கள், வர்ணங்கள் இவற்றைத் தவிர புதிதாகத் தியாகராஜ கிருதியான ''ராரஸீதா'' தீக்ஷிதர் கிருதியான ஆனந்த நடனப் பிரகாசம் இவற்றை நாட்டியத்துக்கு அழகுபட அமைத்துச் செய்தும் காட்டினார். இப்போது பிரபலமாகியுள்ள 'ஏன் பள்ளி கொண்டீரய்யா?', 'நடனமாடினார்', நந்தன் சரித்திரக் கீர்த்தனை 'வருகலாமோ?' இவையெல்லாம் அவரால் பிரபலமடைந்தவையே.

ஸ்ரீமதி ருக்மிணி தேவியைச் சுற்றிக் கலைஞர்களும் ரசிகர்களும் சூழ ஆரம்பித்தார்கள். கலாக்ஷேத்திரம் தானாகவே தொடங்கிவிட்டது. சங்கீதத்தில் மகா மேதைகளான டைகர் வரதாச்சாரியார், வீணை கிருஷ்ணமாச்சாரியார் முதலியோர் அடையாற்றுக்கு வந்து இருக்கத் தொடங்கினார்கள்.

கலாக்ஷேத்திரம் ஆரம்பித்தது முதல் ஸ்ரீமதி ருக்மிணி தேவி அவர்களுக்கு மனப்பூர்வமாகப் பிரியத்தோடு ஒத்துழைத்த கலைஞர்கள் எத்தனையோ பேர். ஸ்ரீ பாபநாசம் சிவன், மைலாப்பூர் ஸ்ரீமதி கௌரி அம்மாள், மைசூர் ஸ்ரீ வாசுதேவாச்சாரியார், வீணை ஸ்ரீ சாம்பசிவ ஐயர் அவர்கள் முதலியோர் ஆர்வத்தோடு கலைகளைப் பயிலுவித்தார்கள்.

ஸ்ரீமதி ருக்மிணி தேவியின் பணிகளில் மிகச் சிறந்தது அவர் மிகவும் பிரயாசைப் பட்டுத் தயாரித்திருக்கும் கலாக்ஷேத்திராவின் நாட்டிய நாடகங்களே என்று சொல்லலாம். இவற்றில் தாம் செய்த பிரயாணங்களின் போது கண்டும், கேட்டும் அறிந்த பலப் பல விஷயங்களில் எது சிறந்ததோ, எது நம் பண்பாட்டுக்குப் பொருந்துமோ அந்த அம்சங்களைச் சேர்த்துப் பொலிவுபெறச் செய்திருக்கிறார். விரஸத்தை விலக்கி, ரஸத்தைப் பெருக்கிய அவருக்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.




பல வருஷங்களுக்கு முன்பு அதாவது 1933–34ம் ஆண்டுகளில் ஸ்ரீமதி ருக்மிணி அருண்டேல், ''நம் நாடு சுதந்திரம் அடைந்தால் நான் பிராணிகளுக்குத்தான் தொண்டு செய்வேன். மனித குலத்துக்கு எத்தனையோ தொண்டர்கள் இருக்கிறார்கள். நம்முடைய நண்பர்களான மிருகங்களுக்குத்தான் அதிகத் தோழர்கள் இல்லை. நான் தேர்தலுக்கு நின்றால் யானை குதிரை முதலிய பிராணிகள்தான் ஓட்டுப் போடும்!'' என்று அடிக்கடி சொல்வாராம். இதை அவர் வேடிக்கையாக மட்டும் சொல்லவில்லை. இன்றைக்கும் வாயில்லா ஜீவன்களுடைய கஷ்டங்களைக் குறைப்பதற்கு அவர் முயற்சி எடுத்துக் கொண்டு பல எதிர்ப்புக்களைச் சமாளித்துத் தொண்டு புரிந்து வருகிறார்.

ஸ்ரீமதி ருக்மிணிதேவி கூறுவதைப் பாருங்கள்! ''வெறும் அரசியல் பாரத நாட்டைக் குழப்பத்தில் ஆழ்த்திவிடும். பண்பாடு இல்லாத அரசியல், கலாசாரத்தை உணராத அரசியல் நம்மைக் கொடூர சித்த முள்ளவர்களாக்கி விடும்....

''தக்ஷசீலத்தில் நிறுவப்பட்டிருந்த கல்விக் கூடத்தைப் போன்ற கலாசாலைகள் நம் நாட்டில் ஏற்படப் போகிறதென்றும், நம் புண்ணிய பூமியில் சிறந்த தலைவர்களும், ஆத்மீக வாழ்க்கையில் ஈடுபடும் மகான்களும் தோன்றி உலவுவார்கள் என்று நம்புகிறேன்.''

இது அவருடைய நம்பிக்கையாக மட்டுமல்லாமல், பாரத மண்ணில் பிறந்த நம் ஒவ்வொருவருடைய நம்பிக்கையும் இதுவாகவே இருக்க வேண்டும்.

''எல்லோருக்கும் வருஷத்தில் ஒரு முறை பிறந்த நாள் வருகிறது. எனக்கோ நான்கு வருஷங்களுக்கு ஒரு முறைதான் வருகிறது'' என்று அவர் வேடிக்கையாகச் சொல்லுவார். ஏனென்றால் 1904 ஆம் ஆண்டு பிப்ரவரி 29ம் தேதியன்று அவர் பிறந்தார். இந்த விதமாகப் பார்க்கும்போது இன்று அவரது பதினைந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடப் போகிறோம். இதே கணக்குப்படி அவர் நூறாண்டு வாழ வேண்டும் என்றும் பிரார்த்திக்கிறோம்! இந்த யௌவன வயதில் அவர் நமது கலாசாரம் அகில உலகுக்கும் பரவிப் பாரதம் பெருமையுறத் தொடர்ந்து தீவிரமாகப் பாடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.



குளுமை
நிறைந்த சில
உண்மைகளைக்
கற்றுக்
கொள்வோம்
வாரீர்



இதுதான் ரெப்ரிஜிரேட்டர் எனப்படுவது. இதன் பெயர் ஆல்வின். நீங்கள் மிகமிகக் குறைந்த விலையில் வாங்கக்கூடிய மிகப் பெரிய அளவு ரெப்ரிஜிரேட்டர் இது. இதன்மூலம் அதிகமான ஐஸ் கிடைக்கும். ஐஸ்கிரீம், ஜெல்லிகள், குளிர்ந்த பானங்கள், புட்டிங்குகள், மற்றும் புரூட் சாலட் முதலியன எப்பொழுதும் குளுமையாக இருக்கும் இதனுள். பாடம் முடிந்துவிட்டது. ஆல்வின் ரெப்ரிஜிரேட்டரை நேரில் கண்டு களிக்கலாம் வாருங்கள்.

மற்றும் சில உண்மைகளைக் கவனியுங்கள்:

குறைந்த அளவு மின்சாரமே போதும்: மாதந்தோறும் ஒரு சில ரூபாய் பெறுமான மின்சாரமே போதும் ஆல்வினுக்கு.

விரைவில் ஐஸ் உற்பத்தி: சுமார் 1½ மணி நேரத்திற்குள்ளேயே உங்கள் குடும்பம் முழுவதற்கும் தேவையான ஐஸ் கிடைக்கும்.

விசேஷ பாகங்கள்: டேபிள்-டாப், வாட்டர் கூலர் மற்றும் குளிர் நீர்க் குழாய் ஆகியவற்றிற்கு அதிகப் பணம் செலுத்தவேண்டும்.

விலை ரூ. 1,090
(எக்ஸைஸ் டூட்டி மற்றும் ஏனைய வரிகள் தனி)
சீல்டு யூனிட் 5 ஆண்டுகளுக்கு உத்திரவாதமளிக்கப்பட்டிருக்கிறது. ஓராண்டிற்கு இலவசச் சேவை.
ஆல்வின் வரிசையில்:
ஆல்வின் பிரஸ்ட்கோல்டும் (6.25 கன அடி)
ஆல்வினும் (9 கன அடி) சேர்க்கப்பட்டுள்ளன.

புதிய ஆல்வின்
ரிப்ரிஜிரேடர் 4.4 கன அடி

தி ஹைதராபாத் ஆல்வின் மெடல் வொர்க்ஸ் லிட்., சனத்நகர், ஹைதராபாத்-18

ASP/HAH/P 6

பம்பாய் ஆபீஸ்: ஆக்ரா ரோடு, பாண்டுப், பம்பாய்-78
ஷோரூம்கள் :
15/1, ஆஸப் அலி ரோடு, புது டில்லி
பெங்கால் ஸ்டோர்ஸ், 8-A, சௌரங்கி பிளேஸ், கல்கத்தா
150-A, கிராஸ் மான்ஷன், மவுண்ட் ரோடு, சென்னை
216, கன்டோன்மென்ட், ஹைதராபாத்

இன்றைய பிரச்னை:

ஜோர்டான் நதி விவகாரம்

உலகப் படத்தைச் சற்றுக் கவனித்தால் இஸ்ரேயில் என்கிற யூதர்களின் ராஜ்யமானது எகிப்து, ஸிரியா, ஜோர்டான் ஆகிய அரபு நாடுகளால் முறையே தெற்கு வடக்கு கிழக்குப் புறங்களிலும் மத்திய தரைக் கடலால் மேற்குப் புறத்திலும் சூழப்பட்டிருப்பதைக் காணலாம்.

இரண்டாம் உலக யுத்தம் முடிந்ததும் பாலஸ்தீனம் பிரிக்கப்பட்டு யூதர்களுக்கென ஒரு தாய்நாடாக இஸ்ரேயில் ஸ்தாபிதமானதே அராபியர்களுக்கு மனக் கொதிப்பை அளித்தது. 1948ம் வருஷத்திய யுத்தமும் 1956ல் ஸூயஸ் கால்வாய்ப் போரும் நிலைமையை மேலும் மோசமாக்கிப் பகைமையை வளர்க்கவே செய்தன.

இஸ்ரேயிலின் நீர் வளம் மிகுந்த வடக்குப் பகுதி மலைப் பாங்கானது, சாகுபடிக்கு ஏற்றதல்ல. மத்திய தென் பகுதிகள் சமவெளியாக, விவசாயமும் தொழில் வளமும் பெருக ஏற்றதாக உள்ள போதிலும் வறண்ட பூமியாக இருக்கிறது. ஆகவே இஸ்ரேயில் மக்கள் வடக்கே இருந்து நீரை மத்திய தென் பகுதிகளுக்குக் கொண்டு வர வேண்டிய நிர்ப்பந்தமான நிலையில் உள்ளார்கள்.


1953ல் அன்றைய அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஐஸனோவர் தமது பிரதிநிதியாக எரிக் ஜான்ஸ்டன் என்பவரை அனுப்பி வைத்தார். அவர், ஜோர்டான், இஸ்ரேயில், லெபனான், ஸிரியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளாக வந்த நிபுணர்களுடன் கலந்து ஆலோசித்து ஜோர்டான் — யார்முக் நதிகளின் நீரை அந்நாடுகள் எப்படிப் பகிர்ந்து கொள்ளலாம் என்பதற்கு ஒரு திட்டம் வகுத்துக் கொடுத்தார். அப்போது எல்லா அரசாங்கங்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட இத்திட்டம் 1955ல் அரசியல் காரணங்களுக்காக அராபிய லீக்கின் ஒரு கூட்டத்தில் நிராகரிக்கப்பட்டது!

மேல் ஜோர்டான் நதி நீரானது வடக்கேயிருந்து இஸ்ரேயிலுக்குள் நுழைந்து வந்து டின்னரெட் ஏரியில் விழுந்து, பிறகு கீழ் ஜோர்டான் நதியாகத் தெற்கு நோக்கிப் பாய்ந்து போய், இறந்த கடலில் (Dead Sea) சங்கமமாகிறது. கீழ்ஜோர்டான் நதியின் அடிவாரத்தில் வழிநெடுக உப்புநீர் ஊற்று ஓடைகள் கலப்பதால் அதன் உப்புச் சத்து மிக அதிகமாகிறது. அந்நீர் சாகுபடிக்கு லாயக்கற்றதாகப் போகாமல் காப்பாற்றுவது இதில் வந்து கலக்கும் யார்முக் நதியின் நீர்தான்.

ஆனால் ஜோர்டான் தேசம் 1958ல் யார்முக் நதியின் நீரை வேறு திசையில் திருப்பிவிட ஒரு திட்டத்தை ஆரம்பித்தது. இதனால் இஸ்ரேயில் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்பதினால் இஸ்ரேயில் அரசாங்கம் டின்னரெட் ஏரியிலிருந்து பெரிய குழாய்கள் மூலம் நீர் கொண்டு வந்து (பியட் ஷியான் திட்டம்) விவசாயிகளின் நஷ்டத்தை ஈடுசெய்து வருகிறது. யார்முக் நதி ஸிரியாவில் தொடங்கி, பின்னர் ஸிரியா — ஜோர்டான் எல்லையாகவே அமைந்து, பிறகு இஸ்ரேயில் நாட்டின் எல்லைப்புறத்தில் ஜோர்டான் நதியுடன் கலப்பதால் மூன்று நாடுகளுக்குமே அந்நதியினிடம் உரிமை உண்டு என்கிறது இஸ்ரேயில். அது மட்டுமல்ல, ஜோர்டான் செய்கையால் பாழாக்கப்படும், கீழ் ஜோர்டானின் நதி நீர் எழுபத்துமூன்று மைல் அளவே இஸ்ரேயில் நாட்டில் பாய்கிறது. பிறகு வெகு தூரம் ஜோர்டான் நாட்டின் வழியாகவே தான் பாய்கிறது. ஆகவே தனக்குத் தீங்கு நேர்ந்தாலும் பரவாயில்லை; இஸ்ரேயிலுக்குத் துன்பம் தந்தால் போதும் என்கிற முறையில் ஜோர்டான் நடந்து கொள்வதாக இஸ்ரேயில் குற்றம் சாட்டுகிறது.

இப்போது இஸ்ரேயில் இன்னொரு பெரிய திட்டத்திலும் இறங்கியிருக்கிறது. இந்தக் டின்னரெட் — நீகேவ் திட்டத்தின்படி சக்தி மிகுந்த இயந்திரங்கள் டின்னரெட் ஏரியிலிருந்து இறைக்கும் நீரைப் பெரிய குழாய்கள் மூலமாகத் தெற்கே கொண்டு வருவார்கள். இதற்காக மலைகளைக் கூடப் பல இடங்களில் குடைந்து மொத்தம் அறுபத்தைந்து மைல் நீளமுள்ள குழாய்களுக்குப் பாதை ஏற்படுத்த வேண்டியிருக்கிறது.

1. டின்னரெட்-நீகேவ் திட்டம்.
2. பியட்-ஷியான் திட்டம்.



இத்தருணத்தில், இவ்வருஷ ஆரம்பத்தில் அராபியத் தலைவர்களும் அரசாங்கப் பிரதிநிதிகளுமாகப் பதின்மூன்று பேர்கள் கெய்ரோவில் கூடினார்கள். இவர்கள் ராணுவ, நிர்வாக பொருளாதார, பொறி இயல் முயற்சிகளையெல்லாம் மேற்கொண்டு 'ஜோர்டான் நதி நீருக்கான அராபியத் திட்ட'த்தை நிறைவேற்றுவதெனத் தீர்மானித்திருக்கிறார்கள். இதன்படி மேல்ஜோர்டான் நதி இஸ்ராயில் நாட்டுக்குள் நுழையாமல் தடுத்துத் திசை திருப்பி விடுவதே அவர்களது நோக்கம் என்றும், கொஞ்ச நஞ்சம் வரக் கூடிய நீரும் அது குறைந்த அளவினதாக இருப்பது காரணமாகவே உப்புச் சத்து மிகுந்ததாகிப் பயனற்றுப் போய்விடும் என்றும் இஸ்ராயில் நாட்டினர் கருதுகிறார்கள்.

கின்னரெட் ஏரியின் அடிவாரத்திலும் சுற்றுவட்டாரத்திலும் உப்புநீர் ஊற்றுக்கள் மிகுதியாக இருப்பதால் இந்த ஏரியில் வந்து விழும் ஜோர்டான் நதி நீரின் அளவு கணிசமாகக் குறைந்தால் போதும், எல்லாம் ஒரே உப்பு மயமாகி உபயோகமற்றுப் போய்விடும்.

தனது நீர்ப்பாசனத் திட்டங்களெல்லாம் சம்பந்தப்பட்ட எல்லா நாடுகளாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட எரிக் ஜான்ஸ்டன் திட்டத்துக்கு உட்பட்டே நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதை இஸ்ராயில் அரசாங்கம் சுட்டிக்காட்டுகிறது.

ஸூயஸ் யுத்தத்துக்குப் பிறகு நீறுபூத்த நெருப்பாக இருந்து வந்த பகைமையில் இப்போது மீண்டும் தீப்பொறிகள் தோன்றிப் பறக்க ஆரம்பித்திருக்கின்றன. இச்சமயத்தில் அமெரிக்க ஜனாதிபதி லிண்டன் ஜான்ஸன் கடல் நீரைச் சுத்திகரிக்கும் அணு ஆலையை நிறுவும் ஆராய்ச்சிகளில் அமெரிக்கா இஸ்ராயிலுடன் ஒத்துழைக்கத் தயாராக உள்ளதாக அறிவித்திருப்பது உலகுக்குச் சற்று ஆறுதல் அளித்துள்ளது.

நெல்லுக்குக் கிட்டுமா நியாயம்?

குறைந்த விலையில் நெல் கொள்முதல் செய்யவேண்டியிருந்தால் மிராசுதாரர்களிடமிருந்து டி. ஸி. எம். எப். போன்ற கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலம் கொள்முதல் செய்தால் சர்க்கார் தேவைக்கு விவசாயிகள் நேரடியாகக் கொடுத்து விட்டுப் பாக்கி நெல்லை மார்க்கெட்டு விலைக்கு வியாபாரிகளிடம் விற்பனை செய்வதற்கு ஏதுவாயிருக்கும். அப்படிக் இல்லாமல் வியாபாரிகளிடம் சர்க்கார் நேரடியாகக் கொள்முதல் செய்வதாக இருக்கிற முடிவால் என்ன ஆகும்? வியாபாரிகள்



சர்க்கார் விலையாகிய மூட்டை சுமார் பதினேழு ரூபாய்க்கு எல்லா நெல்லையும் வாங்குவார்கள். அப்படி வாங்கிச் சர்க்கார் தேவைக்குச் சர்க்காரின் உத்தரவுப்படி நாற்பது சதவிகித நெல்லைக் கொடுத்து விட்டு மீதமுள்ள அறுபது சதவிகித நெல்லை மூன்று மாதங்கள் கழித்து ஒரு மூட்டை இருபத்திநாலு ரூபாய்க்குக் குறையாமல் ஏழை எளிய மக்களிடம் விற்பார்கள். இது நாங்கள் நேரடியாக அநுபவிக்கிற உண்மை நிலை.

எங்கள் கதி என்ன ஆவது? இது சிறு நிலக்காரர்களையும் விவசாயிகளையும் அழிக்கக் கூடிய திட்டமாகத்தான் முடியும். இதுதான் சோஷலிஸமா?

இம்மாதிரி குறைந்த விலையில் சர்க்கார் நெல் வாங்குகிறார்களே அது ஏன் என்றால் உடனே, நியாய விலைக் கடை திறந்து குறைந்த விலைக்கு அரிசியை விற்க என்று சொல்கிறார்கள். ஆனால் சமீபத்தில் நடந்ததென்ன? எங்கள் தஞ்சை ஜில்லாப் பகுதியில் சென்ற நவம்பர் மாதம் அடை மழை பெய்த காலத்தில் அரிசி விலை ஏறி விட்டது. உடனே எங்கள் பகுதி தாசில்தார் அவர்களை அணுகிக் குறைந்த விலைக்கு அரிசி கிடைக்க ஏற்பாடு செய்யும்படி கேட்டோம். உடனே அரிசி வரவழைத்து விற்பனைக்கு ஏற்பாடு செய்தார்கள். என்ன விலை தெரியுமா? மார்க்கட்டில் ஒரு லிட்டர் 55 காசுகள் விற்கும் போது சர்க்கார் விற்பனை செய்தது ஒரு லிட்டர் 60 காசுக்கு. இதற்காகவா நாங்கள் குறைந்த விலைக்குச் சென்ற ஆண்டில் நெல் கொடுத்தோம்? சர்க்கார் சென்ற மகசூலில் கொள்முதல் செய்த விலைப்படி பார்த்தால் ஒரு லிட்டர் 37 காசுக்குத் தாராளமாக விற்கலாம். ஆனால் 60 காசுக்கு விற்கிறார்கள். இது எவ்வளவு அநீதி என்பதைச் சிந்திக்கக் கோருகிறேன்.

திருத்துறைப்பூண்டி. ரா. கணபதி
16–1–64 (நகர பஞ்சாயத்து அங்கத்தினர்)

அரசாங்கம் கட்டாயக் கொள்முதலாக 2 லட்சம் டன் நெல்லை வியாபாரிகளிடமிருந்து கொள்முதல் செய்யப் போவதாக அறிவித்து அதற்கு விலையும் நிர்ணயம் செய்திருக்கிறது.

சர்க்காரின் விலை நிர்ணயிப்பை அநுசரித்துக் கொள்முதல் செய்யும் வியாபாரிகள் எங்களிடமிருந்து குறைந்த விலைக்கு நெல்லைக் கொள்முதல் செய்து 20 சத விகிதம் சர்க்காருக்குக் கொடுப்பார்கள். அதன் மூலம் சர்க்காரின் லட்சிய அளவாகிய 2 லட்சம் டன் கொள்முதல் பூர்த்தியாகும். மிகுதியை அதிகப்படியான விலைக்கு விற்பனை செய்து பெருவாரியான லாபத்தைப் பெறும் நல்லதொரு வாய்ப்பை அரசாங்கம் வியாபாரிகளுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

சாலியமங்கலம்
23–1–64 அச்சுதபுரத்தான்



நிலக்கரிச் சுரங்க மானேஜராகப் பணியாற்றும் திரு கிருஷ்ண மூர்த்தி B. Sc., A. I. S. M. அவர்களுக்கும், சென்னை ஸ்ரீராமசுவாமி அவர்கள் குமாரி சௌபாக்கியவதி பத்மினிக்கும், சமீபத்தில் சென்னையில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!

வியப்பும் விஞ்ஞானமும்



மேஜ

துப்பறியும் நவீனங்களையும் மர்மக் கதைகளையும் படித்து முடித்து விட்டு, அவைகளில் வரும் துப்பறியும் நாயகர்கள் — ஒரு பெர்ரி மேசனோ, ஹெர்கியூல் பாய்ரட்டோ — 'இப்படியெல்லாம் அதிசயமாகத் துப்புத் துலக்குவது நடைமுறையில் சாத்தியமா? எல்லாம் இந்தக் கதாசிரியர்களின் கற்பனைக் கயிறுதானே?' என்றெல்லாம் நம்மில் பலர் வியப்புக்குள்ளாகிறோம். அந்த வியப்பு அடங்குமுன் வேறு ஒரு புத்தகத்தைக் கையில் எடுத்து வைத்து மீண்டும் வியப்புக்குப் பாத்திரமாகத் தயார் செய்து கொள்கிறோம். அதில் அந்த அதிசய விஞ்ஞானத்தைப் பற்றிய எண்ணம் மறைந்து போய்விடுகிறது.

குற்றங்களை ஆராய்ந்து அவைகளின் காரணங்களை விஞ்ஞான ரீதியாகக் கண்டுபிடிக்க உதவும் நவீன 'ஃபோரென்ஸிக் சயன்ஸ்' (Forensic Science) எவ்வளவு தூரம் அபிவிருத்தியடைந்திருக்கிறது என்பதை ஓரளவு நாம் தெரிந்து கொண்டிருந்தோமானால், நாம் படிக்கும் துப்பறியும் நாவல்கள், நம்மிடையே வெறும் வியப்பை மாத்திரம் தோற்றுவிக்காமல், விஞ்ஞான அறிவையும் ஊக்குவிக்க உதவும்.

எடின்பரோ சர்வகலாசாலையில் ஃபோரென்ஸிக் சயன்ஸ் பேராசிரியர் சர் ஸிட்னி ஸ்மித் பல நூறு மைல்களுக்கப்பால் நடந்த ஒரு குற்றத்தை மரத்தடி 'மைபோட்டு'ப் பார்க்கும் ஆஞ்சனேய ஜோசியர்கள் போல் ஆராய்ச்சி செய்து விளக்கினார் என்பதை நாமும் தெரிந்துகொள்ளலாமே!

எகிப்தில் உள்ள கெய்ரோ நகரில் பல வருடங்கள் உபயோகத்தில் இல்லாத ஒரு பழங் கிணற்றைப் புதுப்பித்தார்கள். அந்தக் கிணற்றில் பலவித குப்பை செத்தைகளுடன் மூன்று சிறு எலும்புத் துண்டுகளும் அகப்பட்டன. அவற்றை யெடுத்து அப்படியே தூர எறிந்து விடாமல், 'அவை ஏதாவது நாய் பூனை போன்ற மிருகங்களின் உடலைச் சேர்ந்ததாகவும் இருக்கலாம். அல்லது மனித உடலின் பகுதிகளாகவும் இருக்கலாம்' என்ற நினைவில் கெய்ரோ போலீஸார் அந்த மூன்று எலும்புகளையும் பார்சல் பண்ணி எடின்பரோவில் உள்ள பேராசிரியருக்கு அனுப்பி வைத்தார்கள்.

அந்த மூன்று சிறு எலும்புத் துண்டுகளைப் பற்றிப் பேராசிரியரின் ஆராய்ச்சி நம்ப முடியாத அளவுக்கு வியப்பூட்டும் முடிவுகளைக் காண்பித்தது.

''இந்த எலும்புகள் ஒரு யுவதியின் உடலைச் சேர்ந்தவை. அவள் ஒற்றை நாடியாக இருந்திருப்பாள். அவள் வயது இருபத்தி மூன்றிலிருந்து இருபத்தி ஐந்துக்குள்ளாக இருக்கும். அவள் இறந்து போய் மூன்று மாத காலமாகியிருக்கும். அவள் ஒரு குழந்தைக்குத் தாயானவள். அவளுடைய ஒரு கால் மற்றொரு காலை விடச் சற்றுக் குட்டையானது. ஆகவே அவள் சற்றுக் காலைச் சாய்த்துச் சாய்த்துத்தான் நடந்திருப்பாள்.

அவள் துப்பாக்கி குண்டு பட்டு இறந்திருக்கிறாள். அந்தக் குண்டு சொந்தத்தில் தயாரிக்கப்பட்டது; கரடுமுரடானது. சுமார் மூன்று கஜ தூரத்தில் அவளுக்கு முன்னால் உட்கார்ந்திருந்த யாரோ அவளைப் பார்த்துத் துப்பாக்கியை மேல் நோக்கிச் சுட்டிருக்கிறார்கள். அவள் உடனடியாகச் சாகவில்லை. சுமார் பத்து நாட்கள் காயத்தின் வேதனையை அனுபவித்து விட்டுக் காலமாகி விட்டிருக்கிறாள்.''

மேலே கண்ட ஆராய்ச்சி முடிவுகளை எலும்புகளை அனுப்பிய போலீசாருக்குத் தெரிவித்தார் பேராசிரியர். போலீஸார் அந்தக் கிணற்றைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் அப்படிக் காலைச் சாய்த்து நடக்கும் யுவதி யாரும் இருந்ததுண்டா என்ற விசாரணையில் இறங்கினார்கள். அப்படிப்பட்ட யுவதி ஒருத்தி இருந்தாள் என்றும் ஆறு திடீரென்று காணாமல் போய் விட்டாள் என்றும் தகவல் கிடைத்தது. விசாரணையைத் தீவிரமாக்கினார்கள்.

ஒரு குழந்தைக்குத் தாயான அந்தக் கால் சாய்த்து நடக்கும் இருபத்து நான்கு வயது



யுவதி கணவனுடன் சண்டை போட்டுக் கொண்டு வந்து தன் தந்தையுடன் தங்கியிருந்தாள். கைது செய்யப்பட்ட அப் பெண்ணின் தந்தை உண்மையை ஒப்புக் கொண்டான். தான் அவளைக் கொல்லவில்லை என்றும், தன் வீட்டு வாசலில் உட்கார்ந்து தன் துப்பாக்கியைப் பழுது பார்த்துக் கொண்டிருக்கும் போது எதிர்பாராத விதமாகக் குண்டு கிளம்பிக் கதவருகில் நின்றுகொண்டிருந்த தன் பெண்மேல் பாய்ந்தது என்றான். காயமடைந்த அவளைப் பத்து நாட்கள் வரை தன் வீட்டுக்குள்ளேயே வைத்து ரகசியமாகச் சிகிச்சை செய்தான். ஆனால் காயம் 'செப்டிக்' ஆகி அவள் இறந்து விட்டாள்.

அவனுக்குத் துப்பாக்கி வைத்திருக்க அநுமதி கொடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே போலீஸ் கெடுபிடிக்குப் பயந்து இரவோடு இரவாக இறந்துபோன தன் மகளின் உடலைச் சற்றுத் தள்ளிக் கவனிப்பாரற்றிருந்த பாழும் கிணற்றில் போட்டு விட்டு நிம்மதியாக இருந்தான்.

ஆனால் அந்தக் கிணற்றைப் புதுப்பிக்கப் போகிறார்கள் என்ற செய்தி சுமார் மூன்று மாதங்கள் கழித்துக் காதில் விழுந்தபோது அவன் நடுநடுங்கிப் போனான். ஆகவே, முன்னேற்பாடாக ஓர் இரவில் கிணற்றில் இறங்கித் தன் மகளின் உடலில் கிடைத்த பாகங்களையெல்லாம் எடுத்து நைல் நதியில் வீசி விட்டான். அவனுக்கு அகப்படாத மூன்று எலும்புகள்தான் போலீஸ் மூலம் பேராசிரியருக்குக் கிடைத்தன. பேராசிரியரின் ஆராய்ச்சி அவள் தந்தையைப் போலீசில் மாட்டி வைத்தது. பிறகு நீதிபதி, 'இது கொலை அல்ல! விபத்து' என்று தீர்ப்பளித்தார்.

பேராசிரியர் எப்படி மாயாஜாலம் போல் தோன்றும் இந்த ஆராய்ச்சி முடிவை விஞ்ஞான ரீதியாக அடைந்தார்?

அவருக்குக் கிடைத்த மூன்று எலும்புகளில் இரண்டு, இரு பக்கத்து இடுப்பு எலும்புகள். மூன்றாவது முதுகெலும்பின் கடைசி அடிப் பாகம். இந்த மூன்றும் பொருந்தியிருக்கக் கூடிய எலும்புகள். பேராசிரியர் அவைகளைப் பொருத்தினார். அந்த இடுப்புப் பொருத்த அமைப்பு ஆணா பெண்ணா என்று அறிவித்து விடும். அந்த எலும்புகள் பெண்ணினுடையவை. அந்த இடுப்பு எலும்புகள் கனமின்றியும் குட்டையாகவும் இருந்தன. அவை ஒரு குழந்தையுடையதாகவும் இருக்கலாம். ஆனால் அந்த எலும்புகள் இருபத்தி இரண்டு வயதுக்கு மேல் பூரணமாகப் பொருந்தக் கூடியதாக மாறும் வசதி உடையதாக இருந்ததாலும் அவை பொருந்தி யிருந்ததாலும் வயதை நிர்ணயிக்க முடிந்தது. இடுப்பு எலும்புகளில் அமைந்திருந்த பள்ளங்களில் இருந்து அவள் குறைந்த பட்சம் ஒரு குழந்தைக்குத் தாயானவள் என்று கணிக்க முடிந்தது. எலும்புப் பள்ளங்களில் ஒட்டியிருந்த நுண்ணிய தசைகளிலிருந்து அவள் இறந்து மூன்று மாத காலமாகியிராது என்று சொல்லவும் முடிந்தது. ஓர் இடுப்பு எலும்பு மற்றொன்றை விடச் சற்று பலம் வாய்ந்ததாக அமைந்திருந்ததிலிருந்து, ஒரு காலுக்காக மற்றொரு கால் அதிகம் உழைக்க வேண்டியிருந்தது தெரிய வந்தது. அதிலிருந்து ஒரு கால் சற்றுக் குட்டை என்று அவர் கண்டுபிடித்தார்.

கீழிருந்து மேல் நோக்கிச் சென்ற குண்டுத் தடம் அந்த முதுகெலும்பில் இருந்தது. அந்தத் தடம் தாறுமாறாக இருந்ததால், அது ஒரு நாட்டுக் குண்டு என்றும், சுட்டவன் கீழிருந்து மேல் நோக்கிச் சுட்டிருக்கிறான் என்றும் தெரிய வந்தன. எலும்பு அதிகம் சேதமடையாததிலிருந்து, அடிவயிற்றில் ஏற்பட்ட உட்காயம் சில நாட்கள் கழித்துத்தான் மரணத்தை ஏற்படுத்தியது என்றும் முடிவு கட்ட ஏதுவாயிற்று.

பேராசிரியர் சிட்னி ஸ்மித்தின் ஃபோரென்சிக் சயன்ஸ் ஆராய்ச்சி எத்தனை தூரம் உண்மையை அப்பட்டமாகச் சினிமாப் படம் போல் எடுத்துக் காண்பித்திருக்கிறது என்று தெரிந்துகொள்ளும் போது நாம், மேலும் ரசித்துத் துப்பறியும் நாவல்களையும் கதைகளையும் படித்து அனுபவிக்கலாம் என்று தெரிகிறதல்லவா! வியப்போடு விஞ்ஞான ஞானமும் நம்மை ஆட்கொள்ளுமே!

ஆதாரம்: இங்கிலீஷ் டைஜெஸ்ட்


டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்



நகரசபை நகைச்சுவை
இன்னுமா இது கிழியாமல் அப்படியே இருக்கு?
அப்ப விட இப்ப ஊரில் பசை அதிகமா இருக்கு. ஆனால் அப்பமாதிரி இப்ப ஒட்டல்லே!
தேர்தலில் நிற்கிறது நன்னா இருக்கு! இப்பவே தோத்த களை மூஞ்சியிலே வந்தாயிடுத்து!
அபேட்சகர்கள் மனு இங்கே தாக்கல் செய்யும் இடம்
முதலில் அபேட்சகர் மனு தாக்கல்
எதிர்க்கட்சி அபேட்சகர் ...!
..பிறகு அபேட்சகரையே தாக்கல்
சாமா
1
2
3
4
"நீங்கள் வோட்டர்களுக்குப் பணம் கொடுத்து ஜெயித்ததாகப் பேசிக்கிறாங்களே!"
"சுத்த அயோக்கியத்தனம், பொய், பொறாமைப் பேச்சு! ..பணம் கொடுத்துத் தோற்றேனய்யா!"
"அதான் பல தடவை தோற்றாச்சே! மறுபடியும் கும்பிடு போட்ட படியே போறீங்களே! இந்தத் தடவையும் நிக்கிறீங்களா?"
"இல்லே! தேர்தல்களுக்கே கும்பிடு போட்டுவிட்டேன் என்பதைத் தெரிவிப்பதற்குத்தான்!"



பொன் விலங்கு

மணிவண்ணன்

ஐம்பத்தொன்பதாவது அத்தியாயம்

கண்ட காட்சியினால் மனத்தின் அமைதியும் நிதானமும் குலைந்து போய்ப் புயல் வேகத்தில் மின்னல் நுழைந்தாற்போல் சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டிருந்த ஜமீன்தாரையும் அவருக்கு அருகிலே நின்ற மோகினியையும் கடந்து வீட்டிற்குள்ளே சென்றான் சத்தியமூர்த்தி. பாரதி உடல் நலமின்றிப் படுத்திருந்த அறையை அடைவதற்குமுன் உள் கூடத்தில் நேர் எதிர்ப்புறத்துச் சுவரில் படங்கள் மாட்டியிருந்த இடத்தில் ஒரு கணம்தயங்கிநின்றான் அவன். முதலில் கவனிக்காமலிருந்து அவன் உள்ளே நுழைந்தபோது மட்டுமே நிமிர்ந்து நோக்கி முறைத்துப் பார்த்துவிட்டு ஏதோ முணுமுணுத்த ஜமீன்தார் முகத்தை வேறு பக்கமாக வெறுப்போடு திருப்பிக் கொண்டார். 'வருவார் வருவார்' என்று ஆசையோடு காத்திருந்தவர் வந்து படியேறி உள்ளே நுழைந்தும், பின்னால் ஓடிப் போய் உபசரிக்க முடியாமல் ஜமீன்தார் பக்கத்திலிருந்து தன் ஆவலை அடியோடு கட்டுப் படுத்திக் கொள்ளும்படி செய்துவிட்ட வேதனையோடு தயங்கித் தயங்கி அவனைப் பின் தொடர்ந்த மோகினியின் பார்வை — உள் கூடத்தில் அவனுடைய கண்கள் மேலே மாட்டியிருந்த படங்களில் எந்தப் படத்தைப் பார்த்துத் தயங்கினவோ அதைத் தானும் சந்தித்தன. கெட்ட சொப்பனம் போன்ற அந்தப் படத்தைப் பார்த்து அவள் தீயை மிதித்தவள் போலானாள். 'எப்போது அந்தப் படத்தை எடுத்தார்கள்? எப்படி எடுத்தார்கள்? யார் அதை அங்கே கொண்டு வந்து மாட்டினார்கள்?' என்பதொன்றுமே புரியாமல் அவளுக்குத் தலை சுற்றியது. 'என்ன அக்கிரமம் இது?' என்று கொதித்துக் குமுறும் மனநிலையோடு உள்ளே விரைந்தாள் அவள். நிலைக்கண்ணாடி அளவுக்குப் பெரிதாக்கி மாட்டியிருந்த அந்த வண்ணப் புகைப் படத்தில் அவளும் ஜமீன்தாரும் கழுத்தில் ரோஜாப்பூ மாலையணிந்து மணமக்களைப் போல் அருகருகே நிற்பதாகத் தெரியக் கண்டு பாதாதிகேச பரியந்தம் நடுங்கினாள் அவள். 'கழுத்தில் ரோஜாப்பூமாலையோடும் வாயிதழ்களில் நாணப் புன்முறுவலோடும் இப்படி ஒரு புகைப்படத்தை நான் எடுத்துக் கொண்டதே இல்லையே?' என்று கொதிக்கும் மனத்தோடு அந்தப் படத்துக்குக் கீழே தயங்கி எரிமலையாய் நிற்கும் சத்தியமூர்த்தியை நெருங்கியபோது அவன் அவள் தன் அருகில் வந்து நிற்பதையே அருவருத்து வெறுக்கிறவனாகப் பாரதியின் அறையை நோக்கி விரைந்தான்.

'என்ன சூழ்ச்சி இது? இந்த அநியாயத்தை யார் செய்தார்கள்? இதை இப்படியே இழுத்துக் கீழே தள்ளிச் சுக்கல் சுக்கலாக உடைத்தெறிந்தால் என்ன?' என்பது போல் ஆத்திரம் பொங்கிட அது உடைத்தெறிய முடியாத உயரத்தில் மாட்டப்பட்டிருந்ததைக் கண்டு ஆற்றாமையும், அழுகையுமாகப் பாரதியின் அறைக்குள் மோகினி தயங்கித் தயங்கி நுழைந்தாள். மோகினி உள்ளே நுழைந்ததைப் பார்த்ததும், பாரதி தன் அருகே அமர்ந்து தன்னை விசாரித்துக் கொண்டிருந்த சத்தியமூர்த்தியிடம், ''சார்! இதோ வாசல் பக்கமாக யார் வந்திருக்கிறார்கள் என்று

கொஞ்சம் திரும்பிப் பாருங்களேன்! உங்கள் மோகினி உங்களைப் பார்க்க வந்து நிற்கிறாள்...'' என்று தன்னுடைய சொந்த ஆசாபாசங்களைத் நிர்மானமாகத் தியாகம் செய்துவிட்டு நிச்சலனமான குரலில் சிரித்துக் கொண்டே கூறியபோது மோகினியின் பக்கமே ஏறெடுத்துப் பார்க்காமல் வெறுப்போடு தலை குனிந்துகொண்ட சத்தியமூர்த்தி ''தயவுசெய்து மஞ்சள்பட்டி ஜமீன்தாரின் மோகினி என்று சொல்லுங்கள்!'' என்று கோபத்தோடு மோகினிக்கும் கேட்கும்படியான குரலில் பாரதிக்குப் பதில் கூறினான். இந்தக் குத்தலான வார்த்தைகளைக் கேட்டு மோகினியின் தலையில் பேரிடி விழுந்தது போலாயிற்று. ''யாரோ சூழ்ச்சி செய்திருக்கிறார்கள்! அந்தப் படத்தைப் பற்றி எனக்கு ஒரு பாவமும் தெரியாது!'' என்று அப்போதே அவர் காலில் விழுந்து கதற நினைத்தாள் மோகினி. ஆனால் அந்த நிலையில் மிக அருகிலிருந்த அவளுடைய தெய்வத்துக்கோ அவள் அழுகை ஒரு சிறிதும் காதில் கேட்கவில்லை. பதற்றத்தோடு பதற்றமாக உள்ளே ஓடிப்போய் நடுங்கும் கைகளால் காப்பி கலந்து எடுத்துக் கொண்டு வந்தாள் மோகினி. அப்போதுதான் பாரதியிடம் சொல்லி விடைபெற்றுக்கொண்டு திரும்பிப் புறப்பட்டுக் கொண்டிருந்த சத்தியமூர்த்தியின் எதிரே போய்ப் பேச வார்த்தை எழாமல் தளர்ந்து போய்விட்ட நாவுடன் காப்பியை அவன் நீட்டியபோது, ''இந்த உபசாரம் எல்லாம் நீங்கள் ஜமீன்தாருக்குச் செய்தால் போதும். நான் இங்கு என்னுடைய மாணவியைப் பார்த்துவிட்டுப் போவதற்காகத்தான் வந்தேன். உங்கள் கையால் காப்பி குடிக்க இங்கே வரவில்லை.....'' என்று ஆத்திரத்தோடு வெட்டினாற் போலப் பதில் சொல்லிவிட்டுத் திரும்பிப் பாராமல் நடந்தான் அவன். இதைக் கேட்டதும் மோகினியின் கையிலிருந்த காப்பி டவரா கீழே நழுவியது. பாரதிக்கோ ஒன்றுமே புரியவில்லை. சத்தியமூர்த்தி சாருக்கு இவ்வளவு கோபம் வந்து அவள் பார்த்ததே இல்லை. 'புயலைப்போல் வந்தேன். மின்னலைப் போல் மறைந்து விட்டேன்' என்று 'ஷோரப் அண்ட் ரஸ்டம்' காவியத்தில் படித்திருப்பதையொப்பச் சத்தியமூர்த்தி வேகமாக வந்தார், ஆத்திரமாகத் திரும்பப் போய் விட்டார் என்று எண்ணியபோது அவளுக்கும் அழுகைதான் வந்தது. சத்தியமூர்த்தி சாரை வரச் சொல்லித் தோழியின் மூலமாக ஏற்பாடு செய்தபோது அவர் தன்னிடம் மட்டுமே கோபமாகவும், ஆத்திரமாகவும் நடந்து கொள்வாரென்றும், மோகினியைப் பார்த்ததும் அவருடைய ஆத்திரம், கோபம் எல்லாம் பறந்து போய், முகத்தில் புன்முறுவல் மலரும் என்றும் கற்பனை செய்து வைத்திருந்த பாரதி அந்தக் கற்பனைக்கு நேர்மாறாகத் தன்னிடம் அவர் பரிவாக நடந்து கொண்டு விசாரித்துவிட்டுப் போனதையும், அதே வேளையில் மோகினியைக் கடுமையாக வெறுத்து அவளைப் பார்க்கவே பிடிக்காதவரைப் போல் முகத்தை முறித்துக் கொண்டு போய்விட்டதையும் நினைத்துக் காரணம் ஒன்றும் விளங்காமல் மனம் திகைத்துக் கலங்கினாள்.

''என்ன அக்கா? ஏன் அவர் இப்படி உங்களிடம் கோபித்துக் கொண்டு போகிறார்?'' என்று அறை மூலையில் தலை குப்புறச் சுருண்டு விழுந்து விசும்பி விசும்பி அழுதுகொண்டிருந்த மோகினியைக் கேட்டாள் பாரதி.

''சிறிது நேரத்துக்கு முன்புதானே நீ என்னைப் பாக்கியசாலி என்று சொல்லியிருந்தாய் பாரதி? என்னுடைய பாக்கியம் இப்போது எப்படி முடிவாகியிருக்கிறது, பார்த்தாயா?'' என்று அழுகைக்கிடையே பதில் கூறிய மோகினி தான் ஜமீன்தாருக்குக் காப்பி கொடுத்து உபசரிக்கும்போது அவர் எதிர்பாராதவிதமாக உள்ளே நுழைந்ததையும், நடுக் கூடத்தில் இன்றைக்கென்று பார்த்து எப்படியோ, எங்கிருந்தோ முளைத்து வந்து சேர்ந்திருக்கும் அந்தப் படத்தைப் பார்த்ததையும் விவரித்தாள்.

இதைக் கேட்டு ஒரு நீண்ட பெருமூச்சுவிட்ட பாரதி, ''சந்தேகமும் பொறாமையும் தாக்காத மனித இதயமே இருக்க முடியாதுபோல் தோன்றுகிறது அக்கா! ஒருவேளை சந்தேகமும் பொறாமையும் இந்த உலகத்தில் இல்லாமலிருந்தால் முக்கால்வாசி மனிதர்கள் தேவர்களாயிருப்பார்களோ என்னவோ? அப்படியும் கூடச் சொல்வதற்கில்லை. ஏனென்றால் நம்முடைய இதிகாசங்களில் தேவர்கள் கூடச் சந்தேகமும் பொறாமையும் பட்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள்'' என்று துக்கத்தோடு பதில் கூறினாள். அந்த நிலையில் மோகினியைப் பார்க்கவே சகிக்காமல் பாரதிக்குப் பரிதாபமாக இருந்தது. சந்தர்ப்பங்கள் சதிசெய்து அவளுடைய ஒரே நம்பிக்கையைப் பாழாக்கி விட்டதோடு அவளைத் துரதிர்ஷ்டசாலியாகவும் நிரூபித்து விட்டதை எண்ணிப் பாரதி மனம் உருகினாள். 'இந்தப் பாழாய்ப்போன ஜமீன்தாருக்கு இன்றைக்கென்று பார்த்தா இவள் கையால் காப்பி குடிக்க



எடையினால் ஏக்கமா?

எடை குறைந்து

எடுப்பாய் விளங்க

லிமிகால்

மெல்லிடைப் பெண்மணி, அவள் நாகரீக ஓவியம். உடலோடொட்டிய உடையணிந்தவள்தான் இந் நாளைய நாகரீகத்தின் சின்னம். உடல் கனம் குறைவதற்குப் பத்தியமான உணவு தேவை யில்லை. கடினமான தேகப் பயிற்சிகளும் வேண் டாம் — லிமிகால் அருந்தி சுலபமாக இளைக்க முடியும்.

லிமிகால் ஒரு திரவ உணவு—ருசியான, வாழைப் பழ, சாக்லேட் மற்றும் ஆரஞ்சு மணங்களில் கிடைக்கிறது. நீங்கள் லிமிகால் மட்டுமே அருந்தி துரிதமாகவோ அல்லது குறைந்த கலோரியுள்ள உணவுடன் அதை அருந்தி மெதுவாகவோ எடையைக் குறைக்கலாம்.

மேலும் லிமிகால் உங்கள் பசியைப் பூராவும் தீர்க்கும் — சாப்பாடுகளுக்கிடையே சிறு தீனிக்குத் தேவையில்லை! உங்கள் பசியைக் குறைப்பதற்கான எவ்வித மருந்தும் இதில் கிடையாது. லிமிகால் அருந்திவரும்போது உங்கள் அன்றாட அலுவல் களைக் கவனித்து வரலாம்.

லிமிகாலைப் பரீட்சார்த்தமாக அருந்தியவர்களின் எடை வாரத்திற்கு சுமார் 3 லிருந்து 5 பவுண்டு கள்வரை குறைந்திருக்கிறது.

நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் இவ்வளவு தான்—ஒரு டம்ளர் நீரில் 4 டேபிள் ஸ்பூன் லிமி காலை நன்குக் கரைத்து அருந்திவிடுங்கள்! இது சீரான உணவுக்கு ஒப்பான குறைந்த கலோரி யுள்ள முழு உணவாகும்.



இப்பொழுது சிக்கனமான வகையில் 1.6 கிலோகிராம் டின்னிலும் கிடைக்கிறது. (ஒரு வாரத்திற்குப் போதுமானது)

உங்கள் டாக்டரும்

லிமிகால்

அருந்தும்படி சிபார்சு செய்வார்.

"ஸ்லிம்மிங் வித் லிமிகால்" என்னும் இலவசப் புத் தகத்தைப் பெற எழுதுங்கள்:

ஸாராபாய் கெமிகல்ஸ், தபால் பெட்டி எண் 1688 பம்பாய்—1.

சில்லரை விலை: 225 கிராம் டின் ரூ. 6.50, 1.6 கிலோகிராம் டின் ரூ. 33.50. விற்பனை வரி மற்றும் பிராந்திய வரிகள் தனி.

வேண்டுமென்று ஆசை வரணும்?' என்பதாக ஜமீன்தார் மேல் திரும்பியது பாரதியின் கோபம். கோபத்தோடு கோபமாக மோகினியிடம் அப்போது ஒரு கேள்வி கேட்டாள் பாரதி:

''அக்கா! உங்களிடம் நான் ஒன்று கேட்கிறேன். இப்படிக் கேட்பதினால் என்னைத் தப்பாகப் புரிந்து கொள்ளாதீர்கள். நீங்கள் எப்போதாவது கழுத்தில் ரோஜாப்பூ மாலை அணிந்து புன்முறுவல் பூத்த முகத்தோடு தனியாக நின்றோ வேறு யாரோடும் சேர்ந்தோ புகைப்படம் எடுத்துக் கொண்டிருக்கிறீர்களா?''

இதைக் கேட்டுச் சிறிது நேரம் தயங்கிவிட்டு மோகினி பதில் கூறினாள்:

''எத்தனையோ படம் எடுத்திருக்கிறார்கள். முதல் முதலாக நாட்டிய அரங்கேற்றம் ஆன தினத்திலே எங்க நட்டுவாங்கம் — வாத்தியாரு — அவருக்கே ஆசை தாங்காமே ஒரு....ஒரு பெரிய தும்பிச்சங்கை ரோஜாப்பூ மாலையை வாங்கி எங்கம்மா கையிலே கொடுத்து எனக்குப் போடச் சொன்னாரு. அப்போது நான் சபைக்குக் கூசினாற்போல மேடையிலே கழுத்திலே மாலையோடு சிரித்துக் கொண்டு நின்றேன்... அதைப் படம் பிடிச்சாங்க. அதிலே ஒரு பிரதி மஞ்சள்பட்டி அரண்மனையிலே கூட உண்டு.''

''ரொம்ப சரி! அந்தப் படத்தையும், அதற்குப் பக்கத்தில் ஜமீன்தார் படத்தையும் வைத்துத் தந்திரமாக இணைத்து ஒன்றாக்கி வர்ணம் தீட்டிப் பெரிதாக்க முடியும்! பணத்தை வாரி இறைத்தால் இதைச் செய்து கொடுக்க ஆயிரம் போட்டோகிராபர்கள் ஓடி வருவார்கள் அக்கா! ஜமீன்தாரைக் குஷிப்படுத்துவதற்காகக் கண்ணாயிரம் இந்த அற்பத்தனமான காரியத்தைச் செய்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!'' என்று கூறிவிட்டு டிரைவர் முத்தையாவை உடனே வரவழைத்து, 'கண்ணாயிரம் கடந்த இரண்டு மூன்று நாட்களில் ஏதாவது போட்டோ ஸ்டுடியோவுக்கோ கண்ணாடி பிரேம் போடும் இடத்துக்கோ காரில் போனாரா?' என்பதைப் பற்றி விசாரித்தபோது அவன் உடனே விவரமாக எல்லாவற்றையும் அவளுக்குக் கூறினான். நான்கு நாட்களுக்கு முன் இரண்டு பெரிய படங்களை எடுத்துக் கொண்டு மல்லிகைப்பந்தல் பஜாரிலுள்ள ஒரு சிறந்த புகைப்பட நிறுவனத்துக்குக் கண்ணாயிரம் காரில் போனதாகவும், முந்திய தினம் மாலையில்தான் அந்தப் படங்களில் உள்ள தனித் தனி உருவங்களை இணைத்து ஒன்றாகச் செய்தது போலாக்கிப் பெரிய படமாகப் பிரேம் போட்டுத் திரும்பி வாங்கி வந்ததாகவும் சிறிது நேரத்துக்கு முன்பே தன்னிடம் அதை ஜமீன்தார் அறையிலிருந்து அங்கே உள்கூடத்தில் எடுத்துவந்து மாட்டச் சொன்னதாகவும் டிரைவர் முத்தையா கூறியபோதுதான் பாரதிக்குத் தன்னுடைய அனுமானம் முற்றிலும் சரியென்று புரிந்தது. கண்ணாயிரத்தின் அந்த அற்பத்தனமான சந்தோஷம் பேதையான மோகினியின் துரதிர்ஷ்டமாக முடிந்துவிட்டதை எண்ணி அவள் மிகவும் வருந்தினாள். மோகினியின் மகிழ்ச்சிக்காகத் தன்னையும் தன் ஆசைகளையும்கூட வெளிப்பட நஷ்டத்தைக் காண்பித்துக் கொள்ளாமலே அந்தரங்கமாகத் தியாகம் செய்துவிட்டு அவள் பொருட்டுச் சத்தியமூர்த்தியை அங்கு வரவழைத்த பாரதி அது எப்படியோ அசம்பாவிதமாக முடிந்து மோகினியைத் துரதிர்ஷ்டசாலியாக்கிவிட்டதை எண்ணி எண்ணி நிலைகொள்ளாமல் தவித்தாள்.

பொன் விலங்கு

ஒரு வேளை சந்தேகமும் பொருமையும் இந்த உலகத்தில் இல்லாமலிருந்தால் முக்கால் வாசி மனிதர்கள் தேவர்களாயிருப்பார்களோ என்னவோ?

உள் கூடத்து ஊஞ்சல் கம்பியைப் பற்றிக் கொண்டு சத்தியமூர்த்தி அந்த வீட்டிலிருந்து நடந்து வெளியேறிச் சென்ற வழியையே வெறித்துப் பார்த்துக் கண்ணீர் மல்க நிற்கும் மோகினியைக் கண்டு மனம் ஒருநிலை கொள்ளாமல் பரிதாபமுற்றாள் பாரதி. மோகினியோ அப்போது அதற்கு முன் எப்போதுமில்லாதபடி மனம் இடிந்து போயிருந்தாள். சத்தியமூர்த்தியையும் தன்னையும் விலக்கிப் பிரிக்கும் மெல்லிய வேற்றுமை வலை ஒன்றை விதி தங்களுக்கு இடையே அந்த விநாடியிலிருந்து தொடங்கி மிக வேகமாகப் பின்னிக் கொண்டிருப்பதாகத் தோன்றியது அவளுக்கு. அவர் கடுமையாகவும், தீவிரமாகவும் மனம் மாறும்படி அடுத்தடுத்து இரண்டு சம்பவங்கள் அன்று அங்கே தற்செயலாக நேர்ந்து விட்டதையும், சந்தர்ப்பம் தனக்கெதிராகச் சதி செய்து விட்டதையும் எண்ணி மனம் நொந்து போயிருந்தாள் அவள். அப்போது

ஊஞ்சல் கம்பிகளைப் பற்றிக் கொண்டிரா விட்டால் நிற்கவே சக்தியிராது போன்ற பலவீனத்தை உணர்ந்திருந்தாள் மோகினி. தன்னை வெறுத்துவிட்டு வெளியேறுகிற சத்தியமூர்த்தியைப் பின் தொடர முடியாமல் ஊசலாடும் மனமும் ஓய்ந்து தளரும் கால்களுமாகத் துவண்டு நின்றபோது தான் அப்படியே யுகம் யுகமாக அவரிடமிருந்து பின்தங்கி நின்றுவிட்டதுபோல் அத்தனை பெரிய சலிப்பு வாழ்க்கையின் மேல் அவளுக்கு ஏற்பட்டது. தன்னைப் போல் துர்ப்பாக்கியசாலி வாழ்க்கையில் வேறெவரும் இருக்க முடியாதென்றும் அப்போது அவளுக்குத் தோன்றியது.

உள்ளே அறையிலிருந்த பாரதி சிறிது நேரம் கழித்து டிரைவர் முத்தையாவிடம் சொல்லிக் கோபத்தோடு இரைந்து கண்ணாயிரத்தைக் கூப்பிட்டனுப்பினாள். கண்ணாயிரம் மிகவும் திமிராக நடந்து வந்தார். அவரிடம் அந்தப் படத்தைப் பற்றிக் குறிப்பிட்டு அதைக் கூடத்தில் யார் மாட்டியதென்று அவள் கடுமையான கோபத்தோடு விசாரித்தபோது அவர் வஞ்சகமான விஷமச் சிரிப்புச் சிரித்துக்கொண்டே, ''நேற்று வரை அந்தப் படத்தை ஜமீன்தார் படுத்திருந்த அறையிலேதான் மாட்டியிருந்தார். இன்று மாலையில்தான் ஜமீன்தாரே என்னைக் கூப்பிட்டு, 'கண்ணாயிரம்! இன்னிக்கிச் சாயங்காலம் இங்கே ரொம்ப முக்கியமான விருந்தாளி ஒருத்தர் பாரதியைப் பார்க்க வரப்போறாரு. அவரு இந்தப் படத்தையும் பார்க்க வேண்டியது ரொம்ப ரொம்ப அவசியம். இன்னிக்கு மட்டும் இதை அங்கே கூடத்திலே மாட்டி வை' என்று சிரிச்சிக்கிட்டே சொன்னாரு. அதனாலேதான் இங்கே கொண்டாந்து மாட்டினேன்'' என்று கூறியபோது தான் பகலில் மகேசுவரி தங்கரத்தினமும் தானும் டெலிபோனில் பேசியதை ஜமீன்தார் முன்புறம் தமது அறையிலுள்ள எக்ஸ்டென்ஷனிலிருந்து இரகசியமாக 'ஓவர்ஹியர்' ' செய்திருக்கிறாரென்று பாரதியால் அநுமானம் பண்ண முடிந்தது. உள் பகுதியிலும் முன் அறையிலுமாக அந்த வீட்டில் இருந்த ஒரே எண்ணுக்குரிய இரண்டு டெலிபோன் ரெஸிவர்களில் ஒன்றைக் கையிலெடுத்தால் இன்னொன்றில் மற்றொருவர் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்க முடியும் என்பதைப் பாரதியும் அறிவாள். ஜமீன்தாரும், கண்ணாயிரமும் செய்திருக்கிற அநியாயங்களை நினைத்தபோது அவளுடைய வயிறெரிந்தது. அவர்களை எண்ணியபோதோ 'வெல்டிரஸ்டு ரோக்ஸ்' என்று எரிச்சலோடு முணுமுணுத்தாள் பாரதி. அக்கிரமமாகத் தயாரிக்கப்பட்ட அந்தப்படத்தை மாட்டியிருந்த இடத்திலிருந்து வெளியில் எடுத்தெறியச் சொல்ல வேண்டும் போல மனம் குமுறினாள் அவள். மோகினியின் பரிசுத்தமான காதலை ஒப்புக்கொண்டு தன்னுடைய ஆசையைத் தனக்குள்ளேயே பெருந்தன்மையாகத் தியாகம் செய்துகொண்டிருந்தாள் பாரதி. ஆனால் இப்போது தானே ஒப்பி மகிழ்ந்த மோகினியின் காதலுக்கும் கெடுதல் வருவதை அவளால் சிறிதும் தாங்க முடியவில்லை.

''கவலைப்படாதீர்கள் அக்கா! 'நீங்கள் பாக்கியசாலி' என்று நான் சொல்லிய வார்த்தையை எப்படியும் இறுதிவரை நிரூபிப்பது என் பொறுப்பு. மறுபடியும் என் தோழி மகேசுவரியை வரவழைத்து அவளிடம் விவரமாக உங்கள் கைப்படவே கடிதம் எழுதிக் கொடுத்துச் சத்தியமூர்த்தி சாரிடம் கொண்டுபோய்ச் சேர்க்கச் சொல்கிறேன். அவர் மனம் சமாதானம் அடையும் விதத்தில் அந்தக் கடிதத்தை நீங்கள்தான் அக்கா எழுத முடியும். உடனே எழுதுங்கள். நான் இப்போதே டிரைவர் முத்தையாவிடம் சொல்லி மகேசுவரி தங்கரத்தினத்தை வரவழைக்கிறேன்'' என்று பாரதி ஆறுதலாக யோசனை கூறியபோது மோகினி அந்த வார்த்தைகளை நம்பி அப்படியே சத்தியமூர்த்திக்கு மிகவும் உருக்கமாகத் தன் நிலையை விளக்கி ஒரு கடிதம் எழுதலானாள். கடந்த சில நாட்களில் தான் உடல் நலமின்றிக் கிடந்தபோது மோகினி தனக்குப் பணிவிடை செய்த விசுவாசத்தினாலும், இந்தப் பரந்த உலகில் சத்தியமூர்த்தியைத் தவிரத் தனக்குத்துணை என்று வேறு யாருமில்லாமல் உள்ளும் புறமும் அந்த ஒரே ஓர் உயிர்த்துணையையே உணர்ந்து தவிக்கும் மோகினியின் பரிசுத்தமான காதலை மதித்துத் தானே தன்னைத் தியாகம் செய்துகொள்வதென்று பாரதி முடிவு செய்திருந்ததனாலும் தன்னுடைய கஷ்டத்தை மறந்து மோகினியின் காதல் வெற்றி பெற மட்டுமே அவள் பாடுபட்டாள். மகேசுவரி தங்கரத்தினத்தை வரவழைத்து மோகினி எழுதிய கடிதத்தை லேக் அவென்யூவிலுள்ள சத்தியமூர்த்தியின் அறைக்குக் கொடுத்தனுப்பியபோதும், அப்படிக் கொடுத்தனுப்பிய பின் மோகினிக்கு ஆறுதல் கூறியபோதும் சத்தியமான அந்தக் காதல் வெற்றி பெறப் பாடுபடுகிற ஒரே ஒரு புண்ணியமாவது தனக்குக் கிடைக்கட்டுமென்ற பரந்த மனப் பண்புதான் பாரதியிடமிருந்

தது. ஆனால் எல்லாருக்கும் மேலாக விதியோ வேறு விதமாக இருந்தது.

பாரதியை விசாரித்துவிட்டுப் போக வந்த இடத்தில் மோகினிக்கும் ஜமீன்தாருக்கும் மணமாகிப் புது மணத் தம்பதிகள் புகைப்படம் எடுத்துக் கொண்டது போல் அலங்காரமாக எடுத்து ஆடம்பரமாக மாட்டப் பெற்ற புதிய பெரிய படத்தை அங்கே பார்த்ததாலும், தன்னுடைய சகல விதமான அவநம்பிக்கைகளிடையேயும் ஒரே ஒரு நிச்சயமாக இருந்த அவளே நிச்சயமற்று ஜமீன்தாரிடம் சிரித்துப் பேசி உபசாரம் செய்துகொண்டு நின்ற நிலையில் அவளைச் சந்தித்ததாலும் மனம் வெறுத்து வேதனையோடு அங்கிருந்து வெளியேறி யிருந்தான் சத்தியமூர்த்தி.

எவ்வளவோ மனப் பக்குவமும் நிதானமும் உள்ளவனாயிருந்தும், அந்த நிலையைமட்டும் அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

'இந்த மாதிரிப் பெண்களை 'இரு மனப் பெண்டிர்' என்று திருவள்ளுவர் எத்தனை பொருத்தமாக இழித்துக் கூறியிருக்கிறார்! 'சூதாட்டத்தையும், குடியையும் போல் மன ஒருமை இல்லாத பெண்ணின் அன்பும் ஒருவனைச் சீரழித்து விடும்' என்று அவர் கூறியிருப்பது எவ்வளவு பெரிய உண்மை! ஒழுக்கமும், நேர்மையும் இல்லாத சதைப் பிண்டமான அந்த ஜமீன்தாரின் பக்கத்தில் கழுத்து நிறைய மாலையோடும் இதழ்கள் நிறையப் புன்சிரிப்போடும் நிற்கிறாளே இந்தக் கேடுகெட்டவள்! அதுதான் வெறும் படம் என்றால் என் கண்களாலேயே அந்த வீட்டு வராந்தாவில் கால் நீட்டிச் சாய்ந்திருந்த ஜமீன்தாருக்கு இவள் காப்பி டிபன் கொடுத்து உபசாரம் எல்லாம் செய்து பயபக்தியோடு அருகே நிற்கிற கோலத்தை நான் சற்று முன்பு கண்டேனே? நான் கண்ணால் கண்டது எப்படிப் பொய்யாகும்? 'நான் வாழ்ந்து உங்களை நினைக்க வேண்டும் அல்லது நீங்கள் வாழ்ந்து என்னை நினைக்க ஒரு ஞாபகமாகி நானே போய்விட வேண்டும்' என்று என்னிடம் இந்தக் கூத்தாடுகிறவள் நாடகமாடியதெல்லாம் எத்தனை பெரிய நடிப்பு?' என்று தனக்குள் அவளைக் கடுமையாக நினைக்கும் நினைப்புக்களுடனே நடையே வேகமாகித் தன் அறைக்கு விரைந்து கொண்டிருந்தான் சத்தியமூர்த்தி.

அறையில் குமரப்பன் அவனை எதிர் பார்த்துப் பரபரப்போடும் மதுரையிலிருந்து வந்திருந்த அவசரமான தந்தியோடும் காத்திருந்தான்.

''என்னடா, சத்தியம்? கல்லூரி விட்டதும் உடனே அறைக்குத் திரும்பி வரக் கூடாதோ? நம் கலெக்டர், மதுரையிலிருந்து உடனே புறப்பட்டு வரச் சொல்லித் தந்தி கொடுத்திருக்கிறார். இப்போது கிளம்பினால் பஸ் நிலையத்திலிருந்து இன்னும் பத்துப் பதினைந்து நிமிஷத்தில் புறப்படவிருக்கும் அஞ்சரை மணி பஸ்ஸில் மதுரை போகச் சரியாயிருக்கும். உடனே புறப்படு. சொல்கிறேன். நானும் உன்னோடு மதுரை வரை வந்து விட்டுத் திரும்ப நினைத்திருக்கிறேன்'' என்று குமரப்பன் அவசரப்படுத்தியதும் மறு பேச்சுப் பேசாமல் கல்லூரிக்கு ஒரு வாரம் லீவு எழுதிக் கொடுத்து அதை மறுநாள் காலை கல்லூரி முதல்வரிடம் சேர்க்குமாறு ரொட்டிக்கடை ஆளிடம் கூறி விட்டு நண்பனோடு மதுரைக்குப் புறப்பட்டான் சத்தியமூர்த்தி. இந்தப் பிரயாணம் தன்னுடைய வாழ்க்கையில் ஒரு முக்கியமான பெரிய மாறுதலை ஏற்படுத்தப் போகிறதென்று சத்தியமூர்த்திக்குத் தெரியும். யாரோ ஒருத்தியினுடைய அன்பு தடையாக இருந்து அவனைக் கடந்த ஒரு வாரமாக இதற்குத் தயங்கச் செய்து கொண்டிருந்தது. இன்று இந்த விநாடியிலோ 'உலகத்தில் எல்லாப் பெண்களுக்கும் இரண்டு மனங்களென்ன, ஈராயிரம் மனங்கள் கூட இருக்க முடியும். பிடிவாதமாகக் காதலித்து அதற்காக உயிர் விடுகிற ஒருமனப் பெண்களை வாழ்வில் சந்திக்கவே முடியாது போலும்! ஒருவேளை நல்ல கவிகள் எழுதுகிற மகா காவியங்களில் வேண்டுமானால் அப்படி ஓரிரு பெண்கள் கற்பனையாக வரலாம்' என்று நினைக்கும் வறண்ட மனத்தோடு அப்போது அவன் இருந்தான். எனவே குமரப்பனுடைய வேண்டுகோளையும் கலெக்டருடைய தந்தியையும், அதன் பின் விளைவுகளையும் சிறிதும் தயங்காமல் எதிர்பார்த்து ஏற்றுக் கொள்ளவும் கருதி

தந்தை: இப்படிக் கேள்வி கேட்டு என்னைத் தொந்தரவு செய்கிறாயே! நான் சின்னப் பையனாயிருந்தபோது இப்படி எங்கள் அப்பாவைக் கேள்வி கேட்டிருந்தால் என்னவாகியிருக்கும்?

மகன்: என்னவாகியிருக்கும்? நான் கேட்கும் சில கேள்விகளுக்காவது சரியான பதில் சொல்லக் கற்றுக் கொண்டிருப்பீர்கள்!

இந்தக் கதையில் வரும் ஒரு காட்சியையே ஓவியர் விஜயன் இவ்விதழ் அட்டைப்படமாகச் சித்திரித்திருக்கிறார்.

அவன் உடனே நண்பனேடு மதுரைக்குப் புறப்பட்டு விட்டான். கல்லூரி வேலை நிறுத்தம் பற்றிய விசாரணைக்காக வந்திருந்த கலெக்டர் திரும்பும்போது, ''சத்தியம்! உனக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். என் மனப் பூர்வமாக உனக்கு நான் கூறுகிற இந்த அறிவுரையை நீ ஏற்றுக் கொள்வதும் ஏற்றுக் கொள்ளாததும் உன் விருப்பத்தைப் பொறுத்தது. இவ்வளவு நல்ல படிப்பையும், தோற்றத்தையும் வைத்துக் கொண்டு உன்னைப் புரிந்து கொள்ளாத இவர்களுக்கிடையே நீ சாதாரண விரிவுரையாளனுக இருந்து என்ன பயன்? உனக்கும் கல்லூரி நிர்வாகத்தினருக்கும் இடையே இவ்வளவு பிரச்னைகள்-வேறுபாடுகள் எல்லாம் உண்டாகி அவற்றிலிருந்து நீ தப்பி வென்று விட்டாலும் இனியும் உன்மேல் வைரம் வைத்துக் கொண்டு பழிவாங்க அவர்கள் நேரம் பார்த்திருப்பார்கள். தனியார் நிர்வாகத்திலுள்ள எல்லாக் கல்லூரிகளிலும் இப்படிப்பட்ட பாரபட்சங்கள் நிறையஉண்டு. பூபதி உயிரோடிருந்திருந்தால் நடப்பது வேறு. அவரும் போய்ச் சேர்ந்து விட்டார். 'ஹென்றி வான் டைக் 'டு தி அன்னேன் டீச்சர்' என்ற பெயரில் ஒரு கவிதை பாடியிருக்கிருன், தெரியுமா? அதுதான் இப்போது எனக்கு நினைவு வருகிறது.

'ஆசிரியனே! நீ எல்லாருடைய இருதயத்திலும் இருளகற்றி ஒளிபரப்பி அவர்களைப் புகழுக்குரியவர்களாக்குகிருய்! ஆனல் உன் புகழும் பெருமையும் எல்லாருக்கும் மொத்தமாக மறந்து போய்விடுகின்றன. நீ இருளில் கிடந்து வாடுகிருய்?' என்று அந்தக் கவிதையில் அவன் கூறுகிருன். உன்னுடைய வாழ்வும் படிப்பும் அப்படி இருளடைவதாய் ஆகிவிடக் கூடாது. நான் சொல்வதைக் கேள். சமீபத்தில் ஆங்கிலச் செய்தித் தாளில் நான் ஒரு விளம்பரம் பார்த்தேன். மேற்கு ஜெர்மனியிலுள்ள ஹிடல்பர்க், மார்பர்க் ஆகிய பல்கலைக் கழகங்களில் பழைமையான கீழ்த்திசை மொழிகளைப் பற்றிய ஆராய்ச்சித் துறைக்காகத் தகுதி வாய்ந்தவர்களின் விண்ணப்பங்களைக் கேட்டு இந்தியாவிலுள்ள ஜெர்மன் தூதராலயத்திலிருந்து விளம்பரம் வந்திருந்தது. பயிற்சிக் காலத்தில் மாதம் 1500 *மார்க்ஸ் (சுமார் 1875 ரூ.) உதவித் தொகையாகத் தருகிருர்கள். இரண்டு மூன்று வருடங்கள் நான் கூறிய ஜெர்மானியப் பல்கலைக் கழகங்களின் ஆராய்ச்சித் துறையில் இருந்து விட்டு மொழியியல் துறையில் டாக்டர் பட்டத்தோடு நீ இந்தியாவுக்குத் திரும்பி வா. இந்த வேலைக்குத் தகுதியும் தோற்றப் பொலிவும் உள்ள நீ அவசியம் தேர்வு பெறுவாய். ஊருக்குப் போனதும் விண்ணப்பத்தாளும் விவரங்களும் உனக்கு அனுப்பி வைக்கிறேன். உடனே பூர்த்தி செய்து உன் முகவரி கொடுக்கும்போது மட்டும் கவனமாக உன் பெயரை எழுதி மேற்பார்வை என்று போட்டுக் கீழே என்னுடைய மதுரை முகவரியைக் கொடுத்து விடு. டெல்லியிலுள்ள ஜெர்மன் தூதராலயத்தில் விரைவில் உனக்கு இண்டர்வ்யூ நடைபெறும். இண்டர்வ்யூவில் நம்முடைய சென்னையைச் சேர்ந்த மொழியியற் பேராசிரியர் ஒருவரும் தேர்வாளராக இருப்பார். அவர் எனக்கு மிகவும் வேண்டியவர். நீ தேர்ந்தெடுக்கப்பட வேண்டியது அவசியம் என்று அவருக்கு நான் சிபாரிசு செய்து எழுதுகிறேன். இந்த மல்லிகைப் பந்தல் கல்லூரியில் உனக்கும் இவர்களுக்கும் மனக் கசப்பு ஏற்பட்ட பின் நீ தொடர்ந்து இங்கு இருப்பது உன்னுடைய எதிர்காலத்துக்கு எந்த விதத்திலும் நல்லதில்லை. நான் சொல்லுகிற இந்த ஏற்பாட்டினுல் உன் எதிர்காலமும் விரைவில் ஒளி பெறும். உன் வீட்டு வறுமையும் ஓரளவு குறையும். திரும்பும்போது இந்தியாவின் எந்தப் பெரிய பல்கலைக் கழகத்திலும் நல்லதொரு பேராசிரியர் பதவியைப் பெற ஏற்ற தகுதியோடும் டாக்டர் பட்டத்தோடும் நீ திரும்பலாம்!'' என்று கூறி விட்டுப் போயிருந்தார். குமரப்பனுக்கும் அவருடைய இந்த யோசனை பிடித்திருந்தது. சத்தியமூர்த்தி மட்டும் சிறிது தயங்கினுன். ஆனல் ஊர் சென்ற மறு நாளே கலெக்டர் அனுப்பிய விண்ணப்பங்களை மட்டும் தயங்காமல் அவர் கூறியபடியே பூர்த்தி செய்து அவன் டெல்லிக்கு அனுப்பி வைத்திருந்தான்.

அதன் தொடர்பாகத்தான் இன்று கலெக்டரிடமிருந்து அவசரமாகத் தந்தி வந்து அவனும் நண்பன் குமரப்பனும் உடனே மதுரைக்குப் புறப்பட்டிருந்தார்கள். பஸ்ஸில் போகும்போது குமரப்பன் பேச்சுப் போக்கில் சத்தியமூர்த்தியிடம் மோகினியைப் பற்றி ஏதோ சொல்லத் தொடங்கிய வேளையில், ''வேறு ஏதாவது பேசு! ஊரிலுள்ள நாட்டியக்காரிகளைப் பற்றி யெல்லாம் நமக்கென்ன கவலை?'' என்று சத்தியமூர்த்தி முகத்தைச் சுளித்து வெறுப்போடு மிகவும் கடுமையாகக் கூறியதைக் கண்டு அவனுடைய அந்தத் திடீர் மன மாறுதலுக்குக் காரணம் ஒன்றும் புரியாமல் குமரப்பன் திகைத்தான். (தொடரும்)

---

*ஜெர்மன் நாணயம்.



சுத்தமான நெய்யென்று எவ்வாறு கண்டுபிடிப்பது

கைரா டிரேட் மார்க் இருக்கிறதா என்று பாருங்கள்

பிராண்ட் பெயர் அமுல் நெய் என்று எழுதியிருப்பதைப் படியுங்கள்

பிரத்தியேகமான அக்மார்க் குறி இருக்கிறதாவெனப் பாருங்கள்

அமுல் நெய்

இவையெல்லாம் சேர்ந்துதான் அமுல் நெய்—உத்திரவாதமுள்ள சுத்தமான நெய் என்றாகிறது



திருட இயலாத, பிரத்தியேகமான 1 கிலோ, 2 மற்றும் 4 கிலோக்கள் டின்களில் விற்கப்படுகிறது.

நல்ல உணவின் உண்மையான சுவைக்கு அமுல் உபயோகியுங்கள்-அமுல் நெய் புத்தம்புதிய பால் ஆடையின் ருசியுடையது

கைரா டிஸ்டிரிக்ட் கோ-ஆபிரேடிங் மில்க் ப்ரொடியூசர்ஸ் யூனியன் லிட். ஆனந்த்

CBKMP-7-TAM



நேற்று முதல் பிரமைகள் அவனை வசப் படுத்திக் கொண்டிருந்தன. இன்று நிசிக்கு மேல் அவனுக்குத் தூக்கம் கலைந்தது.

நிசிக்கு முந்தியும் அவன் தூங்கினான் என்று கூற முடியாது; கண்களை மூடி, உடலைத்தான் அயரப் போட்டிருந்தான். அடித் தொண்டையிலேயிருந்து கிளம்பி நாசி மாறி வந்த மூச்சு கரடுமுரடான குறட்டை ஒலி எழுப்புவதைக் கேட்டான்; 'நான் இவ்வளவு அசிங்கமாகவா குறட்டை விடுகிறேன்?' என்று வியப்புடன் நினைத்தவன், தான் தூங்கி விட்டதாகவும் நினைத்துக் கொண்டான்.

அப்பால், கனவென்று சொல்லமுடியாத ஓர் அவஸ்தை: தன் உடல் இல்லாத தான் வெளியில் எங்கெங்கோ சஞ்சரிப்பதாக அவனுக்குத் தோன்றியது: அந்நிலையில், அவனை யார் யாரோ காண வந்தாற்போல் இருந்தது: ஒருவர், இருவராக வந்தவர்கள் நூறு, ஆயிரமாய், கும்பல் கும்பலாக வந்தார்கள்; அவர்கள் யார் என்று அவனுக்கு விளங்கவில்லை. விளங்கவில்லையா? அவர்கள் எல்லோரும் அவனுக்கு வெகு காலமாய்த் தெரிந்தவர்களாகத் தோன்றினார்கள்; எல்லோரும் ஏககாலத்தில் தாங்கள் சொல்ல வேண்டியவைகளையெல்லாம் சொல்லித் தீர்த்துவிட விரும்புகிறவர்கள் போல் பேசிக் கொண்டே இருந்தனர்; அவர்கள் ஏன், எதைப் பற்றி அப்படிப் பேசுகிறார்கள் என்று அவனுக்குப் புரியவில்லை; புரியவில்லையா? அவர்கள் பேசுகின்ற ஒவ்வொரு செய்தியும் அவனுக்கு நன்றாகத் தெரிந்ததுதான்.

அந்தக் கூட்டம் அதிகமாகிக் கொண்டிருந்தது. வெறுமையாக இருந்த அந்த வீடு முழுவதும் கூட்டம் நிறைந்து வழிந்தது. உட்கார்ந்திருந்தவர்கள் நின்றார்கள் ; நின்ற பிறகும் கூட்டம் அருவி போல் கொட்டிக் கொண்டிருந்தது: ஒருவர் மீது ஒருவராக நின்றார்கள்; கூட்டமும், அதோடு பேச்சு ஒலியும் பெருகிக் கொண்டேயிருந்தன. மூச்சு விடமுடியாமல் நசுக்கப் பெறும் அந்த நேரத்திலும் அவர்களால் எப்படித்தான் பேச முடிகிறதோ ?

அவனுக்கே மூச்சு திணறியது. பத்துப்பேர் இருக்க முடிந்த இடத்தில் நூறு பேர் இருப்பது போன்ற நெருக்கத்தை உணர்ந்தான். கண் விழித்தான். குளிருக்காகப் போர்த்தியிருந்த போர்வையை எடுத்து விசிறினான். வேர்வையைத் துடைத்துக்கொண்டு சுற்றிலும் பார்த்தான். எப்படியாவது அந்த நெருக்கடியை விட்டு வெளியேறினால்தான் நிம்மதியாக மூச்சுவிட முடியும் என்று தோன்றியது. அவன் விருப்பத்துக்கு விரைந்து ஓடவா முடிகிறது? கால்கள் ஒன்றோடு ஒன்று பின்னிக் கொள்ளத் தடுமாறிக்கொண்டே, கூட்டத்திலிருந்து பிதுங்கி வெளியே விழுந்தவன் போல், கதவு மீது மோதித் திறந்து கொண்டு தெருவுக்கு வந்தான். பிறகுதான் அவனால் இயற்கையாக மூச்சு விட முடிந்தது. ஆனால் நெஞ்சில் இனம் விளங்காத திகிலும் தலையில் கிறுகிறுப்பும் இருந்தன.

தெருவின் மறுகரையில் இருந்தவாறு வீட்டைப் பார்த்தான். இருட்டை விளக்க முயன்ற பனி நரைத்து விட்டது. தெரு விளக்குகள் பனியை விலக்க முயன்று குளிர்ந்தன. வானச்சேற்றில் கிடந்த மீன்கள் துள்ளிக் கீழே விழ முயன்றன. தெரு நீண்டு வளைந்து செத்துக் கிடந்தது. சில எலிகள் குறுக்கும் நெடுக்குமாக அலைந்தன. கீரி ஒன்று இக்கரையிலிருந்து அக்கரைக்கு ஓடியது. திடீர் என்று கழுத்தை வெட்டும்போது ஆடு கத்துமே அது போல் 'மே......' என்றொரு சத்தம், நிசப்தத்துக்குப் பொருள் கூறியது. எதிரில் இருந்த வீடு, கருவூரில் வயிற்றுச் சாமான்களுக்கு இடையில் உருவாகாமல் கிடக்கும் பிண்டம்போல் இருட்டில் கலங்கலாய்க் கிடந்ததைப் பார்த்தான். அவன் உடல் சிலிர்த்தது. நீராடிய நாய் உடலைக் குலுக்குவது போல் — அல்ல, தன் உடலை யாரோ மேலே தூக்கி, உலுக்கி, குலுக்கி விடுவது போலிருந்தது அவனுக்கு.

அடுத்த நொடி, தன் தலை மீது ஒரு பாம்புக் கூடை இருப்பதாக உணர்ந்தான். கூடையின் மூடி நழுவி விழ, அதற்குள்ளிருந்து படம் விரித்துச் சீறிக்கொண்டே ஒரு கரு நாகம் வெளி வந்தது. ஒரு கருநாகமா? ஒன்று, பிறகு ஒன்றாக, எண்ணி மாளாத கருநாகங்களின் படை; அவன் உடல் வழியாக ஊர்ந்து, தெருவில் இறங்கி, சரசரவென்று அவன் வீட்டுக்குள் நுழைந்தன. இந்தப் பாம்புகளின் கூட்டம் போனதும், அங்கு முன்பிருந்த கூட்டம் அஞ்சி ஓடியிருக்குமோ? வீட்டுக்குள் நுழைந்த பாம்புகள், யாரையோ எதிர்பார்ப்பவை போல் வீதியை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தன.

பிறகு அவன் தலைமேல் இருந்த பாம்புக் கூடை மறைந்தது. கைகளால் முகத்தை அழுத்தமாய்த் தேய்த்துத் துடைத்துக் கொண்டான்.

''நான் இல்லாததையும் பொல்லாததையும் நினைத்துக் கொண்டிருக்கிறேன். நான் இயற்கையாக நினைக்க வேண்டும்.

''நான் என் வீட்டுக்கு எதிரே உள்ள வேப்ப மரத்தடியில் நிற்கிறேன். இப்போது இரவு நேரம். நிசிக்கு மேல் ஆகி யிருக்கும். பனி பலமாகப் பெய்கிறது; குளிரினால் எலும்புகூட மரத்து விடும் போல் இருந்தது.

''இந்த வேப்பமரத்தைப் பற்றியே நினைத்துப் பார்க்கலாமே? நான் பிறப்பதற்கு முன்பிருந்தே இங்கே இது இருக்கிறது. தினம் ஒரு மூட்டை கொட்டை உதிர்க்கிறது. எத்தனை விதமான பறவைகள் இந்த மரத்தில் தங்குகின்றன! இரவானதும், எல்லாம் கூட்டிலே ஒதுங்கி விட்டன போலும். இந்தக் குளிரில் அவை எப்படித்தான் வெளி வரும்?

''நான் ஏன் வீட்டை விட்டு வெளியில் வந்து நிற்கிறேன்? வீட்டில் யாரும் இல்லை. ஆனால் ஏதோ ஒரு பெரும் கூட்டம் என்னை நெருக்கி வெளியில் தள்ளிவிட்டாற் போல் இருந்தது. எனக்குத் திகிலாக இருக்கிறது. இந்தத் திகில் ஒரு பிரமைதான். பிரமையானாலும் திகில் திகிலாகவே இருக்கிறது. நான் பயப்படக் கூடாது. வீட்டுக்குள் என்ன இருக்கிறது? அங்கே போனால் என்ன ஆகி விடும்... ?''

அவனுடைய நினைவுகள் ஒரு முடிவைக் காணுமுன் — வெகு பக்கத்தில் தம்பட்டங்களின் சத்தம் கேட்டது. யாரோ சிலர் —சிலர் என்ன? நாலு பேர்; அவன் சரியாக எண்ணிப் பார்த்தான். நல்ல கறுப்பர்கள்; அரையில் கட்டிய அழுக்குத் துணி தவிர வேறு ஆடை இல்லை; தலையில் முண்டாசு; கழுத்தில் மாலையாகத் தொங்கிய கயிற்றோடு கட்டிய தம்பட்டங்களைக் குச்சிகளால் 'டம்....டம்' என்று தட்டிக் கொண்டே வந்தார்கள். என்ன உற்சாகமோ அவர்களுக்கு! கும்மி அடிப்பவர்கள் போல் குனிந்தும் நிமிர்ந்தும் குதித்தார்கள். அவனுக்கு அருகில் வந்ததும், தம்பட்டம் தட்டுவதை நிறுத்தி விட்டு அவனை உற்றுப் பார்த்தார்கள்.

''எதிர் வீட்டு சாமி இல்லே ? இருட்டிலே ஏன் நிக்கிறீங்க?''

''வீட்டிலே எனக்கு ரொம்பப் பயமா இருக்கு. நீங்கள் என்னோடு வீட்டுக்கு வருகிறீர்களா?'' என்று விரும்பாததைச் சொன்னான் அவன்.

''பயமா? எதுக்குப் பயம்? ஏன் பயம்... ....ம்?'' என்று நால்வரும் ஒரே சமயத்தில் கூக்குரல் இட்டுக் கொண்டே தம்பட்டத்தைக் கிழிக்க முயலுகிறவர்கள் எனத் 'தம்...தம் ...யம்...யம்.... பயம்' என்று ஓங்கி ஓங்கித் தட்டினார்கள்.

அந்தச் சத்தம் அவன் செவிப் புலனை உடைத்து விடும் போல் இருந்தது; இரண்டு காதுகளையும் அவன் பொத்திக் கொண்டான். 'இவர்கள் இல்லாவிட்டால் ஏது சத்தம்?' என்று கண்களை மூடிக் கொண்டான். கண்களை மூடியதும் 'அவர்கள் போய்விட்டார்களா?' என்று காணக் கண் திறந்தான். நால்வர் என்ன; ஒருத்தன் கூட இல்லை; தம்பட்டமும், சந்தடியும் இல்லை. செத்துக் கிடந்த தெரு நிசப்தமாக இருந்தது.

எல்லாக் காட்சிகளையும் நான்தான் தோற்றுவிக்கிறேன். எல்லாச் சத்தங்களையும் நான்தான் எழுப்பிக் கொண்டிருக்கிறேன். யாரும் இல்லாத வீட்டில் ரொம்பப் பேர் இருப்பதாக நினைத்தது பிரமை; நாலு பேர் தம்பட்டம் அடிப்பதாய்ப் பிரமை. எல்லாமே பிரமைதான். நான் வீட்டுக்குப் போகிறேன்.

ஆனால், தரையில் புதையுண்டவை போல் கால்கள் அசைய மறுத்தன. ஹிப்நாடிஸம் செய்கிறவர்கள் மனத்தை ஒருமுகப்படுத்தித் 'தூங்கு...தூங்கு' என்று சொல்லி எதிரியைத் தூங்க வைக்கிறார்கள் அல்லவா? அது அவனுக்கு ஞாபகம் வந்தது. ''நடக்க வேண்டும் என்று சொல்லித்தான் எனக்கு நடக்கவரும் போலும். இந்தப் பிரமைகளை விலக்கிவிட்டு நான் வீட்டுக்குப் போகிறேன்'' என்று பல முறை கூறிக் கொண்டேன்.

அடக்கமாக அடி மேல் அடி எடுத்துவைத்து அவன் வீட்டுக்குள் நுழைந்தான். திறந்த கதவு; தடையின்றி நடந்தான்; வாயிலைத் தாண்டியதும் காட்டினிடையில் உள்ள ஒரு குகையின் இருட்டுக்குள் மறைவது போல—

அவன் நிதானித்துக் கொண்டான். பழக்கப்பட்ட கைகள் மூன்று விளக்குகளை எரிய வைத்தன.

''பார்த்தாயா? இங்கே யாரும் இல்லை; ஒன்றும் இல்லை'' என்று அவன் தன்னையே முன்னிலைப்படுத்தித் தைரியம் சொல்லத் தொடங்கினான்.

''இங்கே வழக்கமாக இருப்பவைதான் இருக்கின்றன. ஒரு மேஜை, ஆறு நாற்காலிகள், மூன்று அலமாரிகள்... அலமாரிக்குள் ஏதாவது இருக்கிறதா என்று பார்ப்போமா?''

அலமாரிகளைத் திறந்தான்.

''என்ன இருக்கிறது? புத்தகங்கள், வெள்ளிச் சாமான்கள், என் வேஷ்டி சட்டைகள்... ஆக பயப்படுவதற்கு இங்கே ஒன்றும் இல்லை. அப்புறம்?''

''அப்புறம் என்ன? கூடத்தையும், சமையலறையையும் பார்த்து விட்டால் சந்தேகமே இராது'' என்று தன் கேள்விக்கு அவனே பதில் அளித்துக் கொண்டான்.

திறந்த அலமாரிகளை அப்படியே போட்டு விட்டுக் கூடத்தை அடைந்தான். அங்


திருமணம்



சென்னை, திருவல்லிக்கேணி டாக்டர் டி. பி. ராஜகோபால் அவர்களின் குமாரி சௌ. ஹேமலதாவுக்கும் திருப்பதி ரேடியோ இன்ஜினியர் ஸ்ரீ டி. என். வி. சீனிவாச அய்யங்கார் அவர்கள் குமாரர் சிரஞ்சீவி ராமபிரசாத் M.A., M.Sc. அவர்களுக்கும் 30-1-64ல் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க, மணமக்கள் !

கனவான்!



ிருந்த விளக்குகளையும் எரிய வைத்தான். கீழே சில பாத்திரங்கள் உருண்டு கிடந்தன. கொடிக் கயிற்றில் இரண்டு வேட்டிகளும், ஒரு சேலையும் உலர்ந்து கொண்டிருந்தன.

''சேலையா? எனக்கு எதற்குச் சேலை?''

அந்த ஹாஸ்யத்தைக் கேட்டுச் சிரித்தான்; சிரித்தவுடன் அவனுக்குச் சந்தேகம் வந்து விட்டது. சிரித்தது அவன்தானா?

''பகல் போல் வெளிச்சம் இருக்கிறது. என்னைத் தவிர வேறு யாராவது இருந்தால் கண்ணுக்குத் தெரியாதா?'' என்று முடிவு கண்டு நிமிர்ந்தபோது கொடியில் சேலை ஊசலாடியது.

''நான் சிரித்தது உண்மை. இந்தச் சேலை தான் பிரமை.''

கண்களை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு நேராகச் சமையல் அறையை நோக்கி நடந்தான். அங்கிருந்த இருட்டும் வெளிச்சத்தில் கரைந்தது.

தன் வீட்டைத் தனக்கே அறிமுகப்படுத்திக்கொண்டிருந்த அவன் அந்த அறையையும் பார்வையிட்டான். அடுப்பிலிருந்து வெளியே இழுக்கப்பட்ட விறகு, அடுப்பு மீது கலயம், தரையில் சோற்றுப் பானை, குழம்புச் சட்டி, ரசக் கிண்ணி, கவிழ்ந்து கிடக்கும் இரண்டு தம்ளர்கள்....

''இவைகளைத் தவிர இங்கே வேறு என்ன இருக்கிறது?''

சந்தேகம் அறவே தீர்ந்ததாய் அவனுக்கே தோன்றவில்லை. இடதுபுறம் திரும்பியபோது எதிரில் படுக்கை அறை தென்பட்டது. அதை நோக்கி நடந்தான். பத்தடி தூரம் நடப்பதற்குள் சொல்லி மாளாத் தூரம் நடப்பது போலப்பட்டது அவனுக்கு; பின்னால் யாரோ வருவதுபோன்ற பிரமையை அமுக்கிக் கொண்டு திரும்பிப் பாராமல் நடந்து படுக்கை அறை வாயிலில் நின்றான்.

''வீடு முழுவதும் பார்த்து எங்கும் ஒன்றும் இல்லை என்று உறுதியாகி விட்டது. இந்தப் படுக்கை அறையைத் திறந்து பார்க்காவிட்டால் என்ன? வேறு எங்கும் இல்லாதது இங்கு மட்டும் இருந்துவிடப் போகிறதா?'' என்று நினைத்தான்.

''வேறு எங்கும் இல்லாததைத் தேடி நான் இங்கு வரவில்லையே. எங்கும் ஒன்றும் இல்லை என்பதைக் காணத்தானே வந்தேன்?'' என்றும் நினைத்தான்.

''கூட்டமாக வந்தவர்கள், படையாக வந்த பாம்புகள், தம்பட்டம் அடித்த நிசப்தம் எல்லாமே இந்த அறையில் ஒளிந்திருக்கலாம் அல்லவா?''

இப்படி நினைத்தவன் சிரித்தான். சிரித்த போது அவன் உடல் அதிர்ந்தது. அந்த அதிர்ச்சியில் தான் மிக மிக, ஏழு எட்டு அடி உயரத்துக்கு வளர்ந்து தரையில் கால்கள் பாவாமல் நிற்பதுபோல் தோன்றியது. மிகவும் குனிந்து அறைக்குள் நுழைந்தான்.

அங்கிருந்த பொருள்கள் வெளிச்சத்தில் தென்பட்டாலும், அவை மீண்டும் இருட்டில் பதுங்கி மறைய விரும்புகிறவைபோல் தோற்றம் கொடுத்தன.

''இது என் கட்டில், மெத்தை, தலையணை, போர்வை, பிறகு நீயார்? நீ யார்?''

நிசப்தம் மௌனமாய்க் கண்ணீர் சிந்தியது.

''நீ யார் என்பதையே மறந்து விட்டேன். பார்த்தாயா? இந்த வீட்டில் சேலை கட்டுகிறவள், அடுப்பை ஏற்றுகிறவள், என்னை ஆள்கிறவள் நீதான். சேலை இருக்கிறது, அடுப்பு இருக்கிறது. ஆனால், நேற்றோடு நீ போய் விட்டாய்; இன்று நீ... இல்லை....''

தன் உடலில் உள்ள உதிரம் அவ்வளவும் கீழே கொட்டிக் குளிர்ந்து உறைவது போலத் தோன்ற, அவன் அவள் கிடந்த கட்டில் மீது சாய்ந்தான்.

...அறை, கட்டில், அதன்மீது கிடந்தவள், அவளைக் காட்டும் வெளிச்சம் எல்லாம் இருட்டில் அமுங்கிவிட, அந்த இருட்டில் — ஆற்று நீரில் உண்டாகுமே அது போல — சுழல்கள் தோன்ற, நாலு பேர் தம்பட்டம் அடிக்கும் சத்தம், படையாக ஊர்ந்த பாம்புகள், இருட்டு, வெளிச்சம், கட்டில், தலையணை, போர்வைக்குள் அவள் —

''நீ இல்லாமல் எனக்குப் பயமாக இருக்கிறது ராஜி. உண்மையாகவே நீ இல்லையா?''

''நீ எங்கே ராஜி?''

''என்னையே எனக்குத் தெரியவில்லையே..?''

கொத்தவால்சாவடியில்

கார்ட்டூன் காட்சிகள் 3



பொய்ப் பல்



ரா. விழிநாதன்

ஒருவேளை உங்களுக்கு நிஜப் பற்களைப் பிடுங்கிப் பொய்ப் பற்கள் கட்டிக் கொள்ளும் அருமையான வாய்ப்புக் கிட்டியிருக்குமோ, கிட்டியிருக்காதோ! கிட்டியிருந்தால் நீங்கள் அநுபவசாலிகள்; கிட்டியிராவிட்டால் அதிர்ஷ்டக்காரர்கள். அந்த வாய்ப்புக் கிட்டியிருப்பவர்களின் அநுபவமே 'அலாதி.

'பல் பிடுங்கிக் கொள்வது என்ன பெரிய விஷயம்? — அதுவும் இந்தக் காலத்தில்?' என்று சுலபமாகக் கேட்டுவிடலாம். நானும் அப்படித்தான் முதலில் எண்ணினேன் — கண்ணைப் பிடுங்கும் காரியமா? பல்லைத் தானே பிடுங்குகிறார்கள்! இது ஒன்றும் பயங்கரமான காரியம் இல்லையே என்று!

ஆனால் அந்த வேளை நெருங்க நெருங்க என் உயிர் உலர ஆரம்பித்து விட்டது.

'வாருங்கள்!' என்று டாக்டர் பல் வைத்தியத்துக்கென்று பிரத்தியேகமாக ஏற்பட்ட நாற்காலிக்கு என்னை அழைத்ததும் என் மனத்தில் என்ன என்னவோ எண்ணங்கள்! இந்தக் காலத்தில் மரண தண்டனையைக் கூட இத்தகைய மின்சார நாற்காலியில் தானே நிறைவேற்றுகிறார்களாம். அந்த நாற்காலியில் உட்காரும்போது தூக்குத் தண்டனை பெற்றுவிட்டது போன்ற உணர்வே எனக்கு ஏற்பட்டது.

''பெரிய பெரிய ஆபரேஷனுக்குப் பயப்படாதவர்கள் கூட இந்த நாற்காலியைக் கண்டால் ஏனோ பயப்படுகிறார்கள்!'' என்றார் டாக்டர் வேடிக்கையாக. பிறகு என்னைப் பார்த்து, ''ஆ, ஆ — வாயைத் திறவுங்கள்'' என்றார்.

பாடும் ஒத்திகையில் மணிக் கணக்காக வாயைப் பிளந்து ஆலாபனம் செய்கிறோமே, நமக்கு இது ஒரு பிரமாதமா? தன்னம்பிக்கையுடன் வாயைத் திறந்தேன்.

''இப்படி இல்லை!''

''பின்னே எப்படி?''

''நன்றாக முழு வாயையும் திறவுங்கள். ஆ.....ஆ.....!''

வாய் கிழிந்துவிடும் அளவுக்குத் திறந்தபின் தான் டாக்டருக்குத் திருப்தி ஏற்பட்டது. ஈறுகளை வலி தெரியாமல் மறக்க வைப்பதற்காகச் சுருக், சுருக் கென்று ஊசி போட்டார். அடேயப்பா!

என்ன வலி! என்ன வலி! ஒரு பல்லுக்கு இரண்டு ஊசி! மேலும் இழும்! என்ன அநியாயம்!

''ஆண்டவனே! நான் உன்னைப் பார்க்கிறேனே! நீ என்னைப் பார்க்கக் கூடாதா?'' என எதிரிலிருந்த ராமகிருஷ்ணரின் படத்தைப் பார்த்து வேண்டிக் கொண்டேன்.

பரமஹம்ஸரை அவரது ஒரு சீடன் கேட்டானாம்: ''என்ன செய்வேன் நான்? மனம் ஒரு நிலையில் நிற்க மாட்டேன் என்கிறதே! ஆண்டவன் மீது மனத்தை ஒருமைப்பட்ட நிலையில் பதிப்பது எப்படி?''

''பல் வலி வந்து உனக்கு அநுபவம் உண்டா? அப்போது எப்படிக் கவனம் முழுவதும் தொந்தரவு தரும் பல் மீதே லயிக்கிறதோ, திசை மாறிச் செல்வதில்லையோ, அப்படியே ஆண்டவன் மீதும் மனத்தை ஒருமைப்படுத்த வேண்டும்!'' என்றாராம் பரமஹம்ஸர்.

இதற்கு என்ன அர்த்தம்? ராமகிருஷ்ண பரமஹம்ஸரும் பல் வலியினால் கஷ்டப்பட்டிருக்கிறார் என்றுதானே?

ஊசி போட்டு முடித்த பின், ஒருவாறு விடுதலை பெற்றுக் குடிக்கத் தண்ணீர் கேட்டால், அடேயப்பா! என் உதடுகள் ஒரே யடியாகக் கனத்து வீங்கி விட்டன. இரண்டு உதடுகளும் ஒன்றானது எப்போது?

டாக்டர் குறட்டை எடுத்துப் பல்லைப் பிடுங்கலானார். அந்த நேரத்தில் முகம் கணத்துக்குக் கணம் மாறி, மாடர்ன் ஆர்ட்டுக்கு ஒரு சிறந்த மாதிரியாகக் காட்சி அளித்தது. இடது பக்கம் நாற்பது வயதைக் காட்டிற்று என்றால், வலது பக்கம் அறுபதையும் தாண்டி நின்றது. பற்களைப் பிடுங்கி முடித்த டாக்டர், ''புதுப் பற்கள் கட்ட ஒரு மாதம் ஆகும்!'' என்றார். அந்த அதிர்ச்சியில் எனக்குப் பிராணனே போய் விட்டது. மூக்கறுந்தவன் போல் முகத்தை மூடிக் கொண்டு வீட்டுக்குப் போனவன்தான்.



பிறர் முகத்தில் விழிப்பதில்லை என்ற முடிவுடன் அறையில் அடைந்து கிடந்தேன். அத்தனை நாளும் இல்லாத திருநாளாக என்னை எத்தனை பேர் பார்க்க வந்து விட்டார்கள், தெரியுமா?

பல்லில்லாத காலத்தில் நான் பேசிய பேச்சின் அழகைக் கூறப் புகுந்தால், அது பதினெண் புரா ணங்களைக் காட்டிலும் பெருகிவிடும்.

'சீக்கிரம் புதிய பல் கட்டுங்கள், சீக்கிரம் புதிய பல் கட்டுங்கள்!'' என்று நான் டாக்டரின் பிரா ணனை வாங்கிய பின் ஒரு நாள் ரோதனை தாளா மல் டாக்டர் என்னை 'இம்ப்ரெஷனு'க்காக வரச் சொன்னார். அவர் சொன்ன நேரத்தில் ஆஸ்பத்தி ரிக்குப் போனேன். அதாவது என்னைப் பற்றி அவ ருக்கு ஒரு இம்ப்ரெஷன் ஏற்படுவதற்காக அல்ல; என் முகத்தின் 'இம்ப்ரெஷன்' கொடுப்பதற்காகச் சென்றேன்.

'வாயைத் திறவுங்கள். நாக்கைத் தூக்குங்கள்! அண்ணத்தோடு ஒட்ட வைத்துக் கொள்ளுங்கள்!'' என்றெல்லாம் அவர் வெகு சுலபமாகச் சொல்லிக் கொண்டே போனார். அவர் சொன்ன அந்தப் பயிற்சிகளைச் செய்வதற்குள் எனக்குப் போதும் போதுமென்றாகி விட்டது.

டாக்டர் மெழுகினால் அச்சுக்கள் செய்யலானார். டாக்டர் சிற்பியானார். நோயாளியான நான் 'மாடல்' ஆனேன். அவர் முகத்தின் அகலம், நீளம், மேடு பள்ளம் எல்லாவற்றையும் அளந்து எடுத்துக் கொண்டார். வெகு சிரமப்பட்டு என் முகத்தைப் படித்தார். தினம் தினம் புதுப் புது மாதிரிகளை என் வாயில் திணித்து என்னையே பார்த் துக்கொள்ளச் சொன்னார் கண்ணாடியில்.

ஒரு சமயம் வாயில் நாலு கொழுக்கட்டை அடைத்தாற் போலிருக்கும். இன்னொரு சமயம் கன்னம் ஒட்டிப் போயிருக்கும். மற்றொரு சமயம் உதடுகள் உள்ளே மடிந்திருக்கும் அல்லது நீண் டிருக்கும். சில சமயம் பற்கள் குதிரைப் பற்களா கக் காட்சி தரும்.

''டாக்டர்! எனக்குப் பழைய உருவத்தைக் கொடுங்கள், டாக்டர்!'' என்று மன்றாடினேன்.

தினம் நடந்த புதுப்புதுச் சோதனைகள் காரண மாக எனக்கு என் பழைய உருவமே மறந்து விட் டது. டாக்டரும் பாவம், தமது எத்தனையோ பல முயற்சிகளில் என் பழைய முகத்தை மறந்து விட் டார். எனவே, என் பழைய முகம் எனக்குத் திரும்பி வருவதாயில்லை. கடைசியில் அலுத்துப் போய் ஒரு வகை வார்ப்புக்குச் சம்மதித்துவிட்டேன்.

வருத்தம் நிறைந்த அந்த மன நிலையிலும் ஆறுதலை வேண்டி வேதாந்தபரமாக ஒரு முடிவுக்கு வந்தேன். 'ஒரு பிறவியில் இரட்டை முகம் எடுக்கும் பாக்கியம் எல்லோருக்கும் கிட்டக் கூடியதா? நமக் குக் கிடைத்துள்ளது நமது பூர்வஜன்ம பூஜாபலன் தான்!' என்று மகிழ முயன்றேன்.

எந்தப் பற்களுக்காக நான் இத்தனை வியாகூலப் பட்டேனோ, அவை கிடைத்ததற்காக நான் மகிழ வில்லை. காரணம், டாக்டரின் பில்லைப் பார்த்ததும் என் இடுப்பு ஒடிந்து விட்டது.

எனது விலைமதிப்பற்ற சொந்தப் பற்களைப் பறி கொடுத்து விட்டு, விலை உயர்ந்த பற்களைப் பெற்ற தற்கு யாரைப் புகழ்வது? விஞ்ஞான ரீதியாக வளர்ந்த இந்த நவயுகத்தைப் புகழ்வதா? விலைமதிப் பற்ற பொருளை இழந்து விலையுயர்ந்த பொருளைப் பெறப் பாடுபடும் சமூகத்தைப் பாராட்டுவதா?

பகட்டை விரும்பும் இந்தச் சமூகத்திலே, பொய்ச் சிரிப்புச் சிரித்து மழுப்பும் இந்த உலகத்திலே, நல்ல வேளை, நான் பொய்ப்பற்களைக் காட்டித்தானே சிரித்து வருகிறேன்! அதுவரை எனக்குத் திருப்தியே!



சுசிலாவின் தாய் இல்லாக் குறையை நினைத்து ராஜு கண் கலங்கியதைக் கண்டு உமாபதி அவரைச் சமாதானப்படுத்த முயன்றார்.

''உலகம் கெடக்கட்டும். வயது வந்த கன்னிப் பெண்கள் இருக்கும் இடத்தில் மற்றொரு துணை வேண்டியதன் அவசியம் உனக்கே தெரிகிறதே. மீனாட்சி இருந்தும் இல்லாததும் ஒன்றாகத்தான் இருந்தது. ஆனால் அப்போதெல்லாம் சுசிலாவின் 'தாய்' என்பதன் பொருள் நமக்கு இப்பொழுது தானே நன்றாக விளங்குகிறது?'' என்றார் உமாபதி.

''ஸார்....ஸார்.....'' இருவருமே திரும்பி நோக்கினர்.

''அடேடே! கணபதியா? எங்கேப்பா இப்படி?'' என்று உமாபதி கேட்டார்.

''ஒண்ணுமில்லே மாமா. இந்த மாடத் தெரு சத்திரத்திலே ஒருவனுக்குக் கல்யாணம். என்னோட நண்பன். அதற்கு வந்தேன். உங்களைப் பார்த்தேன். அப்படியே நின்று விட்டேன்'' என்று கணபதி கூறினான்.

ராஜு அவனைத் தலையிலிருந்து கால்வரை ஒரு முறை நோக்கினார். நல்ல திடகாத்திர சரீரம்

நீரோட்டம்

எஸ். ரங்கநாயகி



தான். ஆனால் அங்கங்கள் மட்டும் சற்றுக் கோணல் மாணலாகத்தான் இருந்தன. பாதகமில்லை. புருஷப் பிறவிதானே!

''என்னடா கணபதி, நண்பர்கள் கல்யாண விருந்திலேயே உடம்பை இரண்டாக ஆக்கிக் கொண்டு விட்டாயே! உன் விவாக விருந்தை எப்போது தருவதாக உத்தேசம்?'' என்று உமாபதி கேட்டார்.

ராஜு கணபதியை உற்று நோக்கினார். விவாகமாகாத பிள்ளை. நன்றாகக் கவனிக்க வேண்டும்.

''கல்யாணத்தை முடித்துக் கொண்டால் இது போல் சுதந்திரமாகத் திரிய முடியுமா மாமா? நான் சுயேச்சையாகத் திரிவதைப் பார்த்து உங்களுக்கு ஏன் இந்தப் பொறாமை?'' பருத்த உடல் குலுங்க அவன் சிரித்தபடியே தன் ஹாஸ்யத்தைத் தானே ரசித்துக் கூறினான்.

உமாபதி பெரிதாகச் சிரிக்காவிட்டாலும் உதடுகளை மட்டும் பிரித்துச் சிரித்தார். ''அம்மா ஊரிலே சுகம்தானே...?''

''சுகத்துக்கு என்ன குறைவு? என்னோடு இந்தப் பட்டண வாசத்துக்குத் துடிக்கிறாள். நான் தான் 'கடவுளே! நல்ல வீடு கிடைக்கக் கூடாது' என்று வேண்டுகிறேன். கடவுளும் இதுவரை மனமிரங்கி விட்டார்...''

''கடவுளை மனமிரங்கும்படி நீ செய்து விட்டாயாக்கும்? போகட்டும் போ. நல்ல ஹோட்டலாகத்தான் பிடித்திருக்கிறாய். உன் உடம்பு சதை மற்றவர்களுக்கு ஒரு விளம்பரமாக இருக்கும். சாப்பாடு ரேட்டையாவது பாதியாக்கிக்கொள்ளச் சொல்லு.'' உமாபதி சிரித்தபடி கூறினார்.

''கேலி இருக்கட்டும் மாமா! உங்கள் கூட இருப்பவர்......''

''அவர் எனது நண்பர். ராஜு என்று பெயர். உன்னைப் போன்ற பிரும்மச்சாரிகள் விவாகத்தை

விவாகத்தைப் பற்றி நீ சிந்தித்ததேயில்லை. இப்பொழுது மீனாட்சி காலமானதும் வரன் வேட்டையில் இறங்குகிறாய். சுசிலாவைத் தனித்து வீட்டில் வைத்திருக்கப் பயப்படுகிறாய்.

ழுக்கித் திரிவதால் இவரைப் போன்ற
கள் பெண்ணை வைத்துக் கொண்டு
லைந்து திரிகிறார்கள்.''

''ஆணுக்குப் பெண் சமமாக நிற்கும்
லமாயிற்றே மாமா! இனிமேல்
லை எதற்கு?''

''கிடக்கட்டும்டா பேச்சு. உன்
ம்மாவின் விலாசத்தைக் கொடு''
ன்று உமாபதி கண்டிப்பான குரலில்
கட்டதும் கணபதி சற்று அதிசயித்து
ன்று விட்டான்.

''எனக்கா?.... என் அம்மாவின்
லாசமா?''

''நீ ஏண்டா இப்படிப் பேசுகிறாய்?
பீசில் நான் உனக்கு சீனியராக
ருந்தேன் என்ற மரியாதை வைத்துக்
காடுடா'' என்றார் உமாபதி.

கணபதி விலாசத்தைக் கொடுத்
ான். பிறகுதான் அவனைப் போக
ட்டார் உமாபதி.

''யாரப்பா இந்தப் பிள்ளை?'' என்று
ராஜு கேட்டார்.

''முதலில் எங்கள் ஆபீசில் வேலை
ாக இருந்தான். பிறகு வேறு இடத்
ல் தேடிக் கொண்டு விட்டான். அங்கு
ம்பளம் அதிகம் கிடைக்கிறது. ராஜு!
ந்த வரனில் எனக்கு முழு சுடுபாடு
டையாது. பிள்ளைக்கு வாய்ச் சவுடால்
திகம். அவன்
ாயைப் பற்றி விவர
ாக ஒன்றும் தெரி
ாது. அப்பா இறந்து
ிட்டார். அதிக உற
ினர்கள் இருப்பதாக
ும் தெரியவில்லை.
ஆனால் பேச்சின்
மூலமே முன்னுக்கு
வரக் கூடிய பையன்
இவன்'' என்றார்
உமாபதி.

''பையன் பார்ப்ப
தற்கும் நன்றாக இல்லை.
அதனால் பாதகமில்லை. ஆண்மகன்
தானே! இன்றே புறப்பட்டு அவன்
தாயைப் பார்த்து விட்டு வரலாமே!''
ராஜு அந்த நேரத்திலேயே கிளம்
பத் தயாராகி விட்டார்.

''என்ன அவசரம் இது? சுசீலாவை
ஒரு வார்த்தை கேட்கவேண்டாமா?''

''கல்யாணம் என்று முடிந்து
விட்டால் எல்லாம் சரியாகிவிடும்
உமாபதி!'' என்றார் ராஜு.

''அவனுடைய சொத்து, சுதந்
திரம், அம்மாவின் குணம் ஒன்றையும்
பற்றி விசாரிக்க வேண்டாமா?''

''சொத்தைப் பற்றிக் கவலைப்பட
வேண்டாம். எனக்கிருப்பதெல்லாம்
சுசீலாவுக்குத்தானே! அதுவே போதும்.
அவனுடைய அம்மா எப்படியிருந்தால்
நமக்கென்ன, சரியான பதில் பிள்
ளையே கொடுத்து விடுவான் போல்
இருக்கே. மேலும் பிள்ளையை என் வீட்
டோடு வைத்துக் கொண்டு விட்டால்
எனக்கும் ஆதரவாக இருக்கும்....''

மீண்டும் உமாபதியை அழைத்துக்
கொண்டு தந்தை உள்ளே நுழைந்ததை
கண்டு சுசீலா வியந்தாள். இன்னுமா
இவர்கள் பேச்சு முடியவில்லை?

''சுசீலா! ஒரு வேஷ்டியையும்
ஷர்ட்டையும் அந்தப் பையில் எடுத்து



வை. சோப்பையும், சீப்பையும் அந்தப் பையிலேயே போடு. நானும் உமாபதியும் செங்கல்பட்டு வரையில் போய் வருகிறோம்.''

சுசீலா திடுக்கிட்டு ஒரு நிமிடம் நின்றாள். பிறகு சற்றுச் சினத்துடன், ''அப்பா, உங்களுக்கு என் மீது ஏன் இந்த வஞ்சனை? தினமும் ஒரு இடமாகத் தேடிக் குப்பையில் தள்ள முயற்சி செய்கிறீர்களா? அம்மா இருந்தால் இப்படியெல்லாம் நடக்குமா?'' என்று படபடத்தாள்.

''சும்மா இடீ! அம்மாவாம் அம்மா. இருந்தும் உயிரை வாங்கினாள். இறந்தும் உயிரை வாங்குகிறாள்'' என்று கோபத்துடன் மொழிந்தார் ராஜு.

சுசீலா கேவத் தொடங்கினாள். உமாபதி ''சுசீலா! அழாதேம்மா. நிலைகொள்ளாத மனத்தின் காரணமாக நிலை தெரியாமல் பேசுகிறான் ராஜு. நான் உனக்கு நல்ல இடமாகத்தான் பார்ப்பேன். கவலைப்படாதே. உனக்குத் துணையாக என் அம்மாவை இங்கு அனுப்பி விட்டுப் போகிறோம். போகும் இடத்தில் முடியப் போகும் காரியத்துக்குத் தகுந்தாற்போல் நாங்கள் திரும்பும் நாட்களின் எண்ணிக்கையும் ஆகும்'' என்று கூறினார்.

அவர்கள் கிளம்பிச் சென்ற சிறிது நேரத்துக்குள் உமாபதியின் தாயார் பாலம் அவளுக்குத் துணையாக இருக்க வந்து விட்டாள்.

நாட்கள் நான்கு நகர்ந்து விட்டன. சுசீலா பதறி விட்டாள். அப்பா ஏன் இன்னும் திரும்ப வில்லை? போன இடத்தில் இருவரும் என்ன செய்கிறார்கள்?

ஐந்தாம் நாள் மாலை வாசலில் டாக்சிச் சத்தம் கேட்டது. உமாபதி முதலில் இறங்கினார். பிறகு அவள் தந்தை இறங்கினார்...அதற்குப் பின்னால் யார்....... யார்..... அது...? சுசீலா கண்களை நன்றாகத் துடைத்து நோக்கினாள். ஒரு நிமிடம் நோக்கிய பிறகு கண்கள் தங்கள் கதவை மூடி மனத்தின் உள்ளே புக முயற்சி செய்தன. அங்கு நீர் நிரம்பிக் கிடந்தது.

ஃ ஃ ஃ

உமாபதிக்குத் தம் வீட்டில் நிம்மதியாக இருக்க முடியவில்லை. அவரது தாயார் பாலம் அவரை உலுக்கி எடுத்துக் கொண்டிருந்தாள். உமாபதிக்கு ராஜுவுடன் தாம் ஏன் சென்றோம் என்றாகி விட்டது. இத்தனைக்கும் அவர் முழு ஒப்புதல்கூடக் கொடுக்கவில்லை.

''என்னடா, உமாபதி! இப்படி ஒரு வேலை செய்து வைச்சுட்டானே ராஜு. ஆண் புத்தி இறுக்குப் புத்திங்கிறது சரியாகத்தான் போச்சு. அவனோட மனைவி மீனாட்சி இருந்தாளே, பொல்லாதவள் தான். ஆனால் ராஜு போய் அவள் இருந்தால் இப்படிச் செய்திருப்பாளாடா? நீயும் கூடப் போனியே!'' என்று பாலம் கேட்டுக் கொண்டே யிருந்தாள்.

''நான் என்னம்மா செய்யட்டும்? போகிற இடத்திலே எல்லாம் 'பெண்ணை நாலு நாளைக்கு அழைச்சு வைச்சுக்க அம்மா இல்லையே'ன்னு ஒரு வாய்பட்டாப்லே எல்லாரும் கேட்டதும் ராஜு தவிச்சுட்டான். அவனோட மனசே ஒரு நிலையில் இல்லையே!''

''கணபதியின் அம்மாவும் இதே கேள்வியைக் கேட்டுட்டாளாக்கும்.''

''ஆமாம். அதோடு இன்னும் ஒரு படி முன்னேறி விட்டாள். எல்லாரும் ஒரு குடும்பமாகப் பட்டணத்திலிருக்கலாமே என்று ஆரம்பித்தாள். சம்பந்தியும் சம்பந்தியும் ஒரே வீட்டில் இருப்பதை யார்தான் ஒப்புவார்கள்?''

''சரி, அது போகட்டும். அந்தக் கணபதிக்குச் சுசீலாவைக் கல்யாணம் செய்து கொடுக்காததும் நல்லதுதான்.. வேண்டாம்னு தீர்த்துக் கட்டிட்டு வர்துடறதுதானே! ஒரு பச்சைப் பெண்ணோட பாவத்தை ஏதுக்குக் கொட்டிக் கிட்டு வந்திங்களாம்?''

''ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்தோமில்லே! அப்போத்தான் இப்படி ஏற்பட்டுப்போச்சு....திரும்பி ஊருக்கு வர ரயிலடியிலே நாங்க காத்துக்கிட்டிருந்தோம். அப்போதுதான் அங்கிருந்த ஒரு பெரியவரு எங்களோடு பேச்சுக் கொடுத்தார். அருகில் இருக்கும் கிராமத்திலே அவருக்கு வாத்தியார் வேலையாம். உனக்குத் தெரியுமே வாத்தியாருக்கு ஸ்கூலிலே எவ்வளவு குழந்தைகளிருக்குமோ, அதில் மூணுலே ஒரு பாகமாவது வீட்டிலே குழந்தைகள் இருக்குமென்று. அதுவும் முக்கால்வாசி பெண் பிள்ளைகள். பெரிய பெண்ணுக்கே இன்னும் கலியாணம் ஆனபாடில்லை. அறுபது வயசுக் கிழவருக்கு நாலாவது இளையாளா கொடுக்கிற பேச்சுக்கு அவர் பயணப்பட்டுக்கிட்டிருந்தார். நாங்க வந்திருக்கிற விஷயத்தைக் கேட்டதும் அவருக்கு முகம் மலர்ந்து போச்சு. தாயற்ற பெண் காரணமாகச் சுசீலாவின் கல்யாணம் தடைப்படுவதை அவர் அறிந்தார். எங்ககிட்டே ஏதேதோ பலவிதமா பேசித் தம் பெண்ணைக் காட்ட ஸ்டேஷனிலிருந்து எங்களை வீட்டுக்கு அழைத்துப் போனார். ராஜு மனம் தவித்துத்தான் போனான். 'பெண்ணை அழைத்துப் பண்டிகை கொண்டாடவும், உங்களைக் கவனிக்கவும் ஒரு பெண் பிள்ளை அவசியம்

தானே?'' என்று அந்தப் பெரியவர் வற்புறுத்தவே சம்மதத்தைத் தெரிவித்து விட்டான். மறு நாளே நல்ல முகூர்த்த நாளாக இருந்தது. விவாகத்தை முடித்து விட்டோம். மேலே ஒரு நாள் தங்கிவிட்டு, கையோடு பெண்ணையும் அழைத்து வந்து விட்டோம். நான் இடையே என்ன சொல்ல முடியும்?''

''ரொம்ப அழகுதான் போ. பெண்ணுக்கு வரன் தேடப் போன இடத்திலே தனக்கே ஒரு பெண்ணைத் தேடி மாலை போட்டு விட்டானுக்கும். இனிமேல் பாவம், அந்தச் சுசீலா, என்ன கஷ்டப்படப் போகிறளோ?''

''முழுவதும் அப்படிச் சொல்லி விடாதேம்மா. சுசீலாவின் நல்வாழ்வுக்குத்தான் அவன் விவாகம் செய்து கொண்டான். இதைப் பற்றிப் பெரியவர்கிட்டேயே கூறி அந்தப் பெண்ணிடமும் சொல்லச் சொல்லி விட்டான். அதற்கு அந்தப் பெண் யசோதையும் சம்மதம் தந்து விட்டாள்! பார்த்தால் நல்ல பெண்ணாகத்தான் தோணுது...''

உமாபதியும் பாலமும் தர்க்கத்தில் ஈடுபட்டிருந்த அதே நேரத்தில் ராஜு சுசீலாவுக்குத் தனிமையில் விளக்கம் கூறிக் கொண்டிருந்தார்.

''சுசீலா! உன்னைக் கேட்காமல் அப்பா ஒரு முடிவுக்கு ஒரே நிமிடத்தில் வந்து ஏதோ செய்யக் கூடாததைச் செய்து விட்டாரே என்று நீ நினைக்கக் கூடாது. முக்கியமாக உன் காரணத்தை முன் விட்டே இந்த முடிவுக்கு வந்தேன்....''

''அப்பா! நீங்கள் ஏன் என்னைத் தவருகப் புரிந்து கொள்கிறீர்கள்? சித்தியுடன் நீங்கள் காரிலிருந்து இறங்கிய போது நான் ஒரு கணம் திடுக்கிட்டது உண்மைதான். ஆனல்.....'' ஒரு கணம் நிறுத்தினள் சுசீலா. அவர் ஊரிலிருந்து வந்த நிலை அவள் முன் திரைப் படமாக வந்து நின்றது.

தந்தை காரிலிருந்து இறங்கியதும் புத்தம் மஞ்சள் கயிறு கழுத்தில் மின்ன, மின்னல்கொடியாகப் பின்னே இறங்கிய பெண்ணைப் பார்த்துச் சுசீலா ஸ்தம்பித்து நின்று விட்டாள். ஒருகணம் தான்; பிறகு அவளுக்கு விஷயம் புரிந்து விட்டது. அவளது தந்தையின் பின்னே தலை கவிழ்ந்தபடி நின்றவள் தந்தையின் வீட்டில் உரிமை கொண்டாட வந்தவளாகத்தான் இருக்க வேண்டும். அதை ஊர்ஜிதம் செய்வதே போல் முதலில் உள்ளே வந்த உமாபதி தம் தாயாரை நோக்கி, ''அம்மா! விஷயமனைத்தும் பிறகு சொல்கிறேன். அந்தப் பெண்ணை நிற்க வைத்து ஆ ர த் தி சுற்றிக் கொட்டு'' என்ருர்.



பாட்டியும் பேரனும் ராட்டினம் சுற்றிக் கொண்டிருக்கிருர்கள்!

அதிசயித்து, கன்னத்தில் ஊன்றியிருந்த கையைக் கீழே விடுத்த பாலம், உள்ளே சென்று ஒரு பாத்திரத்தில் திருஷ்டி நீரை எடுத்து வந்தாள். சுற்றிக் கொட்டும் நேரத்திலேயே அந்தப் பெண்ணை எடை போடவும் ஆரம்பித்தாள். புதிய பெண் உள்ளே நுழைந்து விட்டாள். எல்லாவற்றையும் பார்த்தபடி ஓர் ஓரமாக நின்றிருந்தாள் சுசீலா.

உமாபதி தன் தாயை மேலும் அங்கே தங்க விடவில்லை. ''ராஜு! நான் போய் வருகிறேன்.... அம்மா, வா, கிளம்பலாம்.''

ராஜு சுசீலாவை நோக்கி, ''சுசீலா! யசோதையிடம் பாலம்மாவை நமஸ்காரம் பண்ணச் சொல்லம்மா'' என்ருர்.

அவள் பெயர் யசோதை என்று சுசீலாவுக்குப் புரிந்தது. சுசீலா கூறுமலே யசோதை நமஸ்கரித்தாள். பாலம்மா வாய் திறந்து ஒன்றும் கூறவில்லை.

''அம்மா, கிளம்பு. நேரமாகி விட்டதே. வா, போகலாம்.'' உமாபதி துரிதப்படுத்தினர். மகனுடைய தொந்தரவைப் பொறுக்க முடியாமல் பாலமும் கிளம்பி விட்டாள். சுசீலா ஒரு தட்டில் வெற்றிலை, பாக்கு, தேங்காயை வைத்து அவர்களிடம் கொடுத்தாள்.

அவர்கள் சென்றபிறகு ராஜு சுசிலாவை நோக்கினார். அவளும் அவரை இதே நேரத்தில் ஏறிட்டு நோக்கினாள்.

''சுசிலா! இனி எந்தப் பைத்தியக்காரனும் உனக்கு இந்த வீட்டில் நாதியில்லை என்றுசொல்ல முடியாத நிலையைவைத்து விட்டேன். கல்யாணம் ஆனாலும் ஆகாவிட்டாலும் உன்னைச் சீராட்ட உனக்கு ஒரு அம்மாவை அழைத்து வந்து விட்டேன். இனி நீ அநாதை இல்லை..'' ராஜு கூறினார். அவர் முகத்தில் சந்தோஷமும் இல்லை; துயரமுமில்லை; சலனமுமில்லை. உலகத்துக்கு ஒரு சவால் விடுவதாக இருந்தது அவர் பேச்சு.

சுசிலாவுக்கு வேதனை வாட்டி எடுத்தது. சமையல் அறைப் பக்கம் சென்ற யசோதையை அவள் நெஞ்சிலே நிறுத்திப் பார்த்தாள். அன்றையக் கணக்கு வரை யசோதை அவளைவிட இரண்டு வயது மூத்தவளாக இருக்கலாம். பருவத்தின் பூரண எழில் உடலெங்கும் பொழிந்து நிற்க, உருண்டு திரண்ட கன்னங்களும்—ஐயோ! இந்த வாழ்க்கையைக் காட்டவா உருவெடுத்தன! இயற்கையின் உயிரோவியம் இந்த வழியிலா காலடி எடுத்து வைக்க வேண்டும்? பார்க்கப் போனால், அதில் சுசிலா, ராஜுவினுடைய சுயநலம்தான் பொதிந்து கிடந்தது. இந்த அப்பாவுக்கு ஏன் இப்படிப் புத்தி போகவேண்டும்...? இருக்காது, அப்பா வேண்டுமென்றே முன்னேற்பாடாகச் செய்ததாகத்தான் இருக்க வேண்டும். நாற்பத்திரண்டு வயதில் அவருக்கு இப்படி ஒரு நப்பாசையும் வேண்டுமா...? பெண்ணைச் சாக்கிட்டுத் தமக்குச் சாதகமான நிலையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார். இந்த அப்பாவைச் சும்மா விடக் கூடாது...

இரக்கமும் கோபமும் இரு மையங்களாக அவள் மனத்தை வாட்டியெடுத்தபோது அவளால் ஒன்றுமே பேச முடியவில்லை. அவள் தந்தைதான் மீண்டும் பேசினார்:

''சுசிலா! உன் விவாகத்தை முடிக்கத்தான் போனேன். ஆனால் மற்ற இடங்களில் கேட்ட கேள்வியே அங்கும் கேள்வித் தானாக வந்ததும் எனக்கு எரிச்சலாக வந்தது. அதே நேரத்தில் ரயிலடியில் யசோதையின் அப்பா அவளை ஒரு கிழவருக்கு நாலாந்தாரமாக நிச்சயிக்கக் கிளம்பிக்கொண்டிருந்தார். அவர் பார்த்திருக்கும் கிழவனைக் காட்டிலும் இந்தக் கிழவனாகிய எனது சம்பந்தம் நல்லது என நானே மணம் முடித்து வந்துவிட்டேன்.'' இப்படிக் கூறிய போதும் அவர் மனத்தில் ஏளனக் குறியோ, களிப்புக்கான விரிவோ, துயரத்துக்கான சோர்வோ காணப்படவில்லை. மேலும் ஒன்றும் பேசாமல் அவர் சாமான்களை வாங்கிவரக் கடைக்குச் சென்றுவிட்டார்.



''நான்தான் பாரதியார்' என்று சொல்லிண்டு இருந்தானே அந்தப் பைத்தியம் இப்ப எப்படி இருக்கான்? பைத்தியம் தெளிந்து விட்டதா?''

''இல்லே முத்திப் போயிண்டிருக்கு?''

''அப்படியா?''

''ஆமாம்! இப்போ அவன் கவிதைகள் எழுதவே ஆரம்பித்து விட்டான்!''

சுசிலாவின் கோபம் தந்தைமார்கள்மீது திரும்பியது. எப்படியாவது ஒரு பெண்ணுக்கு விவாகம் என்று பெயர் வைத்து நட்டாற்றில் விடுவதில் இவர்களுக்கு என்ன லாபம்? இந்த யசோதை தானாகட்டும், இதற்கு எப்படிச் சம்மதித்தாள்? பணத்துக்கான நப்பாசையோ?.....எண்ணச் சுழலிலே நின்று தவித்த அவளுக்குச் ''சுசிலா!'' என்றதோர் அன்பிலே தோய்ந்து அரவணைக்கும் பண்புடன் தாயின் அழைப்பாக ஓர் ஒலி செவிகளில் விழுந்தது.

''சுசிலா! இரவு சமையல் என்னென்ன செய்வது வழக்கம்?.... முதலில் நீ எழுந்து வந்து காப்பியைக் குடியம்மா. பிறகு சமையலைக் கூறலாம்.''

சுசிலா விக்கித்துவிட்டாள். அவளைப் பெற்ற தாய் மீனாட்சி இருந்தவரை இதுபோல் அன்பொழுகக் கூப்பிட்டுக் காப்பிக்கு உபசரித்ததில்லை.

சுசிலா எழுந்து சமையலறைக்குச் சென்றாள். வியப்பில் ஆழ்ந்துவிட்டாள். அப்பொழுதுதான் இந்த வீட்டில் காலடி எடுத்து வைத்திருந்த யசோதை அடுக்களையிலிருந்த சாமான்களைத் தேடிப் பிடித்து, சுசிலாவும் ராஜுவும் பேசிக் கொண்டிருந்த நேரத்திலேயே காப்பியைத் தயாரித்து விட்டாள்.


''சி...த்...தி...அக்கா...யசோ....'' சம வயதினளான யசோதையை எப்

படி விளிப்பது என்றே அவளுக்குப் புரியவில்லை.

யசோதை இளநகை புரிந்தாள். ''சுசிலா! என்னைச் சித்தியென்றே கூப்பிடேன். இதில் என்ன குறைவு? பிடித்தமானால் அம்மாவென்று வேண்டுமானாலும் கூப்பிடு. நான் ஒன்றும் சொல்ல மாட்டேன். உறவு முறை வைத்து உரிய முறையில் கூப்பிட ஏன் தயங்குகிறாய்?'' என்றவள் காப்பியை எடுத்து அவள் கையில் கொடுத்தாள்.

காப்பியை மடக்கென ஒரு வாய் விழுங்கிய சுசிலாவுக்குத் தொண்டையில் ஏதோ சிக்கித் தவிப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. காப்பி டம்ளரைக் கீழே வைத்தாள். காப்பி ருசியாகத்தான் இருந்தது. ஆனால்...ஆனால்...

யசோதையின் தோளிலேயே தலையைச் சாய்த்து விக்கி விக்கிப் பலமாக அழத் தொடங்கி விட்டாள் சுசிலா.



பூனை: என்ன நாயாரே! மரத்துமேலே ஏறி உட்கார்ந்திருக்கிறீர்? நாயெல்லாம் மரத்தின் மேல் ஏற முடியாதுங்கறது உங்களுக்குத் தெரியாதா?

''ஐயோ சித்தி! மீண்டும் மீண்டும் அம்மா என்றுசொல்லாதே சித்தி. என் நெஞ்சு வெடித்து விடும் போல் இருக்கிறது. அப்பா இப்படியெல்லாம் துரோகப் புத்தியுடன் நடந்துகொள்வார் என்று நான் நினைக்கவேயில்லை.''

யசோதை இவ் வார்த்தைகளைக் கேட்டுத் துணுக்குற்றுச் சுசிலாவை ஊடுருவி நோக்கினாள்.

''துரோகமா? தந்தையைக் குறித்து இப்படியெல்லாம் பேசக் கூடாது சுசிலா. மகளுக்கு ஒரு துரோகமும் செய்துவிடத் துணிய மாட்டார் ஒரு தந்தை. என் அப்பாவிடம் அவர் பேசிய போது நான் அறிந்தேன். உனக்கு ஆறுதலாக இருக்க வேண்டுமென்றுதான் அவர் விவாகத்தில் முனைய, நானும் ஒப்புதல் கொடுத்து சந்தோஷத்துடன் கிளம்பி வந்தேன். உனக்கு ஒரு விதத்திலும் கெடுதி விளைவிக்க மாட்டேன். நீ என்....''

அன்புக் கரங்கள் இரண்டையும் சுசிலாவின் இடுப்பிலே சுற்ற வைத்து அவளை அரவணைத்துக் கொண்டாள்.

''சுசிலா ... சுசிலா! இதோ பார்... சே, சே, என்ன இது பைத்தியம் மாதிரி? அம்மாவை நினைத்து இப்படியெல்லாம் அழலாமா? ... என்னைப் பார், நான் உனக்கு அம்மாவாகத் தோன்றவில்லையா? அம்மாவின் களங்கமற்ற அன்பை நீ என்னிடம் எதிர்பார்க்க மாட்டாயா?'' என்று யசோதை கேட்டாள்.

''இல்லை...சித்தி ....அம்மா....நீ.... எனக்கு ... நீங்கள் ...'' அழுகையின் விக்கலின் நடுவே அவளால் பேசவே முடியவில்லை.

''சுசிலா! என் கண்ணல்லவா நீ! 'நீங்கள்' என்ற அடைமொழியை உபயோகித்து வேற்று மனுஷியாக நீ என்னைப் பாவிக்க வேண்டிய அவசியமே இல்லை. நீ உன்னைப் பெற்றெடுத்தவளை எவ்விதம் உரிமையுடன் கூப்பிடுவாயோ அப்படியே என்னையும் கூப்பிட்டுப் பழக வேண்டும். தெரியுமா? நான் உன் அம்மா என்பதை நீ மறந்துவிடக் கூடாது...'' யசோதை தோளுடன் தோள் ஒட்டிக் கூறினாள்.

சுசிலா சடக்கென அவள் வாயைப் பொத்தினாள். 'ஐயையோ! நீ ஏதேதோ பொருள் எடுத்துவிட்டாயே சித்தி... அப்பா என்னைப் பற்றி எவ்வளவு உருகுகிறார் என்பதை அறிவேன்... ஆனால் என் பொருட்டு, தம் மகளின் நன்மைக்காகச் சுயநலத்துடன் செய்த காரியம். சித்தி! இதோ பார், உனக்கு என் வயதுதான் இருக்கும்... அல்லது ஓரிரு வயது மூத்தவளாயிருக்கலாம்...ஐயோ சித்தி! நீ ஏன் இந்த விவாகத்துக்குச் சம்மதித்தாய்...? சுயநலத் துரோகச் செயலுக்கு ஏன் இலக்கானாய்...சித்தி...?'' சரீரம் குலுங்கச் சுசிலா கண்ணீர் பெருக்கினாள்.

யசோதையின் நெஞ்சமும் ஒருமுறை குலுங்கியது. மனப்பெட்டியில் எத்தனையோ துயரங்களுக்கு இடம் அளித்திருந்தவள் அவள். தந்தையின் வீட்டுத் தரித்திரமும், அடுத்தடுத்துத் தாயார் போட்ட பிரசவக் கூக்குரலும் உலக இளைஞர்களிடையே அவள் எதிர்பார்த்து ஏங்கித் தவித்து ஏமாந்ததும் ... இத்தனையும் நிறைந்த மனப் பெட்டியில், சுசிலா எடுத்துக் காட்டிய, இருட்டாகிவிட்ட வாழ்க்கை அவளுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை.

(தொடரும்)

மாதர் உலகம்

உண்பதும் ஒரு கலை



அனுசூயா

சாப்பிடுவது என்பது ஒரு பெரிய வித்தையல்ல. இலையில் இருப்பதைக் கையில் எடுத்து வாய்க்குள் போட்டுக் கொள்ள வேண்டியது தான். இருந்தாலும் அதற்கென்று சில 'விதி'கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

எப்படி உட்கார வேண்டியது, எப்படிப் பரிமாற வேண்டியது, எப்போது சாப்பிட ஆரம்பிக்க வேண்டியது, எப்பொழுது எழுந்திருக்க வேண்டியது என்பதற்கெல்லாம் விதிகள் உண்டு.

ஏன், இலையைக்கூட ஒரு குறிப்பிட்ட விதமாகத்தான் போட்டுக்கொள்ள வேண்டும். நுனியுள்ள வாழை இலையை, அந்த நுனி சாப்பிட உட்காருபவர்களுக்கு இடது கைப் பக்கமாக இருக்கும்படி போடுவார்கள். இலை ஏடையும் அதே மாதிரிதான் போட்டுக் கொள்வார்கள். இலை போடும் விதம் ஊருக்கு ஊர் வித்தியாசப்படும். வடக்கே சிலர் நுனி இலையை நுனி உயரே இருக்கும்படி போட்டுக் கொண்டு, அதன் எதிரில் குந்தி உட்கார்ந்து கொண்டு சாப்பிடுவார்கள். அதைப் பார்த்தாலே பக்கத்தில் சாப்பிட உட்கார்ந்திருக்கும் நமக்குச் சாதம் வயிற்றுக்குள் போகாது!

சில ஸ்திரீகளுக்குப் பிறர் சாதம் போட்டால்தான் சாப்பிட்டதுபோல் இருக்கும். சிலருக்கு மற்றவர்கள் பரிமாறினால் வயிறு நிறையாது. தாங்கள் இலையைச் சுற்றி எல்லாவற்றையும் எடுத்து வைத்துக் கொண்டு, தாங்களாகவே எடுத்துப் போட்டுக் கொண்டு சாப்பிடுவார்கள். ஓரளவு வயதான ஸ்திரீகள் சிலர் இந்தக் காலத்திலும்கூட, ஒரு காலை நீட்டிக் கொண்டு உட்கார்ந்துதான் சாப்பிடுகிறார்கள்.

நமது வீட்டில் நம் 'ராணிகள்' எப்படி வேண்டுமானாலும், தம் இஷ்டம்போல் சாப்பிடலாம். ஆனால் மற்றவர்கள் வீடுகளில், அதுவும் பொறுக்கியெடுத்த ஸ்திரீகள் கோஷ்டியில் சாப்பிடும் போது அவ் விஷயத்தில் சிறிது கவனம் செலுத்துவது நல்லது. முக்கியமாகப் பெண்களை உத்தேசித்துத்தான் இதை எழுதுகிறேன்.

சாப்பிடுவது வயிற்றுக்காகவேயன்றிப் புடவைத் தலைப்புக்காக அல்ல. ஆகையால் உட்காரும்போது புடவை அடிக்கடி இலையுடன் உறவு கொண்டாடாதிருக்கும் வகையில் வைத்துக் கொள்ள வேண்டும்.

சிலர் இலையை நன்றாகச் சுத்தம் செய்வதாக நினைத்துக் கொண்டு, அல்லது மற்றவர்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக நிறையத் தண்ணீரைத் தெளித்து அழுத்தி அழுத்தித் துடைப்பார்கள். இலையின் ஒரு கெட்ட குணம் என்னவென்றால், இது மாதிரி அதைத் தொந்தரவுபடுத்தும்போது அது நட்ட நடுவில் கிழிந்துவிடும். ஒவ்வொரு சமயம் அதன் ஒரு பாகம் கையோடு வந்து விடுவதும் உண்டு.

சில பெண்களுக்கும், அவர்கள் பக்கத்தில் வைத்திருக்கும் தண்ணீருள்ள டம்ளருக்கும் ராசி இருப்பதில்லை. தடபுடவென்று வந்து உட்காரும் போதே கால் தடுக்கித் தண்ணீர் கொட்டிவிடும். அந்தத் துரதிர்ஷ்டம் அதற்கு முதலிலேயே ஏற்படா விட்டால் பிறகு கைபட்டுக் கீழே கொட்டும். சிலர் சாப்பிட ஆரம்பிக்கு முன்னரே டம்ளரைக் காலிசெய்து விடுவார்கள். எப்படி? தண்ணீர் 'டபக்', 'டபக்' என்ற சத்தத்தோடு வாய்க்கு உள்ளே போய் விடும்.

கூடியவரை சாதம் வைக்குமுன் இலையில் இருப்பதை மாதிரி பார்க்காதிருப்பது நல்லது. ஆனால் நம்மையும் மீறி நமது கை ஒரு வறுவலையோ, ஒரு முந்திரிப்பருப்பையோ எடுத்து வாய்க்குள் போட்டுக் கொண்டுவிடும். போனால் போகட்டும். ஆனால் அந்தக் காரியத்தைத் தொடர்ந்து செய்து கறி வகைகளையும் ஒரு துண்டம் பாக்கி விடாமல் தின்றுவிட வேண்டாம். சாதம் பரிமாறும் பரிசாரகர் நமது இலையைக் கவனித்து நம்மை மிக அலட்சியமாகப் பார்த்து விட்டுச் செல்வார். அவரது அந்தப் பார்வைக்கு, 'சுத்த காட்டுமிராண்டி' என்று அர்த்தம்.

சாதத்தைப் பிசைவதும், பிறகு சாப்பிடுவதும் ஒரு தனிக் கலை. சிலர் சாதம், பருப்பு, நெய் மூன்றையும் சேர்த்துப் பிசைவார்கள், பிசைந்து கொண்டே யிருப்பார்கள். சாதத்துக்கு மட்டும் வாய் இருந்தால் அது அப்போது கூக்குரலிட்டிருக்கும்.

சிலர், ஏன் பலர், குழம்பு சாதத்தை மொத்தையாக நிறையப் பிசைந்து கொள்வார்கள். அது ஒரு சிறிய மலை போல் இருக்கும். பிறகு அதன் நடுவே குழித்துக்கொண்டு அந்தப் பள்ளத்தாக்கில் குழம்பை ஊற்றச் சொல்வார்கள்.

குழம்பைச் சிறிதளவு சாதத்துக்கு நடுவில் ஊற்றச் சொல்லிச் சிறிது சிறிதாகச் சேர்த்துக் கொண்டு சாப்பிடுவதுதான் நாசூக்கான முறை. இந்த முறையில் எத்தனை சாப்பிட்டாலும் பிறருக்குத் தெரியாது. குழம்பு அவ்வளவாகப் பிடிக்காவிட்டால் தனியாக ஒதுக்கி வைத்துவிடலாம்.

சிலர் 'ஒரு கழக்கொடி, ஒரு நெல்லிக்காய் சாதம் போடு' என்பார்கள். ஆனால் அவர்கள்



சாதத்தை உருண்டையாக உருட்டுவது ஒரு டென்னிஸ் பந்து அளவு இருக்கும்.

இவர்களுக்கு நேர் விரோதமாகச் சிலர் செய்வார்கள். அவர்கள் தங்கள் கையின் ஐந்து விரல்களுக்கும் வேலை கொடுப்பதில்லை. இரண்டு மூன்று விரல்களால் சில பருக்கைகளை எடுத்து வாய்க்குள் வீசி எறிந்து விடுவார்கள்.

'மொச்', மொச்' 'சப், சப்' என்ற சத்தங்களை உண்டாக்காமல் சில பேருக்குச் சாப்பிடத் தெரியாது.

சுகாதார பாட புத்தகங்களில் 'உணவை நன்றாக மென்று தின்ன வேண்டும்' என்று படித்ததை, வேத வாக்காகக் கொண்டுள்ள சிலர் நிதானமாக மென்று, தின்று கொண்டிருப்பார்கள். பிறகு அசை போடுவதுமுண்டு.

ரசம், மோர், சாதங்களைத் 'தெளுப்பி'த் தான் சாப்பிட வேண்டும். ஆனால் அப்போது 'மகிஷபான ராகத்'தைப் பாடக் கூடாது. மாடுகள்போல் 'உஸ், உஸ்' என்று சத்தம் போட்டு உறிஞ்ச வேண்டாம்.

நடுவில் பரிமாறத் தாமதமாகும் போது சில பெண்கள் ஒரு விரலை மட்டும் வாயில் வைத்துக் கடித்து ருசி பார்க்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியா யிருக்கும் !

'ஏகாந்த சேவை' என்று கேள்விப்பட்டிருப்பீர்களே! அதுதான் கோவிலில் உற்சவம் ஆன பிறகு, உற்சவ விக்கிரகத்தைத் தனியாக அலங்கரித்து வைத்துக் காட்சி யளிப்பது. இதேபோல் விருந்துகளிலும் பார்க்கலாம். நூறு பேர்கள் உட்கார்ந்து சாப்பிடுகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். தொண்ணூற்றொன்பது பேர்கள் எழுந்திருந்து போய்க் கையைக் கழுவி விருப்பார்கள். அப்போதும் ஒரே ஒரு பெண் உட்கார்ந்து இன்னும் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்!

சிலர் தாங்கள் சாப்பிடும் இலையில் ஏதாவது கொஞ்சம் மீத்து வைக்காமல் இருக்க மாட்டார்கள். ஒட்டத் துடைத்துச் சாப்பிடுவது அநாகரிகமானது என்று அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

சாதாரணமாகப் பழைய காலத்தவர்கள் பதார்த்தங்களை எறியக் கூடாது, வீணாக்கக் கூடாது என்பதற்காக இலையில் ஒரு பருக்கை, ஒரு காய்கறி இல்லாமல் சாப்பிடுவார்கள். அவர்கள் இலை புதிதாகப் போட்டது போல் இருக்கும். சிலர் பெருமைக்காகவும் அப்படிச் செய்வதுண்டு. உள்ளங் கை, விரல்களையும் நாக்கால் நக்கி நக்கிச் சுத்தப்படுத்திக் கொள்வார்கள். இந்த இரண்டு விதங்களும் விரும்பத் தக்கதல்ல.

புரத சத்து

''குழந்தை கெட்டிக்காரக் குழந்தை. அப்பாவைப் போலவே மூளை!'' என்கிறோம்.

''கண் அப்படியே அம்மாவைப் போல்!'' என்கிறோம்.

இதெல்லாம் அந்தப் புரதசத்து செய்யும் வேலை. 'புரோட்டீன்' 'பிரோட்டீன்' என்கிறார்களே, அதுதான் அந்தச் சத்து. ஒரு குழந்தையின் தாய் தந்தையரின் உடலில் உள்ள புரோட்டீன் சத்தினால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தையின் உடலமைகிறதாம்.

உயிர் வாழ்வதற்குப் பிராணவாயு எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியமானது புரோட்டீன் சத்தும். அது நமது உடலில் ஐந்தில் ஒரு பங்கு இருக்கிறது. உங்கள் உடல் எடை 125 பவுண்டு என்று வைத்துக் கொள்ளுங்கள். 25 பவுண்டு அந்தச் சத்தினாலானது. அது ஹிருதயத்தில் இருக்கிறது. உடலின் ஒவ்வொரு ஜீவ அணுவிலும் அது ஐந்தில் ஒரு பாகம் இருக்கிறது. இந்தச் சத்தின் அளவு மிகவும் குறைந்து விடும்போதுதான் உடல் வியாதியை எதிர்த்துத் தாக்குப் பிடிக்க முடியாமல் போய் விடுகிறது. அது உடலில் போதிய அளவு இருந்தால் வியாதிகளினால் அதிகம் பாதிக்கப்படாதிருக்கலாம். தவிர, உடலும் ஒரு மெருகுடன் இளமைத் தோற்றத்துடன் இருந்து வரும்.

இந்தச் சத்து, மீன், இறைச்சி, முட்டை முதலியவற்றில் நிறைய இருக்கிறது. உடம்பு பலப்படுவதற்கு டானிக் மருந்துகள் சாப்பிடுவதற்குப் பதிலாகப் பலர் முட்டை சாப்பிட்டு வருகிறார்கள். சிறு குழந்தைகளுக்கு முட்டை கொடுத்து வருவது சர்வ சாதாரணமாகி வருகிறது.

ஆனால் இவற்றைத்தான் உபயோகித்தாக வேண்டும் என்பதில்லை. சைவமாக இருப்பவர்கள் உபயோகிப்பதற்கேற்ற புரோட்டீன் சத்து நிறைந்த பாலேடுக் கட்டி இருக்கிறது. இன்னும் ஸோயாபீன்ஸ், நிலக் கடலை, வாதுமைப் பருப்பு இவற்றையும் உபயோகிக்கலாம். ஸோயாபீன்ஸைப் பற்றிக் காந்திஜி எத்தனையோ புகழ்ந்து எழுதியிருக்கிறார். ஆனால், அதை நமது நாட்டில் அதிகம் பயிர் செய்யவில்லை. வாதுமைப் பருப்பு விலை அதிகம். தவிர அதில் நிலக் கடலையைவிடப் புரோட்டீன் சத்து குறைவு. ஆகவே சாதாரணமாக எல்லாரும் நிலக்கடலையை உபயோகித்து வரலாம்.

குழந்தைகளுக்கு நிலக் கடலையிலிருந்து உணவு மாவு தயாரிக்க ஏற்பாடு செய்து வருகிறார்கள். நிலக் கடலையாயிருப்பதைவிட அதன் புண்ணாக்கில் அதிக சத்து இருக்கிறதாம். அந்தப் புண்ணாக்கைச் சுத்தம் செய்து அதிலிருந்து மாவு தயாரிக்கப் போகிறார்களாம்.

ஆனால் நாம் அதற்காகப் புண்ணாக்கைத் தின்னத் தொடங்க வேண்டியதில்லை. வேர்க் கடலையைத் தினமும் சேர்த்துக் கொண்டு வரலாம். பச்சைக் கடலையை உபயோகிக்க வேண்டியதில்லை. வறுத்த கடலையைத் தின்னலாம். வெல்லம் போட்டுக் கடலையை உருண்டையாக உருட்டி வைத்துக் கொண்டு தின்று வரலாம். இதைப் போன்ற மலிவான ருசிகரமான புரோட்டீன் சத்துள்ள பண்டம் வேறெதுவும் இல்லை.



ருசியின் தராதரத்தை நிறுத்துப் பார்க்க முடியாது!

ஆனால்

சுதா வினால்

தயாரிக்கப்பட்ட
சமையலின் தரத்தை
நீங்கள் சுவைத்து
உணரலாம்



சுதா ஒரு உன்னத சமையல் சாதனம்.

சுத்தமான தாவர எண்ணெய்களினால் தயாரிக்கப்பட்டதும், வைட்டமின்கள் சேர்ந்ததுமான சுதா, பிரத்தியேக வாசனையும், சாப்பாட்டிற்கு ஆர்வமூட்டும் சுவையும் தருகிறது.

சுதா சமையலுக்கு அதிக சுவையும் இல்லத்திற்கு அதிக இன்பமும் தருகிறது.


இப்பொழுது 1, 2 & 4 கிலோகிராம் எடைகளில் கவர்ச்சிகரமான டின்களில் கிடைக்கும்

மூன்று 2 கிலோ டின்கள் அல்லது ஆறு 1 கிலோ டின்கள் வாங்குபவருக்கு ½ லிட்டர் படி இனாம் தரப்படும்.

இரண்டு 2 கிலோ டின்கள் அல்லது நான்கு 1 கிலோ டின்கள் வாங்குபவருக்கு ஒரு கத்தி இனாம் தரப்படும்.

மூன்று 1 கிலோ டின்கள் வாங்குபவருக்கு ஒரு கத்திரிக்கோல் இனாமாகத் தரப்படும்.

கவர்ன்மெண்ட் ஹைட்ரோஜனேஷன் பாக்டரி
(பொதுத்துறையிலுள்ள ஒரே வனஸ்பதித் தொழிற்சாலை)
கோழிக்கோடு (கேரளம்)



பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு
பிரைவேட் லிமிடெட்

"பாலுஸேரி பில்டிங்ஸ்"
3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி
தபால் பெட்டி நெ. 414. மதராஸ்-5
தந்தி: 'EVERMANS' போன்: 85834

சேரக் கடைசி தேதி 26-2-1964 ... முதல் ஏலத் தேதி 28-2-1964

25 மாதங்கள்	மாதாந்திரச் சீட்டுகள் (4-வது வெள்ளிக்கிழமை ஏலங்கள்)	25 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
B	ரூ. 100/-	ரூ. 2,500/-	E	ரூ. 20/-	ரூ. 500/-
C	ரூ. 50/-	ரூ. 1,250/-	F	ரூ. 15/-	ரூ. 375/-
D	ரூ. 25/-	ரூ. 625/-	G	ரூ. 10/-	ரூ. 250/-

40 மாதங்கள் — நீண்டகால ஏலச் சீட்டுகள் — 40 அங்கத்தினர்கள்
ஏலத் தேதி: 23-2-1964

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
A	ரூ. 500/-	ரூ. 20,000/-
B	ரூ. 250/-	ரூ. 10,000/-

விலாசம் தெளிவாக எழுதிக் கேட்பவர்களுக்கு எங்கள் விதிகள் இலவசமாக அனுப்பப்படும். சீட்டில் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளும் உரிமை பண்டைச் சேர்ந்தது.
(போர்டார் உத்திரவுப்படி) எம். வி. சுப்ரமணியம், மானேஜிங் டைரக்டர்
இதர கிளைகள்: புது டெல்லி * பம்பாய் * பெங்களூர் * கல்கத்தா

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை



வாழ்க்கை ஒரு நம்பிக்கை

ஸரோஜா ராமமூர்த்தி

ஊர் விழித்துக்கொண்டு விட்டதா என்பதைப் பற்றி மீனாட்சிப் பாட்டிக்குக் கவலை இல்லை. அதுபாட்டுக்கு மெதுவாக விழித்துக் கொள்ளட்டும், நான் இனிமேல் படுக்கையில் இருக்க மாட்டேன் என்பது போல் விடியற் காலம் நாலு மணிக்கே மீனாட்சிப் பாட்டி எழுந்து விடுவாள். பல் துலக்கி முகம் கழுவிக் கொண்டு, உள்ளே நுழைந்து பூஜை மாடத்திலிருந்து திருநீற்றை அள்ளிப் பூசிக்கொள்வாள். பிறகு அவளுடைய அலுவல்கள் ஒவ்வொன்றாக ஆரம்பமாகி விடும். வீட்டில் இரண்டு வேலைக்காரர்கள், மீனாட்சிப் பாட்டியின் பெண், மருமகன், பேரன், அவன் மனைவி இத்தனை பேர்களும் இருக்கிறார்கள். சாகிற காலத்தில் இவள் சிவனே என்று இருந்து விட்டுப் போகலாம். அவள் இருக்க மாட்டாள். அவள் சுபாவம் அப்படி.

மீனாட்சிப் பாட்டி எழுந்து வருவது அந்தப் பசுமாடுகளுக்கு எப்படியோ தெரிந்து விடும். அவை கட்டுத் தறியில் இருந்தவாறு, தலையை ஆட்டி, உறுமி அவளை வரவேற்கும். பொட்டும், பிண்ணாக்கும் கலந்த நீரை அவைகளுக்கு வைத்துக் கொல்லைக் கதவுகளை மாடு கறப்பவனுக்காகத் திறந்து வைத்து விட்டுப் போவாள் பாட்டி. இதைப் பற்றி அந்த வீட்டில் அபிப்பிராய பேதம், சர்ச்சை எல்லாமே நடந்து வந்தன.

''எவனாவது கொல்லை வழியாகப் புகுந்து அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு போகப் போகிறான், பார்'' என்பார் மருமகன் கணேசன். அதற்கு இன்றுவரை அவள் மறுமொழி கூறியதில்லை. எத்தனையோ வருஷங்களாக அப்படித்தான் பழக்கம். எந்தத் திருடனும் எதையும் சுருட்டிக் கொண்டு போக வரவில்லை என்பது போல் புன்னகையுடன் பேசாமல் போய் விடுவாள். மாமியாரிடம் தன் ஜம்பம் பலிக்காமல் போகவே மனைவியிடம் எரிந்து விழுவார் கணேசன்.

''எனக்கு மானம் போகிறது. உன் அம்மாவைக் கொஞ்சம் சும்மா இருக்கச் சொல்லேன். வீட்டில் வேலைக்காரர்கள் இல்லையா? இந்த வயதில் நாலு மணிக்கே குடைந்து கொண்டு எழுந்து விடுகிறாளே?'' என்பார்.

''அது அவள் சுபாவம். இங்கேதான் வேலைக்காரர்கள் இருக்கிறார்களா? என் அப்பா இருந்த காலத்தில்கூட இருந்தார்கள். எல்லோரும் தண்டச் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தார்கள். அநேகமாக அவர்கள் வருவதற்குள் பாதி வேலைகளை இவள் செய்துவிடுவாள்'' என்றாள் மரகதம் சோபாவில் சாய்ந்தபடியே.

''நீ ஒன்றும் கூடமாட ஒத்தாசைக்குப் போவதில்லையாக்கும்?''

''நான் எங்கே போகிறது? நாலடி நடந்தால் மூச்சுத் திணறல். மார்பில் வலி. புதிசாகக் கேளுங்கள்—''

கீழே மாட்டுக் கொட்டிலில் பால் கறக்கும் சத்தம் கேட்டது. நிலம் இன்னும் தெளியவில்லை. கனத்த இருள் போர்வையை மெல்ல மெல்லச் சக்தி வாய்ந்த கரம் ஒன்று நீக்குவது போல் கிழக்கேயிருந்து ஒளி இலேசாக வந்து கொண்டிருந்தது. பால்காரன் கோதண்டன் மீனாட்சிப் பாட்டியிடம் பேசிக் கொண்டிருந்தான். வீட்டில் அவன் மனைவி பிரசவித்திருக்கிறாளாம். ஆறாவதோ ஏழாவதோ!

''ஏண்டா பையா! எத்தனாவது குழந்தை?''

அவனுக்கே மறந்து விட்டது. யோசித்து விட்டுப் பதில் கூறுகிறான். ''ஏழாம் பேறுங்க. பத்தியம் போட்டா துண்ணப் பிடிக்கலேங்கறா.... பெரியம்மாவைக் கேட்டு வான்னு சொல்லிச்சு....''

''சோத்துக்கென்னடா அவசரம்? பையா! புழுங்கலரிசிக் கஞ்சி வைக்கக் கொடு... கல கலன்னு பசிக்கட்டும். அப்புறம் சோறு போடலாம்—''

''வீட்டிலே அதுக்குக்கூடத் தகராறுங்க பெரியம்மா—''

''ஏண்டா பையா! பத்து மாடு வச்சிருக்கே. வியாபாரம் பண்றே. கட்டினவளுக்குக் கஞ்சிக்குப் பஞ்சம்ங்கறயே... சம்பாதிக்கிறதை ஓட்டலிலும் சினிமாவிலும் கொண்டு தொலைச்சா கையிலே காசு மீறுமாடா?''

மாடியிலிருந்து கணேசன் ஜன்னல் வழியாகக் கீழே எட்டிப் பார்த்தார். மங்கலான ஒளியில் குறுகிய அந்த உருவம் அன்புடனும், தயையுடனும் பால்காரனிடம் ஒரு ரூபாயை எடுத்துக் கொடுப்பதைக் கண்டார்.

''மரகதம்! ஏய் மரகதம்! இங்கே வா.... உன் அம்மா தர்மம் செய்கிறதை வந்து பார். இந்தக் கோதண்டம் பயல் இப்படி மாய்மாலம் செய்து நன்றாகப் பிடுங்கித் தின்கிறான்.''

மரகதம் சோபாவில் புதையப் புதையப் படுத்தவாறு சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். இந்தப் படுக்கை யறைக்கு நேர்க் கோடியில் இன்னொரு பள்ளியறை இருந்தது. இதற்கு நேர்மாறான ஜோடி ஒன்று அங்கும் ஜன்னல் வழியாக இதே காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தது. மரகதத்தின் செல்வ மகன் ரவியும், அவன் மனைவி மேனகாவும் சினிமா பார்ப்பது போல் இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''இந்தப் பாட்டிக்கு ஆனாலும் இவ்வளவு தாராளம் வேண்டாம்....'' என்று மெல்லிய குரலில் மொழிந்தவாறு ஏதோ கொள்ளை போவது போல் எட்டிப் பார்த்தாள் மேனகா.

ரவி உல்லாசமாக மனைவியைத் திரும்பிப் பார்த்தான்..

கல்யாணமாகி இரண்டு வருஷங்கள் முழுசாக ஆகவில்லை. அதற்குள் அந்த 'ஸ்டாடிஸ்டிக்ஸ்' பி. ஏ. வுக்கு அவ்வீட்டின் பொருளாதாரத்தில் மிகுந்த அக்கறை. எத்தனையோ வருஷங்களாக ஏழைப் பிள்ளைகள் இரண்டு பேருக்குக் கொடுத்துவரும் பொருளுதவி, வேலைக்காரர், பால்காரனுக்கு இருக்கும் சலுகை எல்லாமே தண்டம் 'வேஸ்ட்' என்று ஒரு பாட்டம் கணவனிடம் குசுகுசுவென்று முணுமுணுத்துவிட்டு ஓய்வாள் மேனகா.

''பார்த்தீர்களா! பார்த்தீர்களா! ஒரு ரூபாய் போதாதென்று கால் படி புழுங்கல் அரிசி தொள் வேறே தானம் செய்கிறதை?...'' காதளவு நீண்ட தன் விழிகளைச் சுழற்றிக் கடைக்கண்ணால் கணவனைக் கடாட்சித்தவாறு நவின்றாள் அவள். ரவி மனைவியின் இடுப்பில் கையைவளைத்து அணைத்தவாறுபேசினான்.

''உனக்கு ஒன்றும் தெரியாது மேனகா. பாட்டி செய்யும் எந்தக் காரியத்திலும் ஏதாவது பொருள் பொதிந்து இருக்கும்....''

''ஆமாம்... பெரிய...'' மேனகா வார்த்தையை முடிப்பதற்குள் வேலைக்காரி பச்சைக்குச் சிறிய செம்பில் சுடச்சுடக் காப்பியைக் கொண்டு வந்து வைத்தாள் மீனாட்சிப் பாட்டி.

''குடித்துவிட்டு வேலை செய்யடி. இந்தக் குளிரில் வெறும் வயிற்றுடன் வேலை செய்ய முடியாதுடி அம்மா... பல் விளக்கினாயோ இல்லையோ?''

''விளக்கிட்டேன் பெரியம்மா. நீங்க சொன்னபடி பொட்டு கூட வச்சிருக்கேன் பாருங்க...''

வேலைக்காரி பச்சையம்மா தன் முகத்தைத் திருப்பித் தெரு விளக்கு ஒளி விழும் பக்கமாக நின்று காட்டினாள்.

''அதுதான் பார்க்க லட்சணமா இருக்கு.''

''மகா லட்சணத்தைக் கண்டுவிட்டாள் உங்கள் பாட்டி'' என்று முனகினாள் மேனகா.

''கண்டுவிட்டார் உங்கள் பாட்டி...'' என்று திருத்திவிட்டு, ரவி, ''பாட்டிக்கு எப்பொழுதுமே பொட்டு பெரிதாக வைத்துக் கொள்ள வேண்டும். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. தாத்தா இருந்தவரையில் நெற்றியில் அகலக் குங்குமமும் அதன்மீது விபூதியுமாகத்தான் பாட்டி இருப்பாள்'' என்றான்.

மேனகாவுக்கு ஒன்றும் கேட்கப் பிடிக்கவில்லை. தொப்பென்று படுக்கையில் போய்ச் சாய்ந்தாள்.

''திரும்பவும் தூங்கப் போகிறாயா என்ன? மணி ஐந்தாகி விட்டது...'' என்று அவள் வாயைக் கிண்டினான் ரவி.

''ஆறரை வரைக்கும் சுகமாக ஒரு தூக்கம். இந்த விடியற்காலத்தில் வரும் தூக்கம் இருக்கிறதே. இதற்கு இணை இதுவேதான். என்ன அழகழகான கனவுகள்!'' என்றவாறு தன் தந்தக் கைகளைத் தலைக்கு மேல் வைத்துச் சோம்பல் முறித்தவாறு கண்களை மூடிக் கொண்டாள் மேனகா.

ஆனால் ரவிக்குத் தூக்கம் வரவில்லை. மெதுவாக ஓசைப்படாமல் கீழே இறங்கிப் போனான்.

பாட்டி இதற்குள்ளாகக் குளித்துவிட்டுப் பூஜையறைக்குப் போய்விட்டாள். பூஜையறை அழகழகாக அரிசி மாக்கோலங்களினால் எழிலாகக் காணப்பட்டது. வெண்கல விளக்கில் முத்துச் சுடர் போல் தீபம் எரிந்துகொண்டிருந்தது. விளக்கின் முகத்தில் பாட்டி வெப்பாகக் குங்குமத் திலகம் இட்டிருந்தாள்.


காலை வேளையில் ஊதுவத்திகளின் நறுமணமும் விளக்கின் பொன்னொளியும் பரவசமூட்டுவனவாக இருந்தன. வாயிற்படியில் நிற்கும் பேரனைத் திரும்பிப் பார்த்தாள் பாட்டி.

புதியது

ப்ரோடெக்ஸ் ஒரு சர்வ-காரிய டால்க். து குடும்பத்தினர் அனைவருக்கும் மிகச்சிறந்தது.




ப்ரோடெக்ஸ் ஒரு உயர்ந்த ரக, மனோரம்மிய நறுமணமுடைய, சர்வ-காரிய டால்க். எல்லாக் குடும்பத்தினருக்கும், குளித்தபிறகும், கோடைக்காலத்தில் குளிர்ச்சிக்கும் மிகச் சிறந்தது. ப்ரோடெக்ஸ் வாங்குங்கள்-மிக மிகப்பெரிய டப்பா-மிகமிகக் குறைந்த விலை.



ப்ரோடெக்ஸ்

ஆல்-பர்ப்பஸ் டால்கம் பௌடர்

PTP-6-7-TAM.



''ஏண்டாப்பா! நீ எழுந்து வந்து ரொம்ப நாழிகையாச்சோ? பல் தேய்ச்சுட்டியோ?''

''ஆச்சு பாட்டி!'' என்றான் ரவி.

''போய் நெற்றிக்கு இட்டுக்கொள். நான் காப்பி கலந்து எடுத்து வரேன்.'' மீனாட்சிப் பாட்டி குறுகியபடி விசையாக அடுப்பங் கரைக்கு நடந்தாள்.

ரவி அவளை மௌனமாகப் பின்தொடர்ந் தான். பேரனின் கையில் ஆவி சிதறும் காப்பியைக் கொடுத்துக் கொண்டே ''பால் வேண்டுமா இல்லை, டிகாக்ஷன் சர்க்கரை வேண்டுமா பார். உன் அம்மாவுக்குப் பான கம் போல் சர்க்கரை போட வேண்டும். உன் தாத்தாவுக்குச் சர்க்கரையே கூடாது....'' என்று விவரித்தாள்.

ரவி சிரித்துக் கொண்டே காப்பியை உறிஞ் சிப் பருக ஆரம்பித்தான். அவன் அப்படி எச்சிற்படுத்திச் சாப்பிடுவதைப் பார்த்த பாட்டியிடமிருந்து கேவலம் ஒரு முகச் சுளிப் புக்கூட வெளிவரவில்லை. அதைக் கவனிக்காத வன்போல் போய்விட்டான் அவன்.

பொழுது நன்றாக விடிந்து விட்டது. மாடியிலிருந்து மேனகா கீழே இறங்கி வந்தாள். அடுப்பங்கரைக்கு வந்து உட்கார்ந் தவளின் முன்பு கடச் கடக் காப்பி எடுத்து வைத்துவிட்டு இரண்டு புடலங்காய்களை எடுத்து வைத்தாள் பாட்டி.

''கொஞ்சம் இதைப் பொடிப் பொடியாக நறுக்கி வைத்துவிடடி அம்மா. உன் மாமி யாருக்கு அரை உப்புப் போட்டு கூட்டுச் செய்யவேண்டுமாம். என்னமோ பிரஷராமே? உப்பு சேர்க்கக் கூடாதாம்....''

''எனக்கு இந்தக் காயைப் பார்த்தாலே வயிற்றைக் குமட்டுகிறது பாட்டி. சப்பு சப்புன்னு என்ன கூட்டோ?'' என்று அலுத் துக் கொண்டே அரிவாள்மணையின் முன் உட்கார்ந்தாள் மேனகா.

பாட்டிக்குச் சட்டென்று நினைவுக்கு வந் தது: மேனகாவுக்கு மசக்கை என்று. மூன்று குறைப் பிரசவங்களுக்கு அப்புறம் நாலாவது; டாக்டர் அவளை அசங்கக் கூடக் கூடாதென் றிருனாம். நேற்று டாக்ஸியில் பேரனும் அவளும் சினிமாப் பார்த்துவிட்டு வந்ததும் அவன் அவளைக் கைத்தாங்கலாக மாடிக்கு அழைத்துப் போனதும் மருமகள் கணேசன் இப்படியாவது சினிமாப் பார்க்கவில்லை என்று யார் அழுதார்கள் என்று முணுமுணுத்த தும் பாட்டி மட்டும் பரிந்து போசாமல் இருந்தால் அப்பாவுக்கும் பிள்ளைக்கும் சிறு பூசல் வந்திருக்கும்.

''இடக்கிறது விடு. உனக்கு உப்பு உறைப் பாகத் துவையல் அரைத்துப் போடுகிறேன்.''

''இரண்டு மூன்று தினுசுகள் எதற்குப் பாட்டி இந்த விலைவாசியில்?'' என்றாள் புள்ளி விவரம் தெரிந்த அந்தப் பெண்.

''விலையும், வாசியும் அப்படித்தான் இருக் கும். சாப்பிடுகிற காலத்தில், உடுத்துக்கொள் கிற நாட்களில் அதது அனுபவிக்க வேண்டு மடி பெண்ணே'' என்றாள் பாட்டி.

மேனகா அன்றே கணவனிடம் பாட்டி யின் கொள்கைகளைப் பற்றிக் கேலியாகவும்,

பொருளாதார ரீதியாகவும் சொல்லிச் சொல்லிச் சிரித்தான்.

மரகதம் இதையெல்லாம் காதில் போட்டுக் கொள்கிறதில்லை. வேளாவேளைக்குத் தன்னைக் கவனித்துச் செய்ய அந்தக் கிழமாவது இருக்கிறதே என்று ஆறுதல் அடைந்து வந்தாள். இடையிடையே, கணவரின் குத்தல் மொழிகள், கண்டனங்கள் இவைகளுக்கும் ஆளானாள்.

பொதுவாகச் சொல்லுமிடத்து மீனாட்சிப் பாட்டியின் மனத்தை அந்த வீட்டார் புரிந்து கொள்ளவில்லை.

நாட்கள் நகர்ந்தன; இல்லை இந்த அவசர யுகத்தில் பறந்தன. மீனாட்சிப் பாட்டியின் உள்ளம் இளமையாக இருந்தாலும் உடல் மரைகள் கழன்ற யந்திரமாக ஆட்டம் காண ஆரம்பித்து விட்டது.

''பாட்டி போய்விட்டால் யார் இந்தக்குடும்பத்தைக் கட்டி மேய்ப்பார்கள் மேனகா?'' என்றான் ரவி மனைவியின் அழகைப் பருகியபடி. பாட்டியின் பராமரிப்பில் மேனகா நன்றாகச் செழுமையாகத் தாய்மையின் பூரிப்பில் ஆரோக்கியத்துடன் இருந்தாள்.

''பாட்டி குட்டை குழப்பிக் கொள்கிற மாதிரி விடிய நாலு மணிக்கே எழுந்திருந்து ஒன்றும் அவஸ்தைப்பட வேண்டாம். எல்லாம் 'மாடர்ன்'ச் செய்து ஜமாய்த்துவிடுவேன்'' என்றாள் மேனகா.

மீனாட்சிப் பாட்டி அன்று விடிந்தபிறகு கூட எழுந்திருக்கவில்லை. பால்காரனுடன் பேசும் சத்தம் கேட்காமல் மேனகா கண்களை மாடியிலிருந்து கூர்மையாகச் செலுத்தியபடி ஒரு நோட்டம் விட்டாள். கொல்லைக் கதவு சாத்தியபடி இருந்தது. எல்லோரும் கீழே இறங்கி வந்து பார்த்தார்கள். பாட்டி படுக்கையில் முனகியபடி படுத்திருந்தாள். எல்லாமே போட்டது போட்டாற்போல் இருந்தன. அதைத் தேடி, இதைத் தேடி மேனகா ஓடியாடிக் காப்பி போட ஆரம்பித்தாள். மரகதம் கீழே இறங்கி வந்துதான் அன்று காப்பி சாப்பிட வேண்டியிருந்தது. பால்காரன் தன் விருப்பம் போல் வர ஆரம்பித்தான். பச்சையம்மாள் மட்டும் என்ன? இவர்களின் மனத்தைப் போலவே வேலைகளில் அலட்சியமும், பாராமுகமும் மேவிட்டிருந்தது.

ரவிக்கு மட்டும் அந்தப் பூஜை அறையைப் பார்த்ததும் கண்களில் கண்ணீர் வந்து விட்டது. உஷத் காலத்தில் விளக்கின் பொன்னொளியும், நறுமணமுமாக அங்கே எத்தனை தெய்வீகம் ததும்பி வழியும்?

அப்பா என்ன செய்கிறார்? சாய்வு நாற்காலி தேயும்படி படுத்துக்கொண்டு தினசரியை ஆரம்ப முதல் இறுதிவரையில் புரட்டிப் புரட்டிப் பார்த்தவாறு மாமியாரை ஏதாவது சொல்வது அவர் வழக்கமாகப் போய் விட்டது என்று நினைத்தான்.

பாட்டி நாலைந்து தினங்கள் ஒன்றும் சாப்பிடாமல், அதிகம் பேசாமல் படுத்திருந்தாள். முகம் துல்லியமாக இருந்தது. நோயின் பயங்கரமோ, கொடுமையோ எதுவும் இல்லை. யாராவது ஏதாவது கேட்டால் அவசியமாக இருந்தால் பதில் கூறினாள்.

''அம்மா... அம்மா... எங்களுக்காக இத்தனை காலம் உழைத்தாய். உன்னை உட்கார வைத்து ஒரு வேளை நான் சமைத்துப் போடவில்லை. வியாதிப் பிண்டமாக மாறிவிட்டேன். உனக்கு ஏதாவது ஆசை இருந்தால் சொல்....'' என்று மரகதம் கண்ணீர் விட்டுக் கதறினாள்.

பாட்டி அலுப்புடன் சிரித்தாள். பிறகு மெதுவாக, ''அடியம்மா! உனக்கு இனிமேல் யார் செய்வார்கள் என்று நான் கவலைப் படுகிறேன். அழாதே மரகதம். எனக்கு என்ன ஆசை இருக்கப் போகிறது? இந்த வீட்டில் என்னைப் புரிந்து கொண்டவன் ரவி ஒருத்தன்தான். அதோ பாரடி! நான் படுத்த நாளிலிருந்து அவன் தவறாமல் விடியற்காலம் எழுந்திருப்பதும், சுவாமிக்கு விளக்கேற்றுவதும் எவ்வளவு இன்பமாக இருக்கிறது. அதுதான் என் ஆசை'' என்றாள்.

அதன் பிறகு, இரண்டு நாட்களுக்கு அப்புறம் பாட்டி போய்விட்டாள்.

ஊர் விழித்துக் கொண்டாலும் இல்லாவிட்டாலும் ரவி விழித்துக் கொண்டு கீழே இறங்கி வந்து விடுவான். கொல்லைக் கதவைப் பால்காரனுக்குத் திறந்து வைப்பான். பல் துலக்கித் திருநீறு அணிந்து சுவாமிக்கு விளக்கேற்றுவான். பாட்டி விண்ணிலிருந்து அவனை வாழ்த்துவது போல் ஓர் எண்ணம்; நம்பிக்கை. நம்பிக்கைதானே மனிதனை வாழ வைக்கிறது?



நிமிஷக் கதைகள்





✽ மார்க் ட்வைனும் விலியம் ஸ்லின்டனும் அப்பொழுது தான் எழுத்துத் தொழிலைப் புதிதாக ஏற்றுக் கொண்டிருந்தார்கள். கையில் இருவருக்குமே காசு கிடையாது. அன்றோ இருவருக்கும் மூன்று டாலர் அவசியம் தேவையாயிருந்தது. என்ன செய்வது என்று புரியவில்லை. ஆண்டவன் கொடுப்பான் என்று வாளாவிருந்து விட்டார் ஸ்லின்டன்.

மார்க் ட்வைனுக்கோ ஒரே கவலை. ஹோட்டல் வாசலில் இங்கும் அங்கும் நடை பழகியவாறே யோசித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது ஓர் அழகிய நாய்க் குட்டி அவர் காலடிகளிலே வந்து விளையாடத் தொடங்கியது.

ஜெனரல் மைல்ஸ் என்பவர் அப்பொழுது அந்தப் பக்கம் வந்தார். அந்த நாய்க்குட்டி அவரை வெகுவாகக் கவர்ந்தது. 'இதை எனக்கு விற்று விடுகிறீர்களா?' என்று மார்க் ட்வைனைப் பார்த்துக்கேட்டார்.

ஆண்டவன் உதவத்தான் செய்கிறான் என்ற நம்பிக்கை மார்க் ட்வைனுக்கும் உதித்தது. எனவே, ''தாங்கள் மூன்று டாலர்கள் தருவதாயிருந்தால் இந்த நாய்க் குட்டியைத் தருகிறேன்!'' என்றார்.

ஜெனரல் மைல்ஸோ இன்னும் அதிகமாகவே தரச் சித்தமாக இருந்தார். ஆனால் மார்க் ட்வைன் தமக்குத் தேவையானதைக் காட்டிலும் அதிகம் வாங்கிக் கொள்ளத் தயாராயில்லை. எனவே மூன்று டாலர்கள் கொடுத்து மைல்ஸ் நாய்க் குட்டியுடன் தம் வீட்டுக்குச் சென்றுவிட்டார்.

சிறிது நேரத்துக்கெல்லாம் நாய்க் குட்டியின் உண்மையான எஜமானன் அதைத் தேடிக் கொண்டு அங்கு வந்தான். அவன் கவலை அவன் முகத்தில் எழுதி ஒட்டியிருந்தது. ''உங்கள் நாய்க் குட்டியைத் தேடித் தர நான் உதவுகிறேன். நாய்க்குட்டி கிடைத்து விட்டால், எனக்கு மூன்று டாலர்கள் பரிசு தருவீர்களா?'' என்று கேட்டார் மார்க் ட்வைன்.

'சரி' என்று சம்மதித்தார் நாய்க்குட்டியின் எசமானர்.



மார்க் ட்வைன் ஜெனரல் மைல்ஸின் வீட்டுக்குச் சென்று அவர் தந்த மூன்று டாலர்களைத் திருப்பிக் கொடுத்து விட்டு நாய்க் குட்டியை மீண்டும் பெற்றுவந்தார்.

பரிசாக மூன்று டாலர்கள் அவருக்குக் கிடைத்தன.

'முதலில் பெற்ற பணம் நியாயமானதல்ல; ஆனால் இரண்டாவது பெற்ற பணம் நியாயமானது!' என்று வேடிக்கையாகக் கூறினார் மார்க் ட்வைன்.

✽ மரின் ஓஹரா என்ற மேல்நாட்டு நடிகருக்குப் பிரான்ஸின் என்ற ஒரு மகள். அவளுக்கு வயது பதினேழு. அவளுக்கு இரண்டு ஆசைகள் உண்டாம். ஒன்று, அவள் பிரபல நடிகையாக ஆக வேண்டுமாம்; இன்னொன்று அவள் பதினேழு குழந்தைகளுக்குத் தாயாக வேண்டுமாம்!



அமெரிக்க நாட்டுப் பிரபல ராஜதந்திரி டேனியல் வெப்ஸ்டர் மீது, அவருக்கு மாமிசம் விற்கும கடைக்காரர், ஒரு வழக்குத் தொடர்ந்தார். அதாவது வெப்ஸ்டர் வெகு நாட்களாக பில்களுக்குப் பணம் கொடுக்கவில்லை என்ற வழக்கு. இந்த வழக்கு நடந்து கொண்டிருக்கையிலேயே ஒரு நாள் கடைக்காரரைத் தெருவில் வெப்ஸ்டர் சந்தித்து, ''ஏன், ஐயா! உங்க ஆள் நம்ம வீட்டுக்கு வந்து நம் அன்றாடத் தேவைகளைக் கேட்டுப் போக அனுப்பவில்லை?'' என்றார்.


''இந்த வழக்கு நடக்கையில் என்னுடன் வியாபார உறவு வைத்துக்கொள்வீர்கள் என்று நினைக்கவில்லை!''

''சே! சே! அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? உங்க ஆளை அனுப்பி என் தேவைகளைக் கேட்டுப் போகச்சொல்லு ஐயா! தயவு செய்து என்னைப் பட்டினி போட்டுக் கொன்று விடாதீர்'' என்றார் வெப்ஸ்டர்.

✽ அக்பர் நாடு முழுதும் தேடி முழுச் சொம்பேறியைப் பிடித்து வரச் செய்தார். அரசப் பணியாளர்கள் இரண்டு சோம்பேறிகளைப் பிடித்து வந்தனர். பீர்பாலின் உதவியால் அவ்விரண்டு சோம்பேறிகளில் முழுச் சோம்பேறியைக் கண்டு பிடித்தார் அக்பர். அந்த முழுச்சோம்பேறிக்கு, 'முதல் தரச் சோம்பேறி!' என்று பட்டத்தைக் கொடுத்தார். அதற்குரிய பட்டத்தை வாங்க அரசர் அவனை அழைத்த போது, அந்த முதல் தரச் சோம்பேறி தான் இருந்த இடத்தை விட்டு அசையவில்லை. ''என்ன! எனக்குப் பட்டமும் பரிசுமா? கஷ்டப்பட்டு அவ்வளவு தூரம் போய் வாங்கிக் கொள்ள என்னால் முடியாது! வேண்டுமானால் பரிசு கொடுப்பவர் என் கையில் கொண்டு வந்து கொடுக்கட்டும்!'' என்றானாம்.

''அடே! முதல்தரச் சோம்பேறி அவன் என்பதை மறந்து அவனுக்குப் பரிசு கொடுக்க நினைத்தேனே!'' என்று அக்பர் சொல்லிச் சிரித்தாராம்!

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.


உங்களுடைய கேசம் ஆரோக்கியமாகவும்
பளபளப்புடனும் விளங்கும்
பிரில்க்ரீம்
தடவி நேர்த்தியாக தலையை வாரிக்கொண்டால்!
பிரில்க்ரீம் மட்டுமே
• அதிக எண்ணெய்பற்று இல்லாமலும், தாறுமாறாக உரோமம் கலையாமலும் நேர்த்தியாக தலையை வார உங்களுக்கு உதவுகிறது.
• மிகவும் லேசானது—ஒருமுறை தடவி வாரிக்கொண்டால் நாள் முழுவதும் உங்கள் தலை கலையாது அழகாக தோற்றமளிக்கும்.
• உரோமம் உதிர்ந்து வழுக்கை விழாமல் தடுக்கக்கூடிய, ஆரோக்கியமான உரோம வளர்ச்சியைத் தூண்டக்கூடிய, சேர்த்தியான கலவை வாய்ந்தது.
• உங்களுடைய கேசத்தின் இயற்கையான வண்ணத்தைப் பாதுகாக்கிறது.
BRYLCREEM
THE PERFECT HAIRDRESSING
எனவே இனிமேல் பிரில்க்ரீமையே உபயோகியுங்கள்!
உலகமுழுவதிலும் லக்ஷகணக்கான நேர்த்தியான மனிதர்கள் இதையே உபயோகிக்கிறார்கள்
B/11P/1/64 TM B

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

